லக்ஷ்மி

# அவள் தாயாகிறாள்



## உள்ளே


1. அவள் தாயாகிறாள் 5

2. மாலதி ஒரு அதிர்ச்சி 77


# அவள் தாயாகிறாள்

## 1

அவள் கிளம்புவதற்குத் தயாராக இருந்தாள். படுக்கை அறைக்குள் இருந்த 'டிரஸ்ஸிங் டேபிள்'மீது உயரமாக நின்ற கண்ணாடியில் தன்னைக் காலோடு தலைவரை ஒருமுறை பார்த்துக் கொண்டாள்.

ஐந்து வருடத்திற்கு முன், மனோகரின் மனைவியாக மணப்பந்தலுக்கு அழைத்து வரப்பட்டபோது இருந்த ஒடிசலான, உயரமான அதே தோற்றம். வசதியான வாழ்க்கை அமைந்திருந்தும் உடலில் எங்கேயும் சதைப் பிடிப்புப் போடவில்லை. மனோகரனாவது வாரத்திற்கொரு முறை, தன் உடலைச் சீராக வைத்துக் கொள்ள 'சுல்தான் டெக்னிகல் காலேஜி'ன் டென்னிஸ் முற்றத்தில் 'ஒரு செட்' ஆடிவிட்டு வருவது வழக்கம். அவளுக்கு வீட்டு வேலையோடு சரி.

''திலகா... திலகா...'' அடுத்த அறையிலிருந்து மாமியார் அழைத்தாள். ''சீக்கிரம் தயாராயிடும்மா... மனோ கால்ல கஞ்சி கொட்டிட்டு வருமே...!''

''நான் ரெடி அத்தே!'' சொல்லியபடியே அவள் மீண்டும் கண்ணாடியில் தன்னைக் கவனித்தாள்.

அவள் மாமியார் பாஞ்சாலி இரண்டு ஆண்டுகளுக்கு முன், தாய்நாட்டிற்கு விஜயம் செய்திருந்தாள். கோயில்களை எல்லாம் தரிசித்து முடித்த பின்னர், காஞ்சிபுரத்தின் நினைவாக தனக்கும், மருமகளுக்குமாக இரண்டு சேலைகள் எடுத்திருந்தாள். அந்த சிந்தூர வண்ண ஊதா பட்டுக் கரை, திலகாவுக்கு மிகவும் பிடித்தமான சேலை. 'அம்கேனி' வைத்தியநாத ஈஸ்வரர் ஆலயத்திற்கு போகும்போதெல்லாம் அவள் அதை ஆசையோடு உடுத்திக் கொண்டு போவாள்.

காமாக்ஷி குடி கொண்டிருக்கும் ஊரிலிருந்து வந்ததாயிற்றே -அந்த அன்னை, அவளையும் ஒரு அன்னையாக்க மாட்டாளா என்ற ஆதங்கம் வேறு.

அப்படியே போகுமுன் வழியில் கோவில் வாசலில் இறங்கி, வைத்தியநாதரைக் கும்பிட்டுப் போகவேணும் என்ற ஒரு தீர்மானம். அவளுக்குப் பிடித்தமான 'லாமே' சென்ட் பாட்டிலை எடுத்துத் தன் மீது 'புஸ்'ஸென்று வீசிவிட்டு வைக்குமுன் தோட்டத்தினுள் மனோகரின் 'ஆட்டோமேடிக் பென்ஸ்' நுழைந்தது.

அவர்கள் வீட்டுப் பெரிய கராஜின் ஒரு பக்கத்தில் அவள் உபயோகித்த 'வாலியண்ட்' கேட்பாரற்ற அனாதைக் குழந்தையாக நின்றது. சில நாட்களாக அவளுக்குத் தன்னுடைய காரை ஓட்டக்கூடப் பயமாகத்தானிருந்தது. டாக்டர் மில்லர் நல்ல வாக்குக் கொடுக்கும்வரை, தன்னைப் பத்திரமாகப் பாதுகாக்க விரும்பினாள். எதற்காக விஷப்பரீட்சை?

''திலகா!'' மனோகர் காரில் இருந்தபடியே குரல் கொடுத்தான். ஆபீஸ் வேலைகளை அப்படியே போட்டுவிட்டு அவளை டாக்டரிடம் அழைத்துச் செல்ல வந்திருந்தான். டாக்டர் மில்லர் அவளைக் காலை பதினொரு மணி அளவில் பார்ப்பதாக முன்கூட்டியே அறிவித்திருந்தார்.

அவரது வரவேற்பறையில் கூட்டம் வழிந்து கொண்டு இருக்கும். அந்த வெள்ளைக்காரி ரிஸப்ஷனிஸ்ட் சிணுங்கும் தொலைபேசிக்குப் பதில் அளிப்பதும், வருகிறவர்களைச் சுட்டிக்காட்டி, உட்காரச் சொல்லித் தலை அசைப்பதும், இடையே டாக்டரிடம் 'இன்டர்காமில்' பேசுவதுமாக, அவளுக்கு மூச்சுவிட இடமிருக்காது. ஒரு விநாடி தாமதமாக அறைக்குள் வந்தாலும் 'வள்' என்று எரிந்து விழுவாள். சிடுமூஞ்சி!

''வந்துட்டேங்க...'' குரல் கொடுத்தபடியே கைப்பையை எடுத்துக்கொண்டு, புடவை சரசரக்க வெளியே வந்தாள் திலகா.

''அத்தே! கதவைச் சாத்திக்கோங்க, நான் வரேன்'' சொல்லிக் கொண்டே நடந்தாள்.

மனோகர், நெற்றிமீது முத்தாக வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான். மனைவிக்காக காரின் கதவைத்



திறந்துவிட்டுக் கொண்டு பொறுமையாகக் காத்துக் கொண்டிருந்தான்...

''நீ இன்னிக்கு ரொம்ப அழகாயிருக்கியே'' அவள் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினான்.

''தாங்க்யூ'' என்றபடி அவள் 'லாமே' மணம் அவன் முகத்தில் மோதக் காரில் ஏறிக்கொண்டாள். அவளது தங்க நிறத்திற்கு அந்தப் புடவை பொருத்தமாக இருப்பதுபோல் பட்டது. தன் மனைவி ஓர் அழகி என்று உள்ளூரக் கர்வம் அவனுக்கு.

சரளமாகத் தமிழ் பேசப் படிக்கத் தெரிந்தவள் திலகா. கோவில் திருக்கூடத்தில் முன் வரிசையில் அவள் அமர்ந்து தேவாரம், திருவாசகம் பாடும்போது கேட்டுப் பூரித்துப் போய்விடுவது அவன் வழக்கம்.

'திலகா, என்னா கணக்கா பாடுதுங்க! இந்தியாவில் இருந்து வந்த பாட்டுக்காரி போலல்லவா பாடுது...!' எவரேனும், கோவிலில் புகழ்ந்துவிட்டால் பெருமை தாங்காது அவனுக்கு.

'ஓரியண்ட் ஹாலி'ல் அவர்களது திருமணம் நடந்தபோது, அவர்களை வாழ்த்த வந்த பெரியவர்களில் ஒருவர், 'இவர்கள் இருவரும் ஒருவரையொருவர், விரும்பிக் கல்யாணம் செய்து கொள்ளும் ஜோடியர். அத்துடன் தோற்றத்திலும் பொருத்தமான ஜோடியர்' எனச் சொல்லி வாழ்த்திவிட்டுப் போனார்.

''பெண்ணும், மாப்பிள்ளையும் என்னா கணக்கா இருக்காங்க!'' வந்திருந்தோர் சொல்லிச் சொல்லி வாயூறிப் போனார்கள்.

திருமணமாகி, கோவிலுக்குச் சென்று அர்ச்சனையை முடித்துக் கொண்டு அவர்கள் வீடு வந்தபோது, பாஞ்சாலி தூபக் கலசத்தில் நெருப்பைப் பற்ற வைத்து, பிடி உப்பும், மிளகாயும் எடுத்துச் சுற்றிப் போட்டாள். ஆனால், எந்தப்பாவி வைத்த கண்ணோ...! அந்த அழகான காதல் ஜோடிக்கு கல்யாணமாகி ஆண்டுகள் ஐந்தாகியும் குழந்தைப்பேறு இன்றி வாழ்க்கை வெறுமையாகிவிட்டிருந்தது.

திலகா மெட்ரிக் வரை, 'டர்பன்' பெண்கள் பள்ளியில் படித்தவள்தான். 'ஆப்பிரிக்கன்' மொழியிலும் ஆங்கிலத்திலும் பரிசு பெற்ற மாணவி. சிறுவயதிலேயே 'ஸ்டாங்கர்' கோவிலில்

அர்ச்சகராக இருந்த தாத்தாவோடு வாழ்ந்த பயன் 'ஸுலு' மொழியைத் தங்குதடையின்றிப் பேசுவாள். தமிழை எழுதவும், படிக்கவும் கற்றுக் கொண்டாள். வீட்டைக் கவனிப்பதிலும், சமைப்பதிலும் அவளுக்கு நிகர் அவளே என்ற நிலையில் வாழ்ந்த ஒரு இலட்சியக் குடும்பத்தலைவி.

'ஓவர் போர்ட்'டிலே, வின்கா அவென்யூவில்தான் அவர்களது வீடு இருந்தது. வக்கீலுக்குப் படித்துப் பட்டம் பெற்ற பின்னர் மனோகர் எஸ்டேட் ஏஜண்டாக ஆபிஸ் வைத்துக் கொண்டிருந்தான். 'குரூப் ஏரியா' என்ற சட்டம் வந்தாலும் வந்தது, சில இந்தியர்கள் 'குபீர்' பணக்காரர் ஆகிவிட்டிருந்தனர். சிறுவயதில் தந்தையை இழந்து விட்டிருந்த மனோகரும், அந்தக் கூட்டத்தில் ஒருவன். ஏற்கெனவே வீடு விற்றல், வாங்கலில் கணிசமாக வளரத் துவங்கியவனுக்கு, எக்கச்சக்கமானதொரு அதிர்ஷ்டம், அவன் பாட்டன், இந்தியர் மார்க்கெட்டில் காய்கறிகடை வைத்திருந்தார். சிக்கனமாக வாழ்ந்து மிச்சம் பிடித்த பணத்தில் 'ஓவர் போர்ட்' பகுதியில் டர்பனில் சில ஏக்கர் பூமியை அந்தக் காலத்தில் குறைந்த விலையில் வாங்கிப் போட்டிருந்தார்.

குப்பை கொட்டும் குழியாக இருந்த அந்த பூமிக்குத் திடீர் யோகம். வெள்ளைக்காரர், இந்தியர், கலப்பு வர்க்கம், ஆப்ரிக்கர் என்ற நான்கு இனத்தவருக்கும் ஊரை நான்காகப் பிளந்து ஒதுக்கிவிட்டிருந்தது 'குரூப் ஏரியா' எனும் சட்டம். சட்டம் அமுலுக்கு வந்தபின், தங்களது கடை, வீடு ஆகிய பகுதிகள் வெள்ளைக்காரர்களுக்கு ஒதுக்கப்பட்டு விட்டதே என அலறினர் பல இந்தியர். அதனால், ஏழையானவர்கள் பலர். ஆனாலும் கையில் கனமாகக் காசை வைத்திருந்த சில முதலாளி வர்க்கத்தினர் இந்தியருக்கென ஒதுக்கப்பட்ட 'ஓவர் போர்ட்'டில் வந்து குவிந்தனர். குப்பைமேடான ஓவர் போர்ட் குபேரப் பட்டணமாகியது. எஸ்டேட் ஏஜண்டுகள் பணத்தைக் குவித்தனர்.

அந்தக் காலத்தில் அசட்டையாக வாங்கிய நிலம், இப்போது பொன்னாக குவித்தது.. அந்த வகையில் பணக்காரனாகி விட்டான் மனோகரன் தம்பிரான். ஐந்து ஏக்கர் பூமியை ஒரு 'ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்'ஸிற்கு விற்றுவிட்டு, ஒரே நாளில் பல லட்சங்களுக்கு அதிபதியாகி விட்டிருந்தான். அத்துடன் ஏற்கெனவே வின்கா



அவென்யூவில் இருந்த தகரக் கூரை வீட்டை இடித்துத் தள்ளிப் புதிதாகப் பங்களா கட்டிக் கொண்டு விட்டான்.

ஸ்பானிஷ் ஸ்டைல் வீடு, தோட்டம், கார்கள் என வாழ்வில் உயர் மட்டத்தில் ஓஹோவென்று வாழ ஆரம்பித்து விட்டான். திலகா வந்தாள், அவனது தொழிலும் பெருகியது. ஊரிலுள்ள பொதுநல ஸ்தாபனங்கள் அனைத்திலும் அவனுக்குத் தொடர்பு இருந்தது. தலைவர், செயலாளர், பொருளாளர் எனப் பல பதவிகள். கோவிலில் அவர்கள் குடும்பத்திற்குத்தான் முதல் மரியாதை. அவனது தந்தை திருக்கூட்டத்தின் தலைவராக இருந்தவர். அவனும், கோவிலில் முக்கிய அங்கத்தினர்களில் ஒருவன். விசேஷங்களின்போது அவர்களது உபயம்தான் முதலாவதாக ஏற்றுக் கொள்ளப்படும் என்ற பெருமை, இத்தனையும் இருந்தன. ஆனால் ஆஸ்தியைப் பகிர்ந்து அனுபவிக்க, ஆசையை உணர்ந்து மகிழ்விக்க, ஒரு மகனோ, மகளோ இல்லையே என்ற குறை திலகாவின் உள்ளத்தை நெருடிக் கொண்டுதான் இருந்தது.

'க்வாரி ரோடு' வழியாக வேகமாக வண்டியைச் செலுத்திக் கொண்டு வந்தான் அவன். ஐந்து நிமிஷத்தில் நகரத்தின் மத்தியப் பகுதியை அடைந்து விடலாம். டாக்டரின் பரிசோதனை அறை அங்கே 'ஸ்மித் ஸ்ட்ரீட்'டில் பெரியதொரு கட்டிடத்தின் உச்சிப் பகுதியில் இருந்தது. ஆபீஸ் நேரம். போக்குவரத்து நெரிசல். காரைத் தெருவிலே நிறுத்திக் கொண்டு அவளுக்காகக் காத்திருக்க முடியாது. கழுகுபோல் போலீஸ் எங்கிருந்தோ வந்து விடும். 'இரண்டு நிமிஷம்தான் ஆபீஸர்' என்று கெஞ்சினாலும் விடமாட்டான். கையில் அபராத நோட்டீஸை எழுதிக் கொடுத்துவிட்டுப் போய் விடுவான். அதனால் திலகாவை, அங்கே இறக்கிவிட்டுத் தன் ஆபிஸிற்குப் போய், மாதவாடகைக்கு அவன் எடுத்திருக்கும் நிறுத்துமிடத்தில் காரை நிறுத்தி வைப்பான். வைத்தியப் பரிசோதனைக்குப் பின் அவள் கணவனைத் தொலைபேசியில் கூப்பிட்டு விட்டுக் கீழே வந்து காத்திருந்தால், அவன் மீண்டும் வந்து கூட்டிப் போவான். இது ஏற்பாடு.

அம்கேனி சாலைக்குள் கார் புகுந்தபோது அவள், கணவன் கையை மெல்லத் தொட்டாள். ''ஒரு நிமிஷம் இங்கு நிறுத்துங்கோ,

சாமியைக் கையெடுத்துக் கும்பிட்டுட்டு வந்திடறேன்.''

காரிலிருந்து இறங்கி, செருப்புகளை ஒரு ஓரமாக வைத்து விட்டுக் கோயிலுக்குள் விரைந்தாள். யாரோ புதிதாகக் காரை வாங்கியிருந்தவர், காரை வழியில் நிறுத்தி இருந்தார். கோவில் பூசாரி, பரங்கிக்காய்மீது சூடத்தை ஏற்றி வைத்துவிட்டு, அத்துடன் காரை வலம் வந்து கொண்டிருந்தார். அவளைக் கண்டதும் லேசாக முறுவலித்தார்.

''தீபாராதனை செய்யணுமா? கொஞ்சம் இருங்க.''

''இல்லீங்க சும்மா, கொஞ்சம் துன்னூறு எடுத்திட்டுப் போக வந்தேன்'' அவள் சொல்லிக்கொண்டே சந்நிதி ஹாலுக்குள் நுழைந்தாள். உள்ளங்கையில் அடக்கியிருந்த சில்லறையை உண்டியலில் போட்டாள். மடலிலிருந்த விபூதியைக் கையில் அள்ளிக் கொண்டு புறப்பட்டாள். தனது நெற்றியில் சிறிது வைத்துக்கொண்டு அவசரமாகக் காரில் ஏறி உட்கார்ந்தவளைக் குறும்புடன் பார்த்தான் அவன்.

''என்ன வரம் கேட்டே? பெண்ணா - ஆணா?''

''உங்களைப் போல ஒரு ஆண் முதலில். பிறகு என்னைப் போல ஒரு பெண். ரெண்டு போதுங்க'' சிரித்தபடி கையில் இருந்த விபூதியை அவன் நெற்றியில் வைத்துக் கலைந்திருந்த அவனது முடியைக் கோதினாள்.

''இன்னும் பதினைஞ்சு நிமிஷம்தான் இருக்கு. அந்தப் 'பறக்கி' உம்மேலே எரிஞ்சு விழுவா — கிளம்பலாமா — '' கேட்டபடி காரைக் கிளப்பினான்.

டாக்டர் ஜார்ஜ் மில்லர் அண்ட் பார்ட்னரின் பரிசோதனை அறை 'தங்கக் கோபுரம்' என்ற அந்தக் கட்டிடத்தின் இருபத்திரண்டாவது மாடியில் இருந்தது. அதை அடையப் பல 'லிப்டு'கள் இருந்தன.

வேகமாக வந்து வாயைத் திறந்த ஒரு 'லிப்டில்' அவள் நுழைந்தாள். உள்ளே ஒரே கூட்டம். ஒருவர் மேல் ஒருவர் இடித்துக் கொண்டு எல்லாருக்குமே அவசரம். அதை இயக்கியவன் ஒரு வெள்ளைக்காரன். ஒரு காலத்தில் வெள்ளைக்காரர்களுக்கென



'லிப்டு'கள் தனியாக ஒதுக்கப்பட்டிருந்தன. அந்த நாள் போய் இப்போது எல்லா நிறத்தவர்களும் ஒட்டு மொத்தமாக ஒரே லிப்டில் போகிறார்களே என்ற ஆத்திரம் அவனுக்கு.

இந்தியப் பெண்தான் என்றாலும் அவனைப் பொறுத்தவரை, அவள் கறுப்பர் கூட்டத்தைச் சேர்ந்தவள். 'எங்கே போகிறாய்?' என அவளிடம் கேட்பது அவனுக்குக் கௌரவக் குறைவு. திலகாவின் முகத்தைக் கோபத்தோடு வெறித்தான். கடை, தெரு, லிப்ட், பஸ், சமுத்திரக்கரை என்று எங்கும் இந்த இனவேற்றுமையை அனுபவித்துப் பழகி உளுத்துப்போன உள்ளம் அவளுடையது. அதை அவமானமாக எடுத்துக் கொள்ளக்கூட மரத்துப் போன உணர்வுகள்.

''இருபத்திரண்டாம் மாடி'' என மரியாதையாகப் பதிலளித்து விட்டுக் கூட்டத்தில் மறைந்துவிட்டாள். ஆஜானுபாகுவாக நின்ற ஒரு வெள்ளைக்காரன், ஷேவிங் லோஷன் அபிஷேகமே செய்தவன்போல் 'லிப்ட்' முழுவதும் ஒரே வாசனை! 'இந்த இந்தியப்பெண் அழகாக இருக்கிறாளே' என்றதொரு பார்வை. அவள் கழுத்தின்மீது நெருப்பு மூச்சு விட்டுக் கொண்டு நெருங்கி நின்றான். சில நிமிஷங்கள்தான் என்றாலும், அவளுக்கு நரக வேதனையாக இருந்தது. அவனது முகத்தில் வழிந்த ஒரு சொட்டு வியர்வை அவள் கைமீது விழுந்தபோது தன் பெண்மையே அழிந்துவிட்டது போன்ற பதற்றம்.

'படுவா ராஸ்கல்! இத்தனை கிட்ட இடிச்சுகிட்டு நிக்கணுமா இந்தியர்னா அவ்வளவு மட்டம்!' தாடைகள் இறுக, சற்று நகர்ந்து நின்றாள்.

'சர்ர்ர்' — ரென்று ஊர்ந்த 'லிப்ட்' அங்கங்கே மனிதர்களைத் தள்ளியும், ஈர்த்தும் சென்று இருபத்திரண்டாம் மாடியை அடைந்ததும் எல்லோரையும் வெளியே கொட்டியது. நடைவழியில் ஒரே மூச்சாக நடந்து, அவள் மில்லரின் சர்ஜரியை அடைந்தாள்.

கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு நின்ற அவளை அந்த ரிஸப்ஷன் சிடுமூஞ்சி நிமிர்ந்து பார்த்தாள்.

''ஓ மிஸஸ் தம்பிரான்! சரியான நேரத்திற்கு வந்து விட்டாய். இப்படி இந்தப் பக்கம் வருகிறாயா? டாக்டர் உன்னைத் தம் அறையில் பார்க்க விரும்புகிறார்'' அவள் கையில் ஒரு கனமான 'பைலை'த் தூக்கிக் கொடுத்து நெட்டித் தள்ளாத குறையாக இடது பக்கம் இருந்த

பெரிய அறைக்குள் அனுப்பினாள்.

டாக்டர் மில்லர் தமது அறையில் 'ஏ.ஸி.'யின் கதகதப்பிலே சுழல் நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். பல ஆண்டுகளாக அவர்கள் குடும்பத்து வைத்தியர் அவர்.

கன்னத்திலிருந்து தொங்கி வழிந்த சதையும், கண்களைச் சுற்றிலும் சுருக்கங்களுமாகத் தொள தொளவென்றத் தொண்டுக் கிழவர். எழுபத்தெட்டை எட்டிப் பிடித்த போதிலும் இன்னமும் அதே சுறுசுறுப்பு. கண்ணாடி வழியே கூர்மையாகப் பார்த்துத் தெளியும் அறிவு.

சாதாரணமாக ரிஸப்ஷனிஸ்ட், பரிசோதனை அறைக்குத் தான் அனுப்பியிருக்க வேண்டும் அவளை. ஏன் இங்கே...? திலகாவின் மனத்திலே ஒரு உறுத்தல்.

''உட்காருங்கள் மிஸஸ் தம்பிரான். இந்தப் புடவை உங்களுக்கு மிக நேர்த்தியாக இருக்கிறது. நீங்கள் ஒரு அழகான பெண்மணி'' பல புகழ் உரைகளுடன் அவளை உட்கார உபசரித்த வைத்தியர், ஒரு வகையில் குடும்ப நண்பர் என்ற உரிமை உடையவர்.

முகம் சிவந்தவள், ''தாங்க் யூ'' என்றாள். இந்தப் பூர்வபீடிகையெல்லாம் அவருக்குக் கைவந்த கலையென்பது அவளுக்குத் தெரியும். 'எத்தகைய வெடிகுண்டைத் தூக்கிப் போடப் போகிறாரோ?' என்ற கவலை அவளுக்கு.

## 2

கீழே இறங்கி வந்தாள். ஒரு பெரிய மாடிக் கட்டிடத்தைச் சுற்றி மெல்ல நடந்து அடுத்தபடியாக நேர்க்கோடாக ஓடிய வெஸ்ட் ஸ்ட்ரீட் என்ற தெருவில் கணவன் குறிப்பிட்டிருந்த அந்த பெரிய சூப்பர் மார்க்கெட்டின் வாயிலில் வந்து நின்றாள்.

டர்பனில் அப்போது குளிர் காலத்தின் ஆரம்பம்; பனிச்சென்று வீசிய சூரியனின் வெப்பம்; குளிரை வாரிக் கொண்டு வந்து மோதிய



கடற்காற்றோடு கரைந்துபோய்க் கொண்டிருந்தது.

பச்சைப்பிள்ளை முதுகை வருடாரப்போல இந்த வெய்யில்லே நாள் முழுவதும் படுத்துக்கிடக்கலாம் போல என்ன சொகமா இருக்கு? வீட்டுத் தோட்டத்தில் வெல்வெட் பாயாக நறுக்கி விடப்பட்டிருக்கும் புல் தரை மீது ஓய்வு நாளின்போது மனோகரன் சோம்பலுடன் ஜமுக்காலத்தின் மீது படுத்துப் புரண்டு கொண்டிருப்பது வழக்கம்.

எதிர் வீட்டு வாண்டுகள் — பக்கத்து வீட்டு சிட்டுகள் எல்லாம் அவனை வந்து சூழ்ந்து கொண்டுவிடும்.

'அங்கிள் அந்த சிங்கக் கதை சொல்லுங்க அங்கிள்...' மடிமீது ஒரு சிறுவன் ஏறி உட்கார்ந்து கொண்டு விடுவான்.

பின்னால் வந்து தோளைத் தழுவிக் கட்டிக் கொண்டு 'அங்கிள் எனக்கு அந்த முதலைக் கதைதான் வேணும்...' கொஞ்சுவாள் பட்டுப்பூச்சி போன்றதொரு குட்டிப்பெண்.

''திலகா! இதுகளுக்கெல்லாம் திங்கக் கொஞ்சம் 'கேக்'கும், குடிக்கச் சூடா மைலோவும் எடுத்துட்டு வா... சீக்கிரம்!'' அவன் தோட்டத்திலிருந்தபடியே குரல் கொடுப்பான்.

குழந்தைகள் என்றால் அவளுக்குக் கொள்ளை ஆசை. கணவனது நினைவில் கண்கள் கலங்க — நெஞ்சு துயரத்தில் விரிய — கால் கடுக்க அவள் வரிசையாக ஊர்ந்து கொண்டு இருந்த வாகனங்களை உன்னிப்பாகப் பார்த்தபடி நின்றாள்.

தெருவின் ஆரம்பத்தில் அவனது கார், ஒரு வளைவில் இருந்து திரும்பி உள்ளே புகுவதைக் கண்டுகொண்டு விட்டாள்.

அவள் நெஞ்சு பக்பக்கென்று அடித்துக் கொண்டது. அவளையும்மீறி முத்தாகக் கன்னத்திலே உருண்ட கண்ணீரைச் சட்டென்று விரலால் தட்டிவிட்டுக் கொண்டாள்.

முன்னால் கார்கள் — பின்னால் கார்கள் என்ற அணைப்பு வரிசையில் மெல்ல ஓட்டிக் கொண்டு வந்த மனோகரன், போக்குவரத்துத் தேக்கத்தை உண்டாக்குமளவு அதிக நேரம் நிற்கமுடியாது. அவளைக் கண்டதுமே அவன் இடது கையால் சட்டென்று கதவை முன்னே திறந்தான். ஒரே கணம் நின்ற

வண்டிக்குள் அவளும் சட்டென்று ஏறி அமர்ந்து கதவைச் சாத்திக் கொண்டாள். நெரிசலாக இருந்த போக்குவரத்தைத் தாண்டி அவன் கடற்கரை ஓரமாக வண்டியைச் செலுத்தியபோதுதான் பேசினான்.

''டாக்டர் என்ன சொன்னார்...?'' கேட்டுக்கொண்டே ஓரத்தில் கார்களுக்கு என்று கோடிட்ட ஒரு பகுதியில் வண்டியை நிறுத்தினான்.

துறைமுகத்தில் இடமில்லாது, நடுக்கடலில் நங்கூரம் பாய்ச்சிக் கொண்டு வரிசையாக நின்ற கப்பல்களை வெறித்தபடி இருந்தாள் அவள்.

''திலகா! டாக்டர் என்ன சொன்னார்...?'' மெல்ல அவளது தோளைத் தொட்டுத் தன் அருகே இழுத்துக் கொண்டபோது, அவள் துயரம் விம்மல்களாக வெடித்தன.

''மனோ...! என்ன சொல்வதுன்னு தெரியலை. நான் ரொம்பத் துரதிருஷ்டம் பிடிச்சவ'' விக்கினாள் அவள்.

சபாரி ஸூட்டின் பைக்குள்ளே கையைவிட்டுச் சுத்தமாக மடித்து அவளுக்காக வைத்திருந்த கைக்குட்டையை எடுத்தான்.

அருவியாகக் கன்னங்களில் வழிந்த அவளது கண்ணீரை மெல்லத் துடைத்து விட்டான்.

''திலகா — மை ஸ்வீட்டி... சொல்லும்மா கண்ணு... டாக்டர் என்ன சொன்னார்...?''

அவனது மார்பிலே தலையைச் சாய்த்துக்கொண்ட திலகாவின் அழுகை இன்னமும் அடங்கவில்லை.

''நான் கர்ப்பமாக இல்லையாம், குழந்தை வேணுங்கற ஆசையில் இயற்கை நியதி தாமதமாகி விட்டதாம். எனக்கு குழந்தை பிறக்கவே வாய்ப்பில்லாதபடி உடம்பில் கோளாறு இருக்கிறதாம்'' — இப்போது அவள் வாய்விட்டுக் குலுங்கி அழுதாள்.

''நீ நல்லா அவரிடம் கேட்டு என்ன கோளாறுன்னு மனம்விட்டுப் பேசி தெரிஞ்சிக்கிட்டிருக்கலாமே? அவர் நம்ப குடும்ப டாக்டர்தானே...? உனக்குப் பேச என்ன பயம்...?'' —மறுபடியும் கைக்குட்டையால் அவளது கண்ணீரைத் துடைத்து, கலைந்துவிட்ட நெற்றிக் கூந்தலை மெல்ல ஒதுக்கி விட்டான்.

''ஏதோ பிறவிக் கோளாறாம்... அதை ஒண்ணும் செய்ய முடியாதாம்.''



''நான்சென்ஸ், இப்போதெல்லாம் அறுவை சிகிச்சையிலே பல அற்புதங்கள் செய்யறாங்க... உடம்பு உறுப்புகளையெல்லாம் மாத்தி வச்சிடறாங்க... நம்ப கிரீஸ், ஹார்ட் டிரான்ஸ்பிளாண்ட் பண்ணி வெற்றி காணலையா? ஏதாவது மார்க்கம் இல்லாமலா போகும்?''

''நான் நல்லா கேட்டேன்... டாக்டர் முடிவா சொல்லிட்டார். எந்த விதமான சிகிச்சையும் கிடையாதாம் — ஏங்க, குழந்தை இல்லேன்னு போயிட்டா... உங்களுக்கு நாளாவட்டத்திலே என் மேலே பிடிப்பு... ஆசையெல்லாம் குறைஞ்சு போயிடுமா...? என்னோட வாழற வாழ்க்கை உங்களுக்கு அலுத்துப் போயிடுமா... சொல்லுங்க...'' அவனது தோளைப் பற்றிக் கொண்டு தழுதழுத்தாள்.

''நீ என்ன கேட்க நினைக்கிறேன்னு எனக்கு நல்லா புரியுது. குழந்தை பிறக்கலைன்னு உன்னை நான் விவாகரத்துப் பண்ணிட்டு வேறே யாரையாவது கட்டிப்பேன்னுதானே கவலைப்படறே? திலகா... எங்கே உன் கையைக் காட்டு'' என்று கூறி அவளது வலது கையைப் பற்றிக் கொண்டான்.

''சத்தியமாகச் சொல்றேன். உன்னைத் தவிர இந்த மனசிலே யாருக்குமே இடம் கிடையாது. குழந்தை இல்லேங்கிற பிரச்சனையெல்லாம் நம்மைப் பிரித்துவிட முடியாது. ஒண்ணே ஒண்ணுதான் நம்மைப் பிரிக்க முடியும். அதுதான் சாவு.''

''ஏங்க அப்படி பேசறீங்க... கேட்கக்கூட எனக்குப் பயமாக இருக்கு. நீங்க இல்லாம என்னால இந்த உலகத்திலே வாழ முடியாதுங்க... 'நீங்கதான் நான், நான்தான் நீங்கன்னு' மனசை அப்படி ஒண்ணாக்கி வச்சுக்கிட்டேனுங்க...'' மறுபடி அவள் கண்ணீர் உகுத்தாள்.

''திலகா! நீ அப்படி நினைச்சா... இப்படி அழமாட்டே... என்னைப் பார்! இந்தச் செதியைக் கேட்டு நான் துளிக்கூட அதிர்ச்சியடையலே. அவ்வளவுதான் நம்ம குடுப்பினைன்னு அதைக் கேட்ட மறுவினாடியே மனசிலிருந்து ஒதுக்கிட்டேன்... வா... வீட்டுக்குப் போகலாம். ஆபீஸிலே எனக்கு ரொம்ப வேலை கிடக்கு... அங்கே அம்மா கிட்டே நீ எதுவும் பேசவேணாம். நான் சொல்லிக்கிறேன்.''

காரைக் கிளப்பி ஓவர் போர்ட் செல்லும் திசைக்குத் திருப்பினான். தோட்டத்திற்குள் காரஜ் அருகே கார் வந்து நின்றதும் அவள் இறங்கினாள். கதவைத் திறந்த மாமியார் பாஞ்சாலியைத் தாண்டிக் கொண்டு உள்ளே விரைந்தாள். படுக்கை அறைக்குள் சென்று வேகமாகப் புடவைகளைக் களைந்துவிட்டுக் கைகால்களைக் கழுவிக் கொண்டாள். டிரஸ்ஸிங் கவுனை உள் ஆடை மீது தரித்துக் கொண்டு தொப்பென்று படுக்கை மீது விழுந்தாள்.

அவளால் நம்ப முடியவில்லை...'டாக்டர் சொன்னது பொய்யாகப் போகக் கூடாதா...' கட்டுப்படுத்தமுடியாது தலையணை நனைய அவள் அழுதுகொண்டிருந்தாள்.

சிறிது பொழுதில் கார் வெளியே புறப்படும் சப்தம் கேட்டது. அறைக்குள்ளே தலையை விட்டு எட்டிப் பார்த்த பாஞ்சாலிக்கு மகன் உண்மையைச் சொல்லிவிட்டிருந்தான். படுக்கையில் துவண்டுகிடந்த திலகாவிடம் அவள் குத்திக் குதறி எதையும் கேட்க விரும்பவில்லை. ஆனாலும் மனம் கனத்தது.

''இத்தனைப் பணம் காசு இருக்கு... இதை அனுபவிக்க வீட்டில் ஒரு பிள்ளை இருக்காதாமே..? உம்...'' பெருமூச்செறிந்தாள் அவள்.

கார்களை நிறுத்துமிடத்தில் தன் பென்சை விட்டுவிட்டு, மெல்ல நடந்து தன் ஆபீஸ் அறைக்குள் வந்தான். நகரத்தில் இந்தியர்கள் பெருவாரியாகக் கடைகளும், அலுவலகங்களும், தொழிற்சாலைகளும் வைத்து நடத்தும் கிரே ஸ்ட்ரீட் காம்ப்ளெக்ஸில்தான் அவனது அலுவலகம் — அந்த மாடிக் கட்டிடத்தில் இரண்டாவது தளத்தில் இருந்தது. டெலிபோன் ஆப்பரேட்டர், கணக்கர்கள், உதவி ஏஜன்ட் என்று அவனுடன் ஆறு பேர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர்.

வீட்டை விற்கவோ, வாங்கவோ... எண்ணமிட்டு உள்ளே நுழைகிறவர்கள் மலைத்து நிற்குமளவு வரவேற்பறையைச் சிங்காரித்து வைத்திருந்தான். 'திறமையானவன் போலிருக்கே' என்ற எண்ணம் ஏற்படும்படி உடனடியாக வந்தவர்களைக் கவனிக்க ரிஸப்ஷனிஸ்ட் ஓடோடியும் வந்து விடுவாள். நகரத்தின் வரைபடம்,



எந்த இடத்தில் எந்த வீடு, என்ன விலைக்குப் போக இருக்கிறது என்ற விவரங்கள் கொண்ட புத்தகம் முதலியன வரவேற்பறை மேஜைமீது பார்வையாளர்கள் கண்களில் படும்படி கிடக்கும். மொத்தத்தில் தொழிலில் கெட்டிக்காரன்- திறமைசாலி! முன்னுக்கு வரவேண்டும் என்ற அவா உந்திக் கொண்டேயிருக்கும் மனம்; சுறுசுறுப்பாகப் பரபரப்புடன் இயங்கும் தன்மை.

கால் தொய்ந்து நடக்க முடியாதவன்போல் - உள்ளே உட்கார்ந்து கொண்டான்.

ஆபீஸில் அந்த ஆப்பிரிக்க வேலையாள் தவிர - அப்போது யாரும் இருக்கவில்லை. அது பகல் உணவு நேரம்.

''வைன ஐ ஈட்ல ஸ்காப்...? (நீ சாப்பிடலியா...?) மீன நிக லோ மாலி... ஆம்பா டீ ரூம்.. (நான் பணம் தருகிறேன். டீக்கடைக்குப் போ)'' என்று கூறிக்கொண்டு பர்ஸிலிருந்து ஐம்பது செண்ட் காசுகளை மேஜைமீது எடுத்து வைத்தான்.

''தாங்க்யூ பாஸ்'' வலது கையைத் தூக்கி நன்றி தெரிவித்துவிட்டு அந்த ஆப்பிரிக்கப் பையன் பணத்தை எடுத்துக் கொண்டு மகிழ்ச்சியுடன் கீழே விரைந்தான். இப்போது ஆபிஸில் அவன் மட்டுமே இருந்தான். கையைக் கழுவிக் கொண்டு சாப்பிட மேஜையருகே உட்கார்ந்தான். பசிக்கவில்லை. ஆனாலும் எதையாவது கடித்து விழுங்கிக் கொண்டிருக்கவேண்டும் போன்றதொரு இனம் புரியா குழப்பம்!

திலகா காலையில் கட்டிக் கொடுத்தனுப்பிய லஞ்ச் மேஜைமீது ஒருபக்கம் பிரம்புக் கூடைக்குள் இருந்தது. திலகாவின் காரியங்கள் கச்சிதமாகவும், சுத்தமாகவும் இருக்கும். சமையலறையையும் வீட்டையும் துடைத்து- சுவரும் தரையும் பளபளக்கக் கோயிலைப்போல வைத்துக் கொண்டிருப்பாள். விடியற் காலையில் அவனுக்கு முன்னதாகவே எழுந்துவிடுவாள். உடனடியாகக் குளித்துவிட்டுப் பெட்டி போட்ட ரவிக்கையும் புடவையும் அணிந்து கொண்டு பளிச்சென்று நெற்றியில் குங்குமத்துடன் வீட்டின் பின் தாழ்வாரத்திற்குப் போவாள். அவளுக்காகவே அவன் அங்கே ஒரு சிறு தடுப்புப் போட்டு ஒரு பூஜையறையைக் கட்டிக் கொடுத்திருந்தான். தோட்டத்திலே அவளே பயிர் செய்து காத்து வந்த மாரி கோல்ட்

பூக்களைப் பறித்துவந்து காமாகூஷி விளக்கைச் சுற்றி வைத்து -அலங்கரித்துவிட்டு விளக்கேற்றுவாள். ஊதுவத்தியைக் கொளுத்தி வைத்துவிட்டுச் சுவரிலிருந்த கடவுளரின் படங்களுக்குக் கீழே விழுந்து கும்பிட்டுவிட்டுதான் சமையலறைக்கு வருவாள். அவன் எழுந்து குளித்து உடுத்திக் கொண்டு கிளம்புமுன், சாப்பாட்டு அறை மேஜைமீது சுத்தமான விரிப்பைப் போட்டு வைப்பாள். அதில் அவனது தட்டுகள், கத்தி, முள், ரொட்டி, வெண்ணெய் எல்லாம் தயாராக இருக்கும். காலை ஏழரை மணிக்கு அவன் கிளம்பியாக வேண்டும். எல்லா அலுவலகங்களும் காலை எட்டு மணி அளவில் இயங்கத் தொடங்கிவிடும். காரை, கார் ஷெட்டிலிருந்து எடுக்குமுன் அவனது ஃபிரிப்கேஸ் பகல் உணவு கொண்ட அந்தப் பிரம்புக் கூடை எல்லாவற்றையும் கொண்டுவந்து, பின் ஆசனத்தில் தயாராக வைத்திருப்பாள். அவனது தேவைகளைக் கவனித்துச் செய்வதில் எத்தனை ஆர்வம். அவளுக்குத்தான் எத்தனை சுறுசுறுப்பு!

அந்தப் பிரம்புக் கூடையை அவள் ஒரு நாள் நேட்டால் இந்தியப் பார்வையற்றவர் சங்கம் நடத்திய விற்பனை விழாவில்தான் வாங்கினாள். 'என்ன அழகா இறுக்கமா பின்னியிருக்கு பாத்தீங்களா - பார்வையில்லாத ஒரு மனிதனின் வேலை இது... எங்க இதை நான் வாங்கட்டுமா...?' என்றாள். 'வாங்கிக்கோ திலகா - நீ ஆசைப்பட்டதுக்கு நான் எப்பவாவது மறுப்பு சொல்லியிருக்கேனா?'

''ஆசையால இதை வாங்கலை. துரதிர்ஷ்டவசமா பார்வையை இழந்துட்ட ஒரு ஏழை பிழைக்க வழி தேடிக் கொள்ளக் கூடை முடைஞ்சு கொடுக்கிறானே. அந்த ஆளை நாம் உற்சாகப்படுத்தி... மேலும் நல்லா உழைக்க ஊக்கம் கொடுக்கணும். அதுக்காகத்தான் இதை வாங்கப் பிரியப்படறேன்...''

'மூணு ராண்டுதானே... வாங்கிக்கோ...' ஒப்புதல் கொடுத்தான்.

'அப்படியே அங்கே வச்சிருக்கிற டொனேஷன் பெட்டியிலே நன்கொடையாக ஐம்பது ராண்ட் போட்டுடுங்க... பார்வையை வச்சிட்டு நாம் வாழ்க்கையிலே எத்தனைக் குறைபட்டுக்கிறோம். பாவம் இவர்கள்ளாம் பார்வையில்லாட்டியும், சிரிச்சுப் பேசுக்கிட்டு எத்தனை உற்சாகமா இருக்காங்க. பார்த்தீங்களா...? இந்த உண்மையை நாம் கத்துக்கிறத்துக்கு அந்த ஐம்பது ராண்ட் பீஸ்...



போட்டுடுங்கோ உண்டியிலே' அவள் கன்னம் குழிய முத்துப் பல் காட்டிச் சிரித்தாள்.

'உனக்கு ரொம்ப தாராள மனசு திலகா -' நெஞ்சம் நெகிழ்ந்து போய்விட்டான் அவன் அன்று.

கூடையை வாங்கிக் கொண்டு வெளியே வந்தவள் அவன் பக்கம் திரும்பினாள். ''இன்னொண்ணு சொன்னா கோவிச்சுப்பீங்களா?'' என்றாள்.

'சொல்லு. மனசைவிட்டுப் பேச முடியாத ரகசியம் நமக்குள் ஏது?-' கொஞ்சலாகக் கேட்டான்.

'என் சிநேகிதி மிஸஸ் லீலாசிங்னு லேடீஸ் ஸ்மித்திலே இருக்கிறாளே, ஞாபகம் இருக்கா...?'

''ஆமாம்; அவளுக்கென்ன ?''

'அவள் மகனுக்கு நெருப்பு விபத்திலே கண் பார்வை போயிட்டதில்லையா? ஜோஹனஸ்பர்க் மருத்துவமனையில் பிரபல கண் வைத்தியர் ஒருத்தர் அவனுக்கு கார்னியா கிராப்ட் செய்யப் போறாராம் - வெற்றி கிடைக்கணும்னு சாமியை வேண்டிக்கோன்னு போன்ல காலையிலே பேசினாள். செத்துப் போகிறவங்க தங்களது கண்ணை முன்னதாகவே கண் சேமிப்பு பாங்குக்குத் தானம் செய்து விடுகிறார்களாம்.''

''சுற்றி வளைக்காதே, விஷயத்துக்கு வா...''

'எனக்கோ உங்களுக்கோ ஏதாச்சும் நேர்ந்துட்டா, நாம்ப ஏன் நம் கண்களைத் தானம் செய்து, மத்தவங்கள் வாழ வழி காட்டக் கூடாது? நம்ப உயிலில் அப்படி எழுதி வைக்கணும்.''

''இந்த அழகான கண்களையா...?'' கேட்டுக்கொண்டே திரும்பினான் மனோகரன். பட்டுப்பூச்சி சிறகுகள் போல் கனமான இமை விரிப்புடன் காதளவு நீண்ட அவளது கருவிழிகளைச் செல்லமாக மெல்ல தொட்டுப் பார்த்தான்.

திலகா, பார்வைக்கு அழகான பெண் மட்டுமல்ல - புரிந்து உணர்ந்து கொள்ளும் இரக்கமான சுபாவம் கொண்டவள்,.. அவன் மனம் பெருமிதத்தில் விம்மியது.

''நம் உயிலை எழுதும்போது அதெல்லாம் பத்தி தீர

யோசிப்போம். இப்போ வேறு ஏதாவது பேசமாட்டியா?'' கெஞ்சினான் அவன்.

அந்த நினைவு இப்போது. பிரம்புக் கூடையை அருகில் இழுத்துக் கொண்டு மேலே மூடியிருந்த மெல்லிய கொசுவலை விரிப்பை எடுத்து அப்பால் வைத்தான். உள்ளே ஒரு சிறு பிளாஸ்கில் அளவோடு பால் கலந்த சர்க்கரை போடாத தேநீர். இன்னொரு பிளாஸ்டிக் டப்பாவில் அவனுக்குப் பிடித்த ஸாண்ட்விச்சுகள்.

வீட்டுத் தோட்டத்திலே அவள் ஊசிமிளகாய்ச் செடிகள் சிலவற்றைப் பயிராக்கி விட்டிருந்தாள். இலை தெரியாது கொத்துக் கொத்தாக மிளகாய்கள். அத்தனையையும் பறித்து, கழுவி, காய வைத்து, உப்பிட்டு வினிகரில் அவனுக்காக ஊறுகாய்ப் போட்டு பத்திரமாக வைத்திருந்தாள் அவள்.

''ச்சீஸ் நடுவிலே ஒரு ஊசிமிளகாய் வைத்து ஸாண்ட்விச் பண்ணியிருக்கேன். எப்படியிருக்கு பாருங்க?'' அவனுக்குப் புதுச் சுவைகளை அறிமுகப்படுத்தினாள். அழகான முக்கோணச் சதுரங்கமாக வெட்டி அவள் டப்பாவில் அடுக்கி அனுப்பியிருந்த ஸாண்ட்விச் துண்டமொன்றைக் கடித்துக் கொண்டே ஜன்னல் அருகே வந்து நின்றான்.

அங்கிருந்த நிலையில் அந்த இருபத்திரண்டு அடுக்குத் தங்கக் கோபுரம் கண்ணில் பட்டது.

என்னவோ சிந்தனையுடன் ஸாண்ட்விச்சைக் கடித்தான். நாக்கை நெருப்புச் சுட்டது போன்ற ஊசிமிளகாயின் காரம். ஒரு கணம் பொறி தட்டிவிட்டது. அத்துடன் உள்ளத்திலும் ஒரு சிறு சிந்தனைப் பொறி.

பாதி கடித்த ஸாண்ட்விச்சைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டு, டப்பாவை அவசரமாக மூடினான். பிளாஸ்க்கிலிருந்த தேநீரைக் கோப்பையில் ஊற்றி வாயிற்குள் பரவிய காரம் போக அவசரமாகச் சூட்டோடு குடித்தான் . வாயைத் துடைத்துக் கொண்டு போனின் எண்களை வேகமாகச் சுழற்றினான்.

''டாக்டர் ஜார்ஜ் மில்லர் அண்ட் பார்ட்னர்...!'' மறுபக்கம் அந்தச் சிடுமூஞ்சியின் சிறல் லஞ்ச் நேரத்தில் எவன் வந்து பிராணனை வாங்குகிறான் என்ற எரிச்சல்.



''மனோகரன் தம்பிரான் பேசறேன் - டாக்டர் மில்லரிடம் அவசரமாகத் தொடர்பு கொள்ளவேண்டும்.''

''அவருக்கு இது ஓய்வு நேரம்... ம்... இருங்க... கனக்ஷன் குடுக்கிறேன்''- அரைமனதுடன் உறுமினாள் அவள்.

''மிஸ்டர் தம்பிரான் - உங்க மனைவி வந்திருந்தாங்க. எல்லாத்தையும் விவரமாகச் சொல்லி அனுப்பினேன். அயாம் ஸாரி. உங்களுக்கு எந்தவிதமான சிகிச்சையும் அளிக்க முடியாது.''

''என்ன சொல்றீங்க டாக்டர்...!''

''மிஸஸ் தம்பிரான் ஆரோக்கியமான இளவயதுடைய பெண். அவங்க உடம்பில் எந்தவிதக் கோளாறும் இல்லை. எல்லா சோதனைகளும் செய்து பார்த்தாயிற்று. எல்லாம் திருப்தியாக இருக்கின்றது.''

மனோகரனின் நெஞ்சைக் கல் அமுக்குவது போன்று ஒரு இறுக்கம்.

''விளக்கமாகச் சொல்ல முடியுமா...?'' தடுமாறினான.

''உங்களுடைய உடம்பில்தான் குறை இருக்கிறது. கரு அணுவிற்குப் பலமும் இல்லை - எண்ணிக்கைகளும் மிகக் குறைவு. சின்ன வயதில் உங்களுக்கு மம்ஸ் என்ற வியாதி வந்ததா...?''

மனோகரனுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. கல்லூரி பரீட்சையின்போது அத்தனை வயதிற்குமேல் அவனுக்குப் 'பொன்னுக்கு வீங்கி' வந்து அவன் மிகவும் வேதனைப்பட்டான்.

''ஆமாம் - ''

''அதனால் ஏற்பட்ட கோளாறு. உங்களுக்குக் குழந்தையே பிறக்க வாய்ப்பே இல்லை என்று உங்களைப் பரிசோதித்த ஸ்பெஷலிஸ்ட் திட்டவட்டமாகக் கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார். உங்கள் மனைவியிடம் அதைக் காட்டினேனே... வேறு சில யோசனைகள் கூட நான் அவளிடம் சொல்லியனுப்பியிருந்தேனே!''

மனோகரன் நெஞ்சு தீவிரமாக அடித்துக் கொண்டது. தொண்டையும் வாயும் காய்ந்து மரத்துப்போன உணர்வில் தவித்தான்

''உங்களை நேரில் ஒரு பத்து நிமிஷம் பார்க்க வரலாமா?''

''அரை மணி நேரம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். உடனே வரமுடியுமா...?''

''இதோ வருகிறேன்'' ரிஸீவரை ஸ்டாண்டில் வைத்தான்.

ஒரு துண்டுக் காகிதத்தில் தான் அவசரமாக வெளியே வேலையாகப் போவதாக எழுதி ரிஸப்ஷன் மேஜைமீது வைத்துவிட்டு வேகமாக லிப்டில் இறங்கினான் - காரை எடுத்துக்கொண்டு போவதில் பயன் இல்லை... போலீஸ் தொந்திரவு கொடுப்பான். நடந்து சென்றால் பதினைந்து நிமிஷந்தான் ஆகும். குறுக்கேச் சந்துகளில் புகுந்து சென்றாலோ பத்து நிமிஷத்தில் போய்விடலாம் எண்ணிக் கொண்டே வேகமாக நடந்தான்.

அவன் உள்ளே சென்றபோது டாக்டர் மில்லர் கருப்புக் காபியை உறிஞ்சி மெல்லக் குடித்துக் கொண்டு இருந்தார்.

அவர் பகல் உணவு - ஒரு கோப்பை சர்க்கரையில்லாத கருப்பு காப்பி - ஒரு ஆப்பிள். இதை மட்டுமே தின்னுட்டு இந்தக் கிழவன் இந்த வயதிலும் சுறுசுறுப்பா இருக்கிறாரே! வியப்புடன் அவரைப் பார்த்தான்.

''காப்பி கொண்டுவரச் சொல்லட்டுமா...?'' அவர் உபசரித்தபோது...

''நோ, தாங்ஸ்... இப்பத்தான் நானும் சாப்பிட்டுட்டுவரேன்'' கூறிக்கொண்டு எதிரே ஆசனத்தில் உட்கார்ந்தான்.

ஆப்பிளைக் கத்தியால் சீவித் துண்டமிட்டபடி டாக்டர் பேசினார். ''உங்கள் உடம்பில் ஜீவ அணுக்கள் குறைவாகவும் சத்தற்றதாகவும் இருப்பதால் உங்களுக்குக் குழந்தையே பிறக்க முடியாத நிலை உருவாகிவிட்டிருக்கிறது- இதை மருந்தாலோ-அறுவை சிகிச்சையாலோ குணப்படுத்த முடியாது. குழந்தை வேணும் என்ற தாபம் இருந்தால், அதை நிவர்த்திக்க உங்கள் மனைவியிடம் ஏற்கனவே மார்க்கங்கள் சில சொல்லி அனுப்பியிருக்கிறேன் இருவரும் தீரக் கலந்து பேசி, ஒரு முடிவுக்கு வந்தால் என்னால் உதவமுடியும். செயற்கைக் கருத்தரிப்பு முறை பற்றி



உங்கள் மனைவியிடம் வெகு நேரம் விரிவாகப் பேசிக் கொண்டிருந்தேன். அதைச் செய்து முடிப்பது அத்தனை சுலபமல்ல. இந்த நாட்டு நிறப் பிரச்னையால் சில சிக்கல்கள் உள்ளன. இதை அவ்வளவு சுலபமாக நிறைவேற்ற முடியாததனால்தான் சொன்னேன். உங்கள் சகோதரனுக்கு ஐந்து குழந்தைகள் இருக்கின்றனவாம். அவர் உடல் ஆரோக்கியமாக இருந்தால்... இந்த முயற்சிக்கு உங்கள் குடும்பத்தவரிடமிருந்தே அணுக்களை எடுத்துச் செயற்கைக் கருத்தரிப்பு செய்து கொள்ளலாம் என்பது என் யோசனை...''

கேட்பதற்குக்கூட அவனுக்கு என்னவோ போலிருந்தது. தலையை அசைத்தான். ''நீங்கள் சொல்கிறதைப் பற்றிச் சிந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்து வெளியே வந்தான்.

ஆபீஸில் அவனுக்கு வேலையே ஓடவில்லை. 'இந்தத் திலகா ஏன் கதையை அப்படி மாற்றிச் சொன்னாள்? ஏன்...?' தனக்குள்ளே குழம்பிக் கொண்டிருந்தான்.

ஐந்து மணியானதாலே ஆபீஸ் மூடப்பட்டது. அனைவரும் கிளம்பிவிட்டனர். முகத்தைக் கழுவித் துண்டால் துடைத்துக் கொண்டு, தலையை வாரிக்கொள்ள வாஷ்பேசின் மேலேயிருந்த கண்ணாடியை அவன் பார்த்தபோது... அவன் முகம் பேயறைந்ததுபோல் காணப்பட்டது. 'பிசகு அவள் மேல் இல்லை. மடையா! நீதான் ஒரு குழந்தையைப் பெற்றுக்கொள்ளத் தகுதியில்லாதவனாகப் போய்விட்டாய்- தெரிஞ்சுக்கோ?'- அவனது உருவம் விஷமமாகச் சிரிப்பது போன்றதொரு பிரமிப்பில் அதிர்ந்து போனான்.

வேகமாக முடியைச் சீவி சீராக்கிக் கொண்டு, தொலைபேசி எண்களைச் சுழற்றினான்.

''திலகா... இன்று நாம் இருவரும் வெளியே பாரடைஸ் ரெஸ்ட்டாரண்டில் சாப்பிடப் போகிறோம். அதுக்குப் பிறகு டிரைவின் தியேட்டரில் ஒரு தமிழ்ப் படம் பார்க்கப் போகிறோம். அம்மாக்கிட்டே சொல்லிட்டு நீ தயாராக இரு.''

''அவங்களையும் கூட்டிட்டுப் போனாக்க என்ன?''

''திலகா! நாம் ரெண்டு பேர் மட்டுந்தான்

போகப்போறோம்-அம்மா புரிஞ்சுப்பாங்க - தனியா இருக்க அவங்களுக்குப் பயமா இருந்தா, பக்கத்து வீட்டு தீனாவை -விருந்தாளி அறையிலே வந்து படுத்துக்கச் சொல்லு - நாயை அவிழ்த்து வீட்டுக்குள்ளே நடையிலே விட்டு வைக்கச் சொல்லு. சீக்கிரம் நாம் திரும்பிடுவோம்- அவங்க பயப்படமாட்டாங்க...''

''இன்னிக்குப் படம் பார்க்கணுங்களா...?''

''ஆமாம். அது உனக்குப் பிடிச்ச படம். உனக்கு பிடிச்ச நாகேஷ் நடிக்கிற படம். 'சோப்பு-சீப்பு- கண்ணாடி' ஒரே சிரிப்பாம்...''

வெகுநேரம் அழுது விட்டிருந்தாள் போல் அவளது முகம் லேசாக உப்பி கண் இமை ஓரங்கள் சிவந்திருந்தன.

அவன் வருவதற்குள் அவள் தயாராகி விட்டிருந்தாள். சிவப்பு மாக்ஸியணிந்து கொண்டு முடியைப் பரவலாக இடைவரை தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள். லேசாக வெளியே குளிர் வீசிக் கொண்டிருந்தது. கையில் மெல்லியதான ஒரு கம்பளி ஜெர்ஸியையும் தயாராக வைத்துக் கொண்டு நின்றாள்.

உள்ளே ஓடி, தன் உடையை விரைவில் மாட்டிக் கொண்டு-கம்பளி ஸ்வெட்டருடன் அவன் காரில் ஏறிக்கொண்டான்.

பாரடைஸ் ரெஸ்ட்டாரண்டில் சாப்பிட அவளுக்கு எதுவுமே இருக்கவில்லை.

அவள் பிறந்த வீட்டில் அவளது பெற்றோர்கள் சைவ உணவுக்குப் பழகிவிட்டிருந்தனர். புகுந்த வீட்டில் மாமியார் கடும் சைவ விரதக்காரி. மனோகரன் அப்போதைக்கப்போது மீனும், கறியும் சாப்பிடுவதுண்டு. வெளியே ஹோட்டல்களிலும்- நண்பர்களின் வீடுகளிலும்தான் அவைகள் கிடைக்கும்.

ஆனால் இன்று அவனுக்கு அவைகள் எதிலும் பிடித்தம் இருக்கவில்லை. ''ரைஸ் அண்ட் விஜிடபிள் கர்ரி-ஸாலட் அண்டு யோகார்ட்'' என்று வெயிட்டரிடம் உத்திரவிட்டுவிட்டு அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

''இந்த மாக்ஸி உனக்கு ரொம்ப நல்லா இருக்கு.''

''தாங்க் யூ''- அவள் வார்த்தைகள் பெருமூச்சுடன் கலந்து



அடங்கின. மேஜை மேலிருந்த தட்டுக்களையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

தலையை நிமிர்த்திக் கணவனைப் பார்த்தால் அழுது விடுவாள் போன்று நெஞ்சில் துயரச் சுமை...

அதற்குப் பின்னர் டிரைவின் தியேட்டரில் காட்டிய அந்த பழைய தமிழ்ப் படத்தை அவர்கள் பார்த்தனர்.

சின்ன விஷயங்களுக்குக் கூடச் சட்டென்று சிரித்துவிடும் சுபாவம் திலகாவுக்கு. டாக்வுட் தம்பதியரின் கோமாளித்தனத்தைப் படித்துவிட்டுக் கலீர் என்று சிரிப்பாள்.

டெலிவிஷனில் காட்டப்படும் நகைச்சுவைச் சித்திரங்களைக் கண்டு வாயைப் பொத்திக் கொண்டு சிரிப்பில் குலுங்குவாள்.

எப்பொழுதாவது அவனுடன் சண்டையும் போடுவாள். நியாயம் அவள் பக்கம்தான் இருக்கும்.

'சிகரெட்டைத் தொடமாட்டேனீங்க... இது என்ன புதுப் பழக்கம். அவன்மீது சிகரெட் மணம் வந்தவுடன் சண்டைக்கு ஆரம்பித்து விடுவாள். அழுது - முகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டு அவள் பேசா மடந்தையாக இருப்பதைக்காண சகிக்காது அவன் சிகரெட் டப்பாவை தூக்கிக் குப்பைக்கூடையில் வீசிவிடுவான். அந்தப் பழக்கத்தையும் உதறித் தொலைப்பான். 'மீட்டிங்-வேலைன்னு ஓயாது அலைகிறீங்க- உடம்பு என்னத்துக்காகும்? அப்படி யாருக்குப் பணம் சம்பாதிக்கணும்?' -சிணுங்கிக் கொண்டு சண்டை போடுவாள்- அன்று முழுவதும் பேசமாட்டாள். விளையாட்டாக அவன் வேணுமென்றே ஏதாவது சொன்னால் கோபத்தை மறந்து கலீர் என்று சிரித்து விடுவாள்.

சிறு தாம்பத்யப் பூசல்களைத் தவிர அவர்களிடையே வேறு எவ்விதமான விபரீதங்களும் புகுந்து விரிசலை உண்டாக்கியதில்லை. அப்படி ஒருவர் மீது மற்றவருக்கு உயிர்!

நாகேஷைத் திரையில் கண்டு அவள் வரிசைப் பற்கள் தெரிய கன்னம் குழியச் சிரித்தாள்- விழுந்து விழுந்து சிரித்தாள்.

அப்பாடா- என்று நிம்மதியாக மூச்சு விட்டான் மனோகரன்.

படம் முடிந்தது. காரை அவன் வெளியே செலுத்திக் கொண்டு நெடுஞ்சாலைக்குள் நுழையும்வரை அவள் படத்தைப் பற்றியே நினைத்துச் சிரித்துக் கொண்டிருந்தாள். பச்சிளங் குழந்தை போன்ற அவளது கபடம்மற்ற முகத்தைப் பார்த்த மனோகரன் நெஞ்சில், முள் குத்துவது போன்றதொரு வேதனை.

''என்னங்க... வீட்டுக்குப் போகிற நினைப்பில்லையா? மணி இப்ப என்ன ஆகுது தெரியுமா?''

''இன்னும் இரவு இளமையாகத்தானே இருக்கு! அதுக்குள்ளே வீட்டுக்கு ஏன் ஓடணும்?''- பேசிக் கொண்டே வண்டியை அந்த விஸ்தாரமான தெருவின் ஓரத்தில் ஒரு பெரிய கடை அருகே கோடிட்ட இடத்தில் நிறுத்தினான். அது வெள்ளைக்காரர்களின் பெரிய கடைகள் நிறைந்த தெரு - நியான் விளக்குகள் உமிழ்ந்த வெளிச்சத்திலே பகல் போன்ற தோற்றம். கையைக் கோத்துக் கொண்டு ஜோடி ஜோடியாகப் பல நிறத்தவர்களும் நடைபாதையில் குளிரைப் பொருட்படுத்தாமல் கனமான கம்பளிச் சட்டைகளுடன் மெல்ல உலாவிக் கொண்டிருந்தனர்.

கடை முன்னாலிருந்த கண்ணாடி அடைப்பிற்குள்ளே விலைப்பட்டியலுடன் ஆடைகளையும் நகைகளையும் பொம்மைகள் மீது பதித்துவிட்டிருந்தனர் கடைக்காரர்கள்.

''விண்டோ ஷாப்பிங் பண்ணலாம், இறங்கி வரியா?'' கேட்டான் அவன்.

''வேண்டாங்க- காருக்குள்ளேயே நல்லா இருக்கு. வெளியிலே ஒரே குளிர்'' என்றாள் அவள். ஜெர்சியை இழுத்து கழுத்துவரை மூடிக்கொண்டாள். சிறிது நேரம் மௌனமாக இருந்தான் அவன். நடைபாதையில் தன் தந்தையின் கரத்தைப் பிடித்தபடி தத்திக் கொண்டு நடை பயின்று கொண்டிருந்த ஒரு வெள்ளைக்காரக் குழந்தையின் மீது அவள் பார்வை ஊர்வதைக் கவனித்தான்.

''திலகா...!''

திடுக்கிட்டு அவள் திரும்பினாள்.

''நீ ஏன் எங்கிட்டே பொய் சொன்னே...?''

''பொய்யா? என்ன சொல்றீங்க!'' அவள் குரல் பயத்தில்



நடுங்கியது. ''டாக்டர் மில்லர் எல்லாத்தையும் எங்கிட்டே சொல்லிட்டார். என்னுடைய உடலில் உள்ள கோளாறுகள் குழந்தை இல்லாததிற்குக் காரணமாம்! நீ ஏன் கதையை மாத்தினே...? நமக்குள் இப்படி ஒரு பொய் தேவையா...?'' நாகேஷைப் பார்த்துக் குலுங்கிச் சிரித்த திலகாவுக்கு இப்போது அழுகை நெஞ்சை அடைத்தது.

''டாக்டர் சொன்னதைக் கேட்டு நானே அதிர்ந்து போயிட்டேன். உங்க கிட்டதான் ஊனம் இருக்குங்கிற உண்மையை நீங்க தெரிஞ்சு கொண்டால் ரொம்ப மனம் நொந்து போயிடுவீங்க. அதிர்ச்சியும் வேதனையுமா நீங்க துன்பப்படறதை என்னால பார்க்கக்கூட சகிக்காது... அத்தோட விஷயம் முடிஞ்சுட்டாகூட நான் பொறுத்துக்குவேன். உங்க உறவுக்காரங்க காதில் உண்மை விழுந்திச்சுன்னா அவங்க உங்களை ஏளனமாகப் பார்ப்பதை என்னால தாங்கிக்க முடியாது. என்னை வேணுமானால் அவங்க மலடின்னு கூப்பிடட்டும். அதானால்தான் நான் அப்படி மாத்திச் சொன்னேன்.''

''பெரிய புத்திசாலி நீ - எனக்கு அந்த டாக்டரைக் கேட்க எத்தனை நேரம் பிடிக்கும்?''

''உங்களுக்குத் தெரியுமா - நான் படுக்கை அறையிலே தூங்குகிறேன்னு நினைச்சு அத்தை உடனே உங்க அண்ணனுக்கு போன் பண்ணிட்டாங்க. இத்தனை நேரம் அது அண்ணி வழியா, உங்க அக்காவுக்கு எட்டி விட்டிருக்கும். உங்க அக்காவுக்குத்தான் என்னை எப்போதுமே பிடிக்காது. தன் மகளை நீங்க கட்டிக்கலைன்னு அவங்களுக்கு என் மேலே ரொம்பக் காட்டம்.''

''ஊரே உன்னை மலடின்னு ஏளனமா பேசறதைக் கேட்டுக்கிட்டு நான் இருக்கணுமாக்கும்...''

''பின்னே? உங்களை, பிள்ளை பெத்துக்க துப்பில்லாதவன்னு பேசினா, அதை நான் கேட்டுகிட்டு சும்மா இருக்கணுமா...?''

''சரி, இப்ப இன்னொரு கேள்வி கேட்கப் போறேன். குழந்தைன்னா உனக்கு ரொம்ப ஆசையாச்சே- இப்படி காலமுச்சூடும் மலடியாக- எனக்காக இருந்திடப் போறியா?''

''இதென்ன கேள்வி?''

''டாக்டர் இன்னொரு யோசனை சொன்னாரே அதைப்பத்தியும்

நீ எங்கிட்டே மறைச்சே. எங்க அண்ணன் ஒப்புதல் கொடுத்தா அவர் உதவியோடு செயற்கைக் கருத்தரிப்பு முறையைப் பரீஷை செய்து பார்க்கலாம் என்று சொன்னாரே டாக்டர்?''

''உங்களுக்கு இதைப் பத்தி பேசக்கூட அசிங்கமா இல்லே? என்னதான் வெள்ளைக்காரன் நடுவிலே நாம் வந்து வாழ்ந்துட்டாலும் அவர்களாட்டம் உடுத்திக் கொண்டு இங்கிலீஷையே பேசிக் கொண்டிருந்தாலும் நாம் வெள்ளைக்காரர்களாகி விட மாட்டோம். அவங்களுக்குச் சரின்னுபடற சில கொள்கைகள் நம்ம மனசுக்கு முரணாக, தப்பாகத் தோணும். பல காலமா நம்ப ரத்தத்திலே ஊறிப் போன சில பழக்கவழக்கங்கள், கொள்கைகளை எப்படி மாத்திக்க முடியும்?...''

''உனக்குச் செயற்கைக் கருத்தரிப்பு முறையில் நம்பிக்கை இல்லையா..? வெளியிலே யாருக்கும் தெரியாம இதை டாக்டர் ரகஸியமா முடிச்சுக் கொடுப்பார்...''

''மறுபடியும் அதைப் பேசாதீங்க - எனக்கு ரொம்ப அருவருப்பா இருக்கு. இன்னைக்கு டாக்டரைப் பார்க்கப் போனபோது லிப்டிலே பக்கத்திலே நின்ன ஒரு வெள்ளைக்காரன் கழுத்திலிருந்து வழிஞ்சு வியர்வை ஒரு துளி என் கைமேலே விழுந்திடுச்சு. அந்த அசிங்கத்தையே என்னால தாங்கிக்க முடியலை. வீட்டுக்கு வந்ததும் கைமேலே டெட்டாலை ஊத்தி தேய்ச்சு கழுவினேன் அப்படியி ருக்கிறச்சே - செயற்கை முறைப்படி இன்னொருத் தருடைய... சே-சே உங்க அண்ணன் எனக்கும் அண்ணன் உறவு போல. அதுக்கப்புறம் அவர் முகத்திலே நான் எப்படி விழிப்பேன்? இத்தனை அவமானத்தையும் அசிங்கத்தையும் பட்டு ஒரு குழந்தை பெத்துக் கொள்ள வேண்டியது நமக்கு அவசியந்தானா?''

''காலமுச்சூடும் எனக்காக மலடியாக இருந்துடத் தீர்மானிச்சுட்டியா?''

''இதோ பாருங்க இந்தப் பேச்சை இனிப் பேச வேண்டாம். என்னைப் பொறுத்தவரை நீங்கதான் என் குழந்தை. நான்தான் உங்கள் குழந்தை-அப்படி நினைச்சிட்டு வாழ்வோம், போதும்.''



''இத்தனை சொத்து சுகமெல்லாம் நமக்குப் பிறகு யாருக்கு?''

''உங்க பிரியப்படி ஒரு பகுதியை உங்க உறவினர்களுக்கு எழுதி வையுங்க. மிச்சத்தை அனாதை ஆஸ்ரமம் பார்வையற்ற குழந்தைகளின் பள்ளிக்கூடம் - கோயில் - ஆஸ்பத்திரி -மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் - இதுகளுக்கு விட்டுட்டுப் போனால் போச்சு. வக்கீல் நீங்க, உங்களுக்கு நான் சொல்லித் தரணுமா?''

''திலகா...! என்ன சொல்றதுன்னே தெரியலை - உனக்கு ரொம்ப தாராளமான-'' தழுதழுத்தான் மனோகரன். சட்டென்று காரின் முன் பக்கத்து இழுப்பறையை இழுத்தான் - வீடு திரும்பும்போது வழியில் அவளுக்காக வாங்கி வைத்திருந்த 'சாக்லெட்' கட்டியை எடுத்தான்.

''இந்தா உனக்குப் பிடித்த பிட்டர் ஸ்வீட்'' சாக்லெட்-உறையைக் கிழித்துச் சரிகைத்தாளை அப்புறப்படுத்தி-வில்லைகளை ஒடித்து அவள் வாயில் கொஞ்சம் போட்டான்.

இனிப்போடு சிறிது லேசாகக் கசக்கும் அந்த சாக்லேட்டை அவள் ஆசையுடன் வாங்கித் தின்பது வழக்கம்.

இனிப்பும் கசப்பும் சேர்ந்து இருந்தால்தான் வாழ்க்கையும் சுவையாக இருக்கும்-தத்துவம் பேசிச் சிரிப்பாள்.

''போகலாமா...''-வாய்கொண்ட மட்டும் சாக்லேட்டைக் குதப்பி விழுங்கிக் கொண்டு கேட்டாள்.

'இனிப்பும் - கசப்பும் கலந்த வாழ்க்கை இல்லை திலகா... கசப்பு மட்டுமே ததும்பி வழியும், பயங்கரமான வெறுமையானதொரு வாழ்க்கையை உனக்குக் கொடுத்திருக்கிறேன் நான். அது புரியாது உன்னையே நீ ஏமாத்திக்கிறே திலகா மை ஸ்வீட்டி...' தனக்குள்ளே குமுறினான் அவன்.

# 3

நாட்கள் நகர்ந்தன. அன்று அவனது பிறந்த நாள். ஞாயிற்றுக்கிழமை. அதைக் கொண்டாட, திலகா தனது ஒரே நாத்தனார் யோகவதி குடும்பத்தையும், கொழுந்தன் சுப்ரமணி குடும்பத்தையும் விருந்து சாப்பிட அழைத்து இருந்தாள்.

காலையிலேயே யோகவதி கையில் ஒரு ஷர்ட்டு பார்சலுடன் தன் கணவன், குழந்தைகளுடன் வந்து சேர்ந்து விட்டிருந்தாள். அவள் கணவன் - நடேசு, கடற்கரை ஓரத்திலே அமைந்திருக்கும் வெள்ளைக்காரர்களின் ஹோட்டல் ஒன்றில் மது விற்பனைப் பகுதியில் வேலை பார்த்து வந்தான். வாடிக்கைக்காரர்களுக்கு மதுவை விநியோகிப்பதுடன் நிறுத்திக் கொள்ளாது தன்னையும் கவனித்துக்கொள்ளத் தொடங்கி மிடாக் குடியனாகி விட்டிருந்தான்.

குடித்துக் குட்டிச்சுவராகும் தன் கணவனைப் பற்றி யோகவதிக்குக் கவலை. அவர்கள் வசித்த பழைய வீடு குரூப் ஏரியா சட்டத்தின் கீழ் வெள்ளைக்காரர்கள் பக்கம் போய் விட்டதனால் இந்தியருக்கு என்று ஒதுக்கப்பட்டச் சாட்ஸ்வொர்த்தில்தான் அவர்கள் வசிக்க வீடு கிடைத்தது. அந்தப் பகுதியில் வசித்த பெரும்பாலானவர்கள் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அண்ணனைப் போல பெரிய மனிதர்கள் வசிக்கும் ரிஸர்வாயர் ஹில்ஸ் எனும் இடத்தில் தங்களுக்கு வீடு அமையவில்லையே என்று உள்ளூர பெரும் ஏக்கம். தம்பியைப்போல ஓவர் போர்ட்டிலாவது ஒரு துண்டு நிலம் இருந்திருக்கக்கூடாதா... இப்போ பணக்காரியாகி இருக்கலாமே என்ற ஆத்திரம். ஸ்டாங்கர் பக்கத்தில் கரும்புக் காட்டுக்கருகே கட்டப்பட்டிருந்த ஒரு சிறுகோயிலுக்கு அர்ச்சகராக இருந்தவரின் பேத்திதான் திலகா. அவளுக்கு அடித்த அதிர்ஷ்டம் தன் மகளுக்குக் கிட்டவில்லையே என்ற பொறாமை - எல்லாமாகச் சேர்ந்து அவளுக்குத் திலகாவைச் சிறிதும் பிடிக்கவே பிடிக்காது. தம்பியின் வீட்டிற்கு வரும்போதெல்லாம் ஏதாவது பேசி, சிறு



சண்டையை எழுப்பி விட்டுத்தான் நகர்வாள்.

இருப்பது ஒரே அக்கா. அவளை எப்படி ஒதுக்க முடியும்? மனோகரன் பற்களைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொண்டிருந்தான். திலகா அதைப் பெரிதாக்கிக் கணவனைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க ஒப்பாது, நாத்தியின் குத்தல் பேச்சுக்களைக் காதில் வாங்கிக் கொள்வதேயில்லை.

ரிஸர்வாயர் ஹில்ஸிலிருந்து அண்ணா சுப்ரமணி தன் மனைவி மக்களுடன் தனது காரில் சிறிது நேரத்தில் வந்து இறங்கினான்.

அவன் ஒரு ரெடிமேட் ஆடைத் தயாரிப்பு நிறுவனத்தில் பாஷன் டிசைனராக வேலை பார்த்து வந்தான். நல்ல சம்பளம். அப்பா விட்டுப்போன ஓவர் போர்ட் நிலத்தில் அவனுக்கும் சமபங்கு கிடைக்கத்தான் செய்தது. அவசரப்பட்டு அதை விற்று வந்த பணம் முழுவதையும் குதிரை வாலில் கட்டித் தொலைத்துவிட்டிருந்தான். ஊர் மெச்சப் பணக்காரர்கள் வசிக்கும் பகுதியில் பெரியதொரு வீட்டைக் கட்டிவிட்டுக் கடனில் கழுத்து மட்டும் புதையுண்டு வட்டி கொடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தான். தம்பி வாரிக் கொட்டுவதைக் கண்டு புகைச்சல். அண்ணி சற்குணத்திற்கும் திலகாவை அவ்வளவாகப் பிடிக்காது. மனோகரன் தன் சகோதரியைக் கட்டிக் கொள்ளவில்லை என்ற குறை அவளுக்கு

'சிவப்புத தோலைப் பார்த்துட்டு மயங்கிட்டான். கரும்புக்காட்டு காட்டாம்பூச்சி அவள். காதலாம் கத்திரிக்காயாம்...' மனோகரனது திருமணத்திற்கு அதிக எதிர்ப்புத் தெரிவித்தவள் அவன் அண்ணி சற்குணந்தான். இப்பொழுது எல்லாரும் மனோகரன் வீட்டிலே விருந்து சாப்பிடக் கூடியிருந்தனர்.

குடித்து நாக்கு சுரணையற்றுப் போயிருந்த நடேசுக்கு சாப்பாடு ருஸிக்கவேயில்லை.

'இது ஒரு விருந்தா! சிக்கன் ரோஸ்ட்-பிஷ்-பிரியாணி கபாப்... ஏதாச்சும் இருந்தா ஒரு கை பார்க்கலாம். கத்தரிக்காய் சாம்பார் -வெண்டைக்காய் கறி - கிச்சடி சாதம் - பொதினா துவையல்...அட, தூ...' மனத்திற்குள்ளே திட்டிக் கொண்டு சாப்பாட்டைத் தட்டில் இங்குமங்கும் ஒதுக்கினான்.

''பாயசம் சாப்பிடுங்கோ அண்ணி'' திலகா ஆசையுடன்

பரிமாறியபோது சற்குணம் உதட்டைச் சுழித்தாள்.

''இது என்ன இப்படி பேஸ்ட் மாதிரி இருக்கு? இது பாயசமா?'' வேண்டுமென்றே பொடி வைத்தாள்.

சாப்பிட உட்கார்ந்திருந்த எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். மனோகரன் தாடை இறுகியது. அவன் மேஜை விரிப்பையே பார்த்தான்.

''திலகா கேக் சுட்டுகிட்டிருந்தது. அதனாலே நான்தான் பாயசம் காய்ச்சினேன் - தண்ணியைக் குறைச்சு வச்சுட்டேன். அதனாலே சவ்வரிசி கூழ்போல கட்டிகிச்சு... வரவர எனக்கு கண்ணு மந்தமா போயிட்டிருக்கு..'' கிழவி பாஞ்சாலி தடுமாறிக் கொண்டு மேஜை அருகே வந்து நின்றாள். சற்குணம் முகம் சிறுத்துப் போனாள். அதற்குப்பின் அவர்களிடையே அமைதி நிலவியது.

உணவுக்குப் பின்னர் எச்சில் தட்டுகளை அப்புறப்படுத்தி விட்டு, மேஜையைச் சுத்தப்படுத்தினாள் திலகா. மறுபடியும் அலமாரியிலிருந்து துவைத்து இஸ்த்திரி போட்ட இன்னொரு மேஜை விரிப்பைக் கொண்டு அதன்மீது போட்டாள். தேநீர் கோப்பைகளை அந்தந்த இடங்களில் கொண்டுவந்து வைத்தாள். பின்னர் மேஜை நடுவே தான் காலையிலிருந்து சுட்டு அலங்கரித்துத் தயாராக வைத்திருந்த பிறந்த நாள் கேக்கைத் தட்டுடன் தூக்கிக் கொண்டுவந்து வைத்தாள். உள்ளேயிருந்து ஒரே ஒரு சிறு மெழுகுவத்தியைக் கொண்டுவந்து அதன் நடுவில் செருகி ஏற்றினாள்.

மனோகரன் புஸ் என்று வாயால் அதை ஊதி அணைத்துவிட்டு அருகிலிருந்த கத்தியை எடுத்துக் கேக்கை வெட்டினான்.

கூடியிருந்தவர்கள் கைதட்டி 'ஹாப்பி பர்த் டே' பாடினார்கள். பின்னர் எல்லோருக்கும் கேக்கும், தேநீரும் பரிமாறப்பட்டன.

''மனோ, நீயே வருஷா வருஷம் பிறந்தநாள் கொண்டாடிகிட்டிருக்கியே, அது போதுமா..? எப்ப உன் குழந்தையின் பிறந்த நாளை இந்த வீட்டிலே நாம் கொண்டாடப் போறோம்?'' யோகவதி வேண்டுமென்றே ஆரம்பித்தாள். முகம் சிவக்க, நெஞ்சு பதற மனோகரனைக் கடைக்கண்ணால் பார்த்த திலகா, மௌனமாகக் காலியான கோப்பைகளை மரத்தட்டில் அடுக்கிக் கொண்ட உள்ளே சென்று விட்டாள்.



''வைத்தியம் செஞ்சாலும் பிரயோசனப்படாதுன்னுட்டார் டாக்டர். நான் கூட பெருமாள்சாமிக்கு முடிப்பு எடுத்து வச்சேன். அவர்கூடக் கண் திறந்து பார்க்கலை... நம்ப குடுப்பினை அவ்வளவுதான்'' மாமியார் கிழவி ஓலமிட்டது திலகாவின் காதுகளில் கணீர் என்றுதான் கேட்டது.

''அனாதை ஆஸ்ரமம் மூலமாவது, டாக்டர் பாக்யம்மாள் மூலமாவது முயன்றால் ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கலாம் இல்லையா...?'' சற்குணம் கேட்டாள்.

''தம்பி ஓடி, ஓடி யாருக்கு சம்பாதிக்குது? வெளியிலே தத்து எடுக்கப் பிரியமில்லாட்டி நம்ப உறவுக்காரங்க குழந்தை ஒண்ணை எடுத்து வளர்த்தாப் போச்சு... மனசுவச்சா வழியா இல்லை?'' யோகவதி காரமாகப் பேசினாள்.

பாத்திரங்களைப் பீங்கான் தொட்டியில் கழுவிக் கொண்டிருந்த திலகாவின் கண்கள் கலங்கிப் போயின. நெஞ்சே வெடித்துவிடும் போன்ற துயரம்.

இவங்களையெல்லாம் கணவனது பிறந்தநாள் விருந்துக்குச் சாப்பிடக் கூப்பிட்டதற்கு இதுதானா பரிசு? உள்ளம் குமைந்தாள்.

அன்று இரவு அவளுக்கு ஒரே அசதி. வீட்டு வேலைகள் அனைத்தையும் கவனித்த களைப்பு. மனதிலே ஏற்பட்ட துயரத்தின் சோர்வு டெலிவிஷனில் செய்திகள் வருமுன் அவள் எழுந்து படுக்கச் சென்றுவிட்டாள். மனோகரன் உள்ளே வந்தபோது அவள் அயர்ந்து உறங்கிக் கொண்டு இருந்தாள். மெல்லிய விளக்கொளியில் அவள் முகத்தை உற்றுப் பார்த்து உள்ளம் கரைந்து போனான்.

அக்காவும், அண்ணியும் அவளை எப்படி கொத்திக் குதறி வேடிக்கை செய்தார்கள்! இத்துடன் விஷயம் நிற்கப் போவதில்லை. யோகவதி அச்சாவுக்கு வாய் அதிகம். ச்சாட்ஸ்வொர்த் முழுவதும் அவள் இதைப் பற்றித் 'தம்பட்டம் கொட்டி விடுவாள். 'ஐயோ பாவம்! திலகாவுக்குக் குழந்தையே பிறக்காதுன்னு டாக்டர் சொல்லிட்டாராம்!' - கடைக்கு வருகிறவர்கள் தங்களுக்குள் பேசுப்பார்கள்.

''யாருக்கு இத்தனை சொத்தையும் விட்டுவிட்டு போகப்

போகிறான் இந்த மனோகரன்...?'' கவலைப்படுவார்கள் பலர்.

'காதல்னு அந்தக் கரும்புக் காட்டுப் பெண் மேலே மயங்கி விழுந்தான், அது காய்க்காத மொட்டை மரமா நிக்குது' வம்புக்காரக் கிழவிகள் வாய் அலுக்கப் பேசுவார்கள்.

டர்பன் நகரில் இந்தியக் குடும்பங்கள் ஒரு வட்டத்திற்குள் அடங்கியதாயிற்றே. எந்த ஒரு சிறு விஷயமும் ரகசியமாக இருக்க யாரும் விடுவதில்லையே? பற்களைக் கடித்துக் கொண்டு படுக்கை ஓரத்திலே மெல்ல உட்கார்ந்தான் மனோகரன். அருகில் உயரமானதொரு முக்காலி மீதிருந்த அவர்களது திருமணப் போட்டோவில் திலகா சிரித்துக் கொண்டிருந்தாள். அவனுக்குத் திடீரென்று கோபம் வந்தது. பிசகு அவளுடையதல்ல. அவன்தான் மலடு என்கிற ரகசியத்தை அம்மாவிடம் போய் சொன்னால்?

அண்ணனைத் தொலைபேசியில் கூப்பிட்டுக் கத்தினால்? அக்காவுக்குக் காரமாக ஒரு கடிதம் எழுதிப் போட்டால்...?

திலகா விழித்துக் கொண்டு திரும்பினாள்.

''என்னங்க, விளக்கைப் போட்டுட்டு தூங்காம உட்கார்ந்திருக்கீங்க. ஏதாச்சும் வேணுமா...?''

''ஒண்ணுமில்லை. நம்ப கல்யாணத்தைப் பத்தி நினைச்சுகிட்டு இருந்தேன்.''

''முதல் முதல்லே எங்க வீட்டுக்கு வந்தீங்களே, நினைப்பிருக்கா?'' அவன் புன்முறுவலித்தபடி எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

''எப்படி மறக்க முடியும்? ஸ்டாங்கர் பக்கம் ஒரு நிலம் விற்பனைக்கு இருக்குன்னு கேள்விப்பட்டேன். எஸ்டேட் ஏஜண்டாச்சே... உடனே நூறு கிலோ மீட்டர் தூரத்திலே இருக்குன்னுகூட தூரத்தைப் பார்க்காம, காரை ஓட்டிக் கொண்டு பறந்து வந்தேன். அதைப்பத்தி அந்தக் கோவில் பூசாரிக்குத்தான் தெரியும்னு டீ கடைக்காரர் சொன்னார். அதனால் உன் தாத்தாவைப் பார்க்க வந்தேன்.''

''அந்தச் சமயம் அவர் கோயிலுக்கு பூசை செய்யப் போயிருந்தார். மெட்ரிக் பரீட்சை முடிஞ்சதும் தாத்தாவுக்கு உதவியா நான்



டர்பனிலிருந்து அங்கே வந்து தங்கி இருந்தேன். நம்ப பழைய தகர கூரைவீட்டை முறைச்சிட்டு நிக்கற ஆள் யார் இதுன்னு எனக்கு ஒரே திகைப்பாப் போயிடுச்சு...''

''யாரதுன்னு அதட்டிக்கிட்டு நீ வெளியே வந்தே...'' - சிரித்தான் மனோகரன்.

''வெள்ளை சபாரி ஸூட்டும், கருப்புக் கண்ணாடியுமா, ஜம்முனு பென்ஸ்கார் பக்கத்திலே ஜோரா நின்னுகிட்டிருந்தீங்க. தாத்தா பேரைச் சொல்லி வீட்டிலே இருக்காரான்னு கேட்டீங்க.. பதில் பேசக்கூடத் தோணாம நான் அப்படியே அசந்து போயிட்டேன்'' சொல்லிக் கொண்டே அவனது கலைந்துபோன கிராப்பு முடியைக் கைகளால் துழாவி விளையாடினாள்.

''நான் மட்டுமென்ன..? இந்தக் கரும்புக் கொல்லை நடுவிலே இந்தச் சின்ன தகர வீட்டுக்குள்ளேயிருந்து ஒரு நிலா வந்து எட்டிப் பார்க்கிறதேன்னு மயங்கிப்போயிட்டேன்!''

''ரொம்பத்தான் கேலி பண்றீங்க..!''

''நீ மட்டும் என்னை விவரிச்சு கேலி பண்ணலாமா...?'' செல்லமாக அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

''அந்த முதல் தடவை உங்களைப் பார்த்ததுமே நான்...'' முடிக்காது அவள் தன் முகத்தை அவன் தோள்மீது பதித்துக் கொண்டாள்.

''நானுந்தான்... பார்த்ததுமே மனசைப் பறிகொடுத்துட்டு அதுக்கப்புறம் சாக்குபோக்குகள் சொல்லிட்டு எத்தனை தடவை அந்த கரும்புக்காட்டுக்கு ஓடி வந்து இருக்கேன். காந்தமா என்னை எப்படி ஈர்த்துகிட்டே...?''

''நானுந்தான்... ரோட்டிலே போற பச்சை பென்ஸ் எல்லாம் உங்களுடையதுன்னு நினைச்சு எத்தனைவாட்டி ஓடிவந்து எட்டிப்பார்த்து ஏமாந்திருக்கேன்?''

''எனக்கு நீ, உனக்கு நான்னு இருக்கும்போது - இந்த உறவுக்காரங்க...''

''இப்போ நேரம் என்ன ஆகிறது தெரியுமா...? சும்மா படுங்கோ. நாளைக்கு முப்பது கல் தூரம் இருக்கிற மாரிட்ஸ் பார்க்குக்குப்

போகணும். அந்த வீட்டு ரிஜிஸ்ட்ரேஷன் கேசைக் கவனிக்கணும்னு சொல்லிக்கிட்டிருந்தீங்க.''

''முப்பது கிலோமீட்டர்தானே - அமெரிக்காவுக்குப் போறாப்பலே பேசறீயே...?'' அவன் மெல்ல படுக்கையில் சாய்ந்தான்.

தன் மார்பின்மீது விழுந்த அவளது கரத்தை அன்புடன் லேசாக அழுத்தினான்.

''திலகா...! நல்லா தூங்கும்மா... அவங்கள்ளாம் கிடக்கிறாங்க. ஐ லவ் யூ மை ஸ்வீட்டி'' - ஆறுதல் சொன்னான்.

மறுநாட் காலை அவன் திலகாவைத் தன்னுடன் காரில் மாரிட்ஸ்பர்க்வரை வரும்படி வற்புறுத்தி அழைத்தான்.

''போயிட்டு வாயேன்'' மாமியார் பாஞ்சாலி உத்திரவு கொடுத்துவிட்டாள். போகும்போது புதிய சாலை வழியே வேகமாக வண்டியை ஓட்டினான். சில நிமிஷ நேரத்திலே ஊர் வந்துவிட்டது போன்ற பிரமிப்பு அவளுக்கு ஏற்பட்டது.

வேலையை முடித்துக் கொண்டு திரும்பும் வழியில் ஒரு கேக்கும் ஜின்ஜர்பியரும் வாங்கி அவளுக்குக் கொடுத்து தானும் சாப்பிட்டான்.

பின்னர் பழையசாலை வழியே மெல்ல காரைத் திருப்பி நிதானமாக ஓட்டிக்கொண்டு வந்தான். அந்தப் பெரிய முடக்கிலே கொண்டு வந்து நிறுத்தினான். அக்டோபர் மாதத்தின் ஆரம்பம் சாலையின் இருமருங்கிலும் ஜகராண்டா மரங்களில் ஊதாப்பூக்கள். இலையை மறைத்துக் கொண்டு குலுங்கின. இருமருங்கும் இடையே தென்பட்ட கல்யாண முருங்கையின் சிவப்புப் பூக்கள் நெருப்பாகப் பச்சை இலைகள் நடுவே தலையை நீட்டின. ஒரு மழைக்குப்பின் நேட்டாலின் செழுமையான பூமியில் பசுமை பாய் விரித்து விட்டிருந்ததைப் பார்க்கக் கண் கொள்ளாக் காட்சியாகத்தான் இருந்தது. காரிலிருந்து இறங்கி - ஜகராண்டா மரத்தடியில் கிடந்த ஒரு ஆசனத்தின் மேல் இருவரும் உட்கார்ந்தனர்.

சூரியன் அடிவானத்தைச் சிவப்பாக்கிக் கொண்டிருந்த மாலை நேரம். கண்முன்பே, விரிந்து கிடந்த அந்தப் பள்ளத்தாக்கை வியப்புடன் பார்த்தாள திலகா. ..



''எத்தனை வாட்டிப் பார்த்தாலும் எனக்கு இது அலுக்கிறதே இல்லை. 'ஆயிரம் குன்றுகள்' என்று இந்த இடத்துக்கு பேரு எத்தனைப் பொருத்தமா கொடுத்திருக்காங்க... எண்ணமுடியாதபடி சின்னச்சின்ன குன்றுகள் ஒன்றுக்குப் பக்கத்தில் ஒன்றாக, கல் குவியல்போல்... மேலே பச்சைப் போர்வை போர்த்திகிட்டு எத்தனை அழகா இருக்கு...?'' ஆர்ப்பரித்தாள் திலகா.

''இந்த தவுசன் ஹில்ஸ்... பள்ளத்தாக்குக்கு உன்னை ஏன் கூட்டிட்டு வந்தேன் தெரியுமா? என் மனசிலே ஆயிரம் எண்ணங்கள் அலைபாய்கிறது... நிம்மதியாக இங்கே உட்கார்ந்திட்டு நாம் பேசி ஒரு முடிவுக்கு வரணும்.''

''என்ன சொல்றீங்க...'' திலகா வியப்புடன் கேட்டாள்.

''நேத்து அவங்கள்ளாம் உன்னை அப்படிக் குத்தி குதறிப் பேசினது என் மனசை ரொம்பப் பாடுபடுத்திடுச்சு. அண்ணிங்கிற மரியாதையைக்கூட விட்டுட்டுப் பட்டுனு பதில் சொல்லணும்னு துடிச்சேன். உனக்காக நான் பொறுமையா இருந்தேன்.''

''சொல்லிட்டுப் போகட்டும், விட்டுத் தள்ளுங்க!''

''இல்லை திலகா. எனக்கு ஒரு யோசனை... நாம் ஏன் ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கக் கூடாது... டாக்டர் பாக்யம்கிட்ட சொன்னா அந்தம்மா கல்யாணமாகாது தாயாகிவிட்ட கேஸ்களில் யாரையாவது பார்த்துப் பேசி நமக்கு ஒரு குழந்தை வாங்கிக் கொடுப்பாங்க - சட்டப்படி நாம அதை ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம். இந்த ஊர்லே எத்தனைப் பேர் அப்படிக் குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்க்கிறாங்க... தெரிஞ்ச கதைதானே...?''

''வேண்டாங்க - அதிலே ஒரு பெரிய பிரச்சனை இருக்கு. நாளைக்கு வளர்ந்து பெரிசானதும் 'யார் என் தாய் - என் தகப்பன் எங்கே'ன்னு அந்தக் குழந்தை கேட்டால்...? டாக்டர் பாக்யம் குழந்தையைத்தான் தத்து எடுக்க அனுமதிப்பாங்களே தவிர, அந்தக் குழந்தையின் தாய் யார், எவன் மூலம் அவள் தாயானாள் - என்ற விவரங்களைச் சொல்லமாட்டாங்க. அது அவங்க வச்சு காப்பாத்த வேண்டிய ரகசியம்... வேண்டாங்க இந்த விஷப் பரீட்சை.''

''குழந்தையில்லையின்னு நீ மனக்குறை படக்கூடாதுன்னு ஆதங்கப்படறேன் திலகா.''

''மனோ, மறுபடி சொல்றேன். குழந்தை இல்லைன்னு நான் இனி ஒருபோதும் குறைபட்டுக் கொள்ளப் போவதே இல்லை. வீட்டை கவனிப்பதிலும் - உங்களைக் கவனிப்பதிலுமே என் பொழுது முக்கால்வாசியும் கழிந்துவிடும். மிச்சப் பொழுதிலே கோவிலுக்குப் போவது... பார்வையற்ற குழந்தைகள் பள்ளிக்குச் சேவை செய்வதுன்னு - என்காலத்தை நான் பயனுள்ளதாக மாத்திக்கப் போறேன். இருட்டப்போகுது வாங்க. மூடுபனி வந்து மூடிகிட்டா காரை ஓட்ட கஷ்டப்படுவீங்க, எழுந்திருங்க'' அவன் கரத்தைப் பற்றி உசுப்பினாள்.

''உண்மையா உன் மனசிலே அந்தக் குறை இருக்காதா திலகா?''

''ஒரு காலத்தில் குழந்தை வேணுங்கிற ஆசை இருந்தது - டாக்டர் முடிவைச் சொன்னதும் நான் அதை உடனடியாக மறந்துட்டேன்.''

''நிச்சயமா?''

''சத்தியமா.''

அவர்கள் அங்கிருந்து கிளம்பினார்கள்.

## 4

அதற்குப் பின்னர் மனோகரன் முன்னைவிட அவளிடம் மிகவும் பரிவுடன் நடந்து கொள்ளத் தொடங்கினான்.

முன்பெல்லாம் சனிக்கிழமை மாலை என்றால் ஏதாவது ஒரு கூட்டத்திற்குத் தலைமை வகிக்கக் கிளம்பிவிடுவான்.

இப்போது அவன் தனது வெளி அலுவல்களைக் குறைத்துக் கொள்ளத் தொடங்கினான். சாப்பிட்டானதும் அவள் பாத்திரங்களைப் பீங்கான் தொட்டியில் போட்டுக் கழுவி மேஜை மீது கவிழ்த்துக் கொண்டிருக்கும்போது கூட உதவ வந்து விடுவான்.



பேசிக் கொண்டே அவள் கழுவி வைக்கும் தட்டுகளைத் துடைத்து அலமாரியில் கொண்டுபோய் அடுக்குவான். தோட்டத்திற்குள் அவள் பின்னால் சென்று தானும் செடிகளுக்கு நீர் வார்ப்பான். கையுறை அணிந்து கொண்டு அவளுடன் கதை பேசியபடியே களையெடுப்பான். ரோஜாக் கிளைகளைக் கத்தரித்து ஒழுங்கு செய்வான்.

தவிர்க்க முடியாத ஒரு கூட்டம். அதில் அவன் பேசித்தான் ஆகவேண்டும் என்று வந்து விட்டால், கூடவே திலகாவையும் அழைத்துக் கொண்டு புறப்படுவான்.

திலகாவுக்கு அவனைப்பற்றி எப்பொழுதுமே ஒரு விஷயத்தில் மிகவும் பெருமை உண்டு.

மேடை மீதேறி கனல் தெறிக்கும்படி ஆங்கிலத்தில் பேசி, எந்த ஒரு பிரச்சனையையும் அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துப் பிய்த்தெடுத்து விடுவதில் அவன் அசகாய சூரன்.

'மிஸ்டர் தம்பிரான் எப்படிப் பேசினீங்க? வெள்ளையன்களே அசந்து போயிட்டாங்க' என்று கூட்டத்தின் முடிவில் நண்பர்கள் வந்து கைகுலுக்கி அவனைப் பாராட்டும்பொழுது அவள் மெய் சிலிர்த்துப் போவாள்.

ஒரு நாள் அந்தப் பெருமையிலும் ஒரு சிறு அதிர்ச்சி.

அவனுடன் அவள் ஒரு பொதுக் கூட்டத்திற்குப் போயிருந்தாள். இனவேற்றுமையைத் தாக்கி - தொழில் உலகில் நிற வேற்றுமையின் பாதிப்புகளைப்பற்றி, உணர்ச்சிவசத்தில் காரசாரமாகப் பேசிவிட்டான் அவன். ஹாலுக்கு வெளியே வந்தபோதுதான் திலகா கவனித்தாள். ஊரிலேயே பிரசித்தி பெற்ற சி.ஐ.டி. - லெஃப்டினென்ட் முத்துமாணிக்கம் பற்களைக் காட்டிச் சிரித்தபடி பின் வரிசை நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவளுக்கு பகீர் என்ற உணர்வு.

சி.ஐ.டி. முத்துமாணிக்கத்தின் கண்டுபிடிப்பால் புரட்சிக் கொள்கைகள் கொண்ட பல இந்திய வாலிபர்கள் - பயங்கரவாதிகள் என்ற முத்திரையுடன் 'கம்பி' எண்ணிக் கொண்டிருந்தது உண்மை.

டாக்டர்கள் வக்கீல்கள் கல்லூரி மாணவர்கள் - மாணவிகள் -ஆசிரியர்கள்தான் கருப்பரின் உரிமைப் போராட்டத்திலே

பெருமளவு பங்கு கொள்கிறவர்கள். அழுத்தப்பட்டோரைத் தங்களது புரட்சிக் கருத்தால் தூண்டிவிடுகிறவர்களே இவர்கள்தான் என்று செக்யூரிட்டியார் கண்காணிப்பிலே சதா இருந்து கொண்டிருப்பவர்களும் இவர்களே!

''இந்தாங்க! இந்த மாதிரி மீட்டிங்குக்கு இனி நீங்க போக வேணாங்க.''

''என்னைக் கோழையாக்கி, என் பேச்சுரிமையைப் பிடுங்கி வீட்டுக்குள்ளே அடைக்கப் பார்க்கிறயா?''

''அதுக்கில்லை, அந்த சி.ஐ.டி. மாணிக்கத்தின் முகத்தைப் பார்த்தபோது எனக்குக் கவலையாயிடுச்சு. திடீர்னு ஒரு நாள் ராத்திரி வந்து கதவைத் தட்டி, உங்களை போலீஸ் வண்டியில் அடைச்சிப் போயிடுவான்னு பயமா இருக்கு. அப்புறம் கேஸ் நடந்து - உங்களை ராபின் அயலண்டுக்குப் பயங்கரவாதின்னு பட்டங்கட்டி அனுப்பிச்சுட்டா என் கதி என்னாகும்?''

''அப்படியெல்லாம் தீர விசாரிக்காம உடனேயே என்னை ராபின் தீவுக்கு அனுப்பிச்சுடுவாங்களா? தக்க ஆதாரங்கள் தேவையில்லையா...? கவலைப்படாதே.''

''அரசியலில் புகாது, சமூக சேவையோட உங்க நடவடிக்கைகளை நிறுத்திக்கக் கூடாதா?''

அவள் பயந்தபடியேதான் நடந்தது...

மறுநாள் காலை அவள் சாமான்கள் வாங்க தன் காரை ஓட்டிக் கொண்டு கடைத்தெருவுக்கு வந்திருந்தாள். கையில் கொஞ்சம் பணம் தட்டுப்பட்டது. உரிய இடத்தில் காரை நிறுத்திவிட்டுக் கணவனிடம் கொஞ்சம் பணம் கேட்டு வாங்கிக்கொள்ள அவனது ஆபீஸிற்கு வந்தாள்.

அறைக் கதவைத் தள்ளி மெல்லத் திறந்து உள்ளே நுழைய முயன்றபோது பார்த்தாள். வாட்டசாட்டமானதொரு வெள்ளைக்காரன் கதவு பக்கம் முதுகைக் காட்டியபடி கணவனுக்கெதிரே அமர்ந்து கொண்டிருந்தான். அறையிலிருந்த அத்தனை இரும்பு அலமாரிகளும் திறந்து கிடந்தன. அவைகளுக்குள் அடுக்கப்பட்டிருந்த பைல்களைப் புரட்டிக் கொண்டு நின்றான்



இன்னொரு வெள்ளையன்.

மனைவியை மனோகரன் பார்த்து விட்டான்.

''பலானவன் வந்திருக்கான். நீ பிறகு வா'' மெல்லிய குரலில் தமிழில் சொன்னான். அவள் புரிந்துகொண்டு விட்டாள். முதல் நாள் அவன் நிகழ்த்திய சொற்பொழிவின் விளைவு அது.

செக்யூரிட்டி போலீஸ் அதிகாரிகள் அவனது அறையைப் பரிசோதித்துக் கொண்டிருந்தனர்.

'இவன் ஒரு பயங்கரவாதியா...? கம்யூனிஸ்டா...? தொழிலாளிகளை கிளப்பிவிடுகிற விஷமக்காரனா?' என்ற ஆராய்ச்சிக்குத் தடயங்கள் தேடிக் கொண்டிருந்தனர்.

கடைத்தெருவில் சாமான்கள் வாங்கவே திலகாவுக்கு மனம் இருக்கவில்லை. பிற்பகல் உணவு நேரத்தின்போது மறுபடியும் அவள் பதற்றத்துடன் அவனது ஆபீஸிற்கு வந்தாள்.

மனோகரன் ஸாண்ட்விச்சைக் கடித்துக் கொண்டு தனியே அறையில் உட்கார்ந்திருந்தான்.

''அவங்கள்ளாம் போயிட்டாங்களா?'' விசாரித்தபடி நாற்காலியில் எதிரே வந்து உட்கார்ந்தாள்.

பாதிக் கடித்துக் கொண்டிருந்த ஸாண்ட்விச்சை அவளிடம் நீட்டினான்.

''சாப்பிடு, நீகூட பசியா இருப்பே... ரொம்ப பயந்து போயிருப்பே!'' சிரித்தான்.

தரைமீது பரப்பிக் கிடந்த பைல்களைப் பார்த்தபடி ஸாண்ட்விச்சைக் கடித்து விழுங்கினாள்.

''ஏதாவது தடயம் கிடைச்சுதா அவர்களுக்கு...?''

''ஒரே ஒரு தடயந்தான் கிடைச்சுது...''

அவள் முகம் வெளிறடைந்து போய்விட்டது. திகைப்புடன் அவன் முகத்தைப் பார்த்தாள்.

''உங்க தாத்தா வீட்டிலேயிருந்து எனக்கு நீ எழுதியிருந்தியே முதல் காதல் கடிதம் - என் பிரத்யேக பைலில் பத்திரமாக வச்சிருந்தேன். அதுதான் அவங்க கண்களில் பட்டது.''

''ஐய்யய்யோ அதை எடுத்துப் படிக்கப் பார்த்தாங்களா -அவங்க?''

''பார்த்தாங்க. என்ன மோசம் வந்திட்டுது? நிறத்திலே கறுப்பா இருந்தாலும் இந்தியரும் அவர்களைப் போலவே காதல், அன்பு என்கிற உணர்வுகளுக்குக் கட்டுப்பட்டவங்க. அவங்களுக்கும் மனசுன்னு ஒன்னு இருக்கு. அவங்கள்ளாம் மிருகம் இல்லை. சாதாரண மனிதர்கள்தான்னு புரிஞ்சுக்கட்டும்னு... வேணுமின்னே அந்தப் பைலைத் திறந்து அவங்க முன்னால எடுத்து வச்சேன்.''

''நீங்க ஆனாலும் படுமோசம்'' முகம் சிவந்து சிணுங்கினாள் அவள்.

''நீ ஏன் இங்கிலீஷில் அந்தக் காதல் கடிதாசியை எனக்கு எழுதினே? அது உன் தப்பு'' சிரித்தான் அவன்.

''உங்களுக்கு அப்பவெல்லாம் தமிழ் சரியாக்கூடப் பேசவராது. அதனாலே ஆங்கிலத்திலே எழுதினேன். அதைப் போய்...'' பொய்யாகக் கோபித்துக் கொண்டாள் திலகா.

''தமிழ் எழுதப் படிக்கக் கத்துக் கொடுத்தே - கோவிலுக்கு வந்து சாமியைக் கும்பிட பழக்கிக்கொடுத்தே, குடிப்பதை விட்டொழிக்க வற்புறுத்தி வெற்றியடைஞ்சே, சிகரெட்டையும் உனக்காக விட்டுட்டேன். இப்ப இந்த மாதிரி அரசியல் கூட்டங்களை விட்டொழிக்கச் சொல்றே இல்லையா?''

''அதிகமாக உரிமைப் பிரச்சினைகளைப் பற்றித் தாக்கிப் பேசப் போய் அரசியல் வம்பில் சிக்கி நீங்க சிறைக்குப் போய் விட்டால் என் கதி...''

''நிறைய பணம் இருக்கு - வீடு இருக்கு - கார்கள் இருக்கு -உனக்கு என்ன குறை?''

''நீங்கள் இல்லாத குறையை இதுகள் எல்லாம் நிரப்பி விடுமா?''

''நமக்குள் மரணம் வந்து பிரிவு ஏற்பட்டால்? அப்போ என்ன செய்வே?''

''அது தவிர்க்க முடியாதது - ஆண்டவன் செயல்னு அவர் மேலே பாரத்தை போட்டுட்டு உங்களோடு வாழ்ந்த நினைவிலேயே ஒன்றி... பொதுப்பணிகளில் மனசை செலுத்திக் காலத்தை ஓட்டுவேன். நீங்க என்ன செய்வீங்க...?''



''நீ மட்டுந்தான் என்னை அத்தனை ஆழமா நேசிக்கிறயா...? நானுந்தான் உன்னை ரொம்ப காதலிக்கிறேன். அப்படி ஒரு பயங்கரம் நடந்துட்டா... அவ்வளவுதான். அதுக்குப் பின்னால் ஒரே மூச்சாக நம் மக்களின் உரிமைப் போராட்டக் கோதாவிலே குதிச்சுடுவேன். அப்பகூட நீ ஆவியா வந்து என்னைத் தடுத்து நிறுத்துவியா...?'' கடகடவென்று சிரித்தான்.

''நாம் ஏன் இப்படி கோணாமாணான்னு பேசிட்டு இருக்கோம். ஏங்க, இன்னிக்குப் பேப்பரைப் பார்த்தீங்களா?'' அவள் பேச்சை மாற்றினாள்.

''காலையில் படிக்க நேரம் ஏது? லஞ்ச் டைம் போதுதான் படிப்பேன். இப்போ நீ வந்துட்டே இனி மாலை பேப்பரையும் சேர்த்து ராத்திரிதான் படிக்கணும். என்ன சமாச்சாரம்.''

''சமூக சேவகி மிஸஸ் ஹில்டா பார்க்கர் நிலைமை ரொம்ப மோசமாகிகிட்டு வருதாம், பாவம்...''

''வெள்ளைக்காரராகப் பிறந்தும் நிறத்திமிர் இல்லாது கருப்பு மக்களுக்காகவே கால முழுவதும் சேவை செய்தவங்களாச்சே - நாடு முழுவதும் அவங்க பெயருக்கு நல்லதொரு மதிப்பு உண்டே. தனக்குப்பின், தன் சொத்து முழுவதையும் இந்தியர் - கலப்பு வர்க்கத்தவர் - ஆப்பிரிக்கர் என்ற இந்த மூன்று இன மக்களது பள்ளிகளுக்கும், அனாதை இல்லங்களுக்கும், ஆஸ்பத்திரிகளுக்கும் என்று எழுதி வச்சிருக்காங்களாம் - எல்லாம் விவரமாகச் சில நாளைக்கு முன்னாடிகூட பேப்பரில் வந்திச்சே?''

''ஆமாம்... அவங்க நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிட்டு வருதாம். உங்களுக்கு ஞாபகம் இருக்கா? ஒரு தடவை பெருத்த மழையிலே அம்கேனி ஆறு பெருகி — ஸ்பிரீங்ஃபீல்ட் பள்ளத்தாக்கிலே குடியிருந்த இந்தியரின் வீட்டையெல்லாம் மூழ்கடிச்சிட்டபோது... பட்டினியிலும் பசியிலும் ஏழைமக்கள் அலறிக்கிட்டிருந்தாங்களே... அப்போ இந்த அம்மாதான் லாரி நிறைய கம்பளிகள், மருந்துகள், ரொட்டிகள், வெண்ணெய், பால்புட்டிகள் எல்லாம் கொண்டு வந்து அவங்களுக்கு உதவினாங்க - இத்தனையும் நமக்குச் செய்யணும்னு அவங்களுக்கு தலையிலே கூழா கரைச்சுக் கொட்டியிருக்கு! அவங்க வெள்ளைக்காரி - நாம்

கருப்பு இனத்தைச் சேர்ந்தவங்க - நமக்கேன் செய்யணும்னு அவங்க ஒதுங்கியிருக்கலாம் இல்லையா?''

''அவங்க பெரிய சோஷியல் வொர்க்கராச்சே, அவங்களுக்கு நிறபேதமே கிடையாதே - கிராமத்திலே க்ஷயரோகத்திலே அவதிப்பட்ட கல்வியறிவில்லாத ஏழை இந்தியர்களை தன் வண்டியிலே தூக்கிப் போட்டுக் கொண்டு க்ஷயரோக ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து சேர்த்துட்டு தக்க வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்கிறதோட அந்தக் குடும்பத்துக்குவேறே பண உதவி செய்வாங்க. கருப்பர்களுக்கு உதவும் சமூக நலத்திட்டங்கள் அனைத்திலும் அவங்களுக்கு ஈடுபாடு உண்டு. ராவும், பகலும் சோம்பலில்லாமல் உழைக்கறவங்க. அவங்களுக்குப் பாவம் உடம்புக்கு முடியாமபோனது நம்ம துர் அதிர்ஷ்டம்'' என்றான் மனோகரன்.

''ஏங்க அவங்க ஒரு மில்லியனராமே...? பேப்பரிலே படிச்சேன்.''

''தெரியாதா உனக்கு. காலஞ்சென்ற அவங்க கணவருக்கு டிபியர் வைரச் சுரங்கத்திலே பல பெரிய பங்குகள் இருந்தன. பரம்பரையா பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவங்க.''

''அவங்க வீட்டை நீங்க பாத்திருக்கீங்களா? 'விமன்' என்கிற பத்திரிகையிலே அவங்க வீட்டையும், தோட்டத்தையும் கலர்ப்படம் எடுத்துப் போட்டிருந்தாங்க.''

''ஒரு தடவை ஒரு நன்கொடை விஷயமாகப் போயிருந்தேன். அவங்க வீட்டைப் பாத்திருக்கேன். பணக்கார வெள்ளையர் வசிக்கும் கிங்ஸ் அவன்யூவிலே பத்து ஏக்கரா பூமி நடுவிலே...அழகான பெரிய மாளிகை அந்த வரவேற்பறைக்குள்ளே போனதும்... தரையிலே விரிச்சுக்கிடந்த பாரசீகக் கம்பளத்தைப் பார்த்துப் பிரமிச்சுப் போனேன். தலைக்கு மேலே தொங்கின ஷாண்டிலியரின் அழகைக்கண்டு வியந்தேன். சுவரிலே மாட்டியிருந்த டர்ச்சிகாஃப் சித்திரங்களைக் கண்கொட்டாமல் பார்த்துகிட்டே நின்னுட்டேன். அந்த வரவேற்பறையிலிருந்த பொருள்களே எத்தனையோ ஆயிரம் ராண்டுகள் பெறும்... தோட்டத்தைப் பார்த்தின்னா நீ அங்கேயே நின்னுடுவே... கேட்டுக்கிட்ட இரு பக்கமும் நிக்கிற அந்த டிப்புஷீனா மரத்தைப் பார்த்தாலே போதும் - நகர மனசே வராது!''



''ஏங்க அப்படிப்பட்ட ஒரு பெரிய மில்லியனர் வீட்டு அம்மா அழுத்தப்பட்ட கருப்பு மக்களுக்காகத் தனது நேரத்தைச் செலவிடுகிறது அதிசயமில்லையா...?''

''ராணிபோல வாழ்க்கை இருந்தும் சமூகத்திலே மக்களுக்கு ஏதாச்சும் கஷ்டம் ஏற்பட்டுட்டா ஊரோடகூட தானும் கொட்ற மழையிலே நின்னு அவங்க செய்கிற உதவியைப் பார்த்தா நம்ப மனசே கனிஞ்சு போயிடும்...''

''வெள்ளைக்காரங்க எல்லாருமே இனத்திமிர் பிடிச்சவங்களா இல்லை. அதுவும் ஒரு அதிசயம் பார்த்தீங்களா?''

''இதிலே வேடிக்கை என்னன்னா, வெள்ளைக்காரங்கதான் இந்த வெள்ளை கருப்பு என்கிற நிற துவேஷத்தை வளர்த்தவங்க. அவங்களுக்குள்ளேயே சிலர் இதை வெறுத்து மனிதாபிமானத்தோடே வாழணும்னு புரட்சி பண்றாங்க. அதில் ஹில்டா அம்மாவும் ஒருவர்.''

''அவங்களுக்கு இப்போ வயசு அறுபத்தெட்டு ஆகுதாம். போன வருஷம் டர்பன் பெண்கள் சங்கத்திலே அவங்களுக்கு 'அன்னை' என்கிற பட்டம் கொடுத்து கௌரவிச்சாங்களாம். அதுக்குள்ளே பாவம்'' - அனுதாபப்பட்டாள் திலகா.

''இப்படிப்பட்ட நல்லவங்க நீடுழி காலம் வாழணும். நாட்டுக்கு அவங்களால் பெருமை - மக்களுக்கு நன்மை. அவர்களுக்குப் போய் இருதய நோய் வந்து இருதயம் பலவீனப் பட்டுப் போயிடுச்சாம். வாட் ஏ பிட்டி!'' இரக்கப்பட்டான் மனோகரன்.

''நம்ப கிரீஸ் முதல்லே அறுவை சிகிச்சை செய்த கேப்டவுன் க்ருட்ஸ்கியர் ஆஸ்பத்திரிக்கு விமானத்திலே எடுத்துப்போய் சேர்த்துடலாம்னுதான் யோசிச்சாங்களாம்... அங்கே இருக்கிற ஹார்ட்டிரான்ஸ்பிளாண்ட் டீம், இவங்களுக்கு மாற்று இருதயம் பொருத்தி சிகிச்சை கொடுத்திருப்பாங்க... ஆனா இவங்க போக விரும்பலை'' என்றான் வருத்தத்தோடு மனோகரன்.

''ஏன்...?'' என்றாள் திலகா.

''நேட்டாலில் பிறந்தவங்க, டர்பன் மக்களுடன் ஒன்றிப் போய் வாழ்ந்தவங்க, இங்கேயே உயிர் போகணும். இந்த மண்ணிலேயே

தான் அடக்கமாகணும்னு பிரியப்படறாங்களாம்... போன ஞாயிறு பேப்பரில் விவரமா போட்டிருந்தாங்களே படிக்கிலியா...?''

''படிச்சேன். இவங்க இப்படிப் பிடிவாதம் செய்கிறாங்களேன்னு வருத்தமா இருந்திச்சு...''

''இருதயமாற்றுச் சிகிச்சை நம்ப ஊர் வெண்ட் வொர்த் ஆஸ்பத்திரியிலும் செய்ய முடியும். முன்னமே செஞ்சு பார்த்த விஷயந்தானே...கூட உதவி செய்ய க்ருட்ஸ்கியரிலிருந்து இரண்டு பெரிய நிபுணர்கள் கூட வந்திருக்கிறாங்களாம்.''

''பின்னே ஏன் தாமதிக்கிறாங்க...?''

''டாக்டர் கிரிஸ்ட்டியன் பர்னார்ட் முதல் தடவை லூயி வாஷ்கான்ஸ்கி என்கிறவருக்கு மாற்று இருதய சிகிச்சை செய்தபோது நீ அதைப்பத்தி வெளிவந்த அத்தனைப் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் வாங்கி வச்சுக்கொண்டு படிச்சியே அதெல்லாம் மறந்து போச்சா-? 'ஹார்ட் டிரான்ஸ்பிளாண்ட்' சிகிச்சை அத்தனைச் சுலபமான காரியமல்ல. முதல்ல டோனர் கிடைக்கணும். குற்றுயிரா கிடக்கிற கேஸ்கள் எத்தனையோ தினமும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் அவர்களுடைய ரத்தம் - தசை -சில உடல் திரவங்கள் என்று பல விஷயங்கள் நோயாளியுடைய உடம்புக்கு ஏத்ததாக இருக்கணும். அப்பத்தான் மாற்று இருதயத்தை நோயாளியின் உடம்பு ஏத்துக்கும். இல்லாட்டா ஆபரேஷன் முடிஞ்ச சில நாள் கழிச்சு புதிய இதயத்தை நோயாளி உடம்பு மறுத்து ஒதுக்கிடும் - இதுக்கு ரிஜக்ஷன்னு பேர், அப்போது ஆள் அவுட்டாகி விடுவான். இதெல்லாம் இந்த ஊர் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குக்கூட தெரிஞ்ச சங்கதியாச்சே.''

''நான் திரும்பிப் போகும்போது வைத்யநாதர் ஆலயத்துக்கிட்டே கொஞ்சநேரம் நின்னுட்டுப் போகப் போறேன்.''

''இப்ப உன் சாமிகிட்டே என்ன வரம் கேட்கப் போறே?'' -மனோகரன் சிரித்தபடி அவளது மூக்கைப் பிடித்து மெல்லத் திருகினான்.

''மூக்கைத் தொட்டா எனக்குத் தும்மல் வரும் - தெரிஞ்சும் என்ன விளையாட்டு, இது -'' செல்லமாகக் கோபித்துக் கொண்டாள். 'அங்க்' என்று அடுக்கடுக்காகப் பலமுறை தும்மினாள்.



கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

''அன்னை ஹில்டாவுக்குச் சிகிச்சை செய்ய விரைவில் ஒரு டோனர் கிடைக்கணும்னு வேண்டிக்கப் போறேன்.''

''திலகா! உன் வேண்டுதலை ஏத்துட்டுத் தெய்வம் நீ கேட்ட வரத்தைக் கொடுத்தா என்ன நடக்கும் தெரியுமா? நல்ல ஆரோக்யமா இருக்கிற - எல்லாவித சோதனையிலும் அன்னை ஹில்டா உடம்புக்கு ஒத்துவரக்கூடிய உடல் படைச்ச ஒரு வாலிபனோ இளம் பெண்ணோ - விபத்துக்குள்ளாயி குத்துயிராகப் பிழைக்கமாட்டான்னு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படவேண்டி வந்துவிடும். ஒரு இளைஞன் சாக வேண்டும் - அப்பத்தான் அன்னை ஹில்டா உயிர் வாழ முடியும். புரிகிறதா...?''

''பூமிக்குப் பாரமா எத்தனையோபேர் வாழ்கிறாங்க - மக்களுக்கு உதவியா ஒரு சிலர்தான் இருக்கிறாங்க. பூமிக்குப் பாரமா வாழ்கிறவங்களில் ஒருத்தர் செத்து - அன்னை ஹில்டாவுக்குத் தன் இதயத்தைக் கொடுத்தா என்ன குறைஞ்சு போகும்? எல்லோரும் ஒருநாள் சாக வேண்டியவங்கதானே?''

''போதும் இந்தப் பேச்சு - கேட்கக் கசப்பா இருக்கு - கடையிலே சாமான் வாங்கிட்டியா - ? பத்திரமா வண்டியை ஓட்டிட்டு போ. நான் ஆபிஸிலிருந்து சீக்கிரமா வந்துடுவேன்.''

''அதுதான் இப்ப நிதைக்கும் சாயங்காலம் மழை பெய்யுது'' -அவள் சிரித்தாள்.

''இன்னிக்கு வானிலை அறிக்கைப்படி டிராகன்ஸ்பர்க் மலைமேலே பனி கொட்டிக் கொண்டிருக்காம் - ராத்திரி ரொம்ப குளிராக இருக்குமாம். எனக்குத் தெரியும் - சூடா சமூசா சுட்டுக் கொண்டு வரச் சொல்வீங்க. பக்கத்துவீட்டு தீனாவோட செஸ் விளையாட உட்கார்ந்துடுவீங்க. உங்க ரெண்டு பேருக்கும் சமூசாவும் - காப்பியும் கொண்டுவந்து கொடுத்திட்டு இருக்கத்தான் பொழுது சரியா இருக்கும்.''

''நீதான் சமூசா செய்கிறதிலே ஓவர் போர்ட்டிலேயே பெரிய கெட்டிக்காரியாச்சே!''

''இப்படி வேப்பிலை அடிச்சு எங்கிட்ட காரியத்தைக்

கழற்றதிலே நீங்க புலிதான் போங்க-''

அவனது மூக்கை மறுபடியும் விளையாட்டாகத் திருக, அவன் அருகில் நெருங்கியபோது, ''ப்ளீஸ்! எனக்குத் தும்மல் வந்தால் கார் ஓட்டக் கஷ்டமா இருக்கும். நான் வரேன். வீட்டுக்கு ஓடி தலைமூஷ்னையா சமுசாவுக்கு ஏடு போடணும்... நீங்க ஏதாவது சாப்பிட நினைச்சா-'' - சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள். லிப்ட்டுக்குக் காத்திராமல் மாடிப்படிகளில் வேகமாக இறங்கி ஓடினாள்.

'மசக்கைக்காரி போல ஆசை வந்துடும்' என்று சொல்லவந்த வார்த்தைகளை விழுங்கிக் கொண்டோமே... நல்லவேளை... என்று நினைத்தபடி வண்டியைக் கிளப்பிக் கொண்டு, ஓவர்போர்ட்டுக்கு விரைந்தாள்.

## 5

மனோகரின் அக்கா யோகவதி வசித்த ச்சாட்ஸ்வொர்த், நகரத்திற்கு வெகு தொலைவில்தான் இருந்தது. அவர்கள் வீட்டில் கார் கிடையாது. அப்படியிருந்தும் அவள் நினைத்தபொழுது நகரத்திற்கும், தனது தாயைப் பார்க்க ஓவர்போர்ட்டிற்கும் ஓடி வந்துவிடுவாள். தாய்க்கு மகள் மேல் மட்டற்ற பாசம். பற்றாக் குறையில் குழந்தைகளுடன் கஷ்ட ஜீவனம் செய்கிறாளே என்ற குறை. மகன் தன் கைச்செலவிற்குத் தரும் காசைச் சேர்த்து வைத்திருந்து மகள் வரும்போதெல்லாம் தாய் ரகசியமாக அவளிடம் கொடுத்துவிடுவது வழக்கம்.

'அம்மாவைப் பார்க்கப் போனால், கட்டாயம் ஒரு பத்து ராண்டாவது செலவுக்குக் கிடைக்கும்' என்கிற தெம்பில் அவள் வந்துவிடுவாள். முன்னெச்சரிக்கை இன்றி திடீர் என்றுதான் வருவாள். பிறகு சமைக்கலாம், என்று வேறு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கும் திலகா நாத்தியைக் கண்டதும் அவசரமாகச் சமைய...க்குள் ஓ. வேண்(...



வந்தவளுக்கு நாவுக்கு ருசியாகச் சமைத்துச் சுடச்சுடப் பரிமாறவேண்டும். தம்பி வீட்டில் அவர்கள் எல்லோரும் சைவமாக இருக்கிறார்களே என்று அவளுக்குப் பெரும் குறை. அதனால் சாம்பார் - ரசம் - பொரியல் - துவையல் - அப்பளம் என்று பல பதார்த்தங்களுடன் விருந்து படைக்காவிட்டால் அவள் ஏளனமாகப் பேசிவிடுவாள். திலகாவுக்கு, நாத்தனாரிடம் எப்பவும் கொஞ்சம் பயம்.

அன்று காலை திலகா கடையில் வாங்கிவந்த துணிகளை வெட்டித் தைப்பதற்காகத் தையல் மிஷின் அருகே வந்து உட்கார்ந்தாள். ரவிக்கையின் ஒரு கையைப் பொருத்தி முடிக்கவில்லை.

புயல்போல் வேகமாக, கடையில் தான் வாங்கிய சாமான் பார்சல்களுடன் பெருமூச்சுவிட்டபடி வந்து சோபாவின்மீது விழுந்தாள் யோகவதி. தையல் யந்திரத்தை மூடிவிட்டு, திலகா சமையறைக்குள் மறைய வேண்டி இருந்தது. நல்லவேளை, முதல் நாள்தான் நகரத்துக் காய்கறி மார்க்கெட்டிலிருந்து ஒரு கூடை காய்கள் வாங்கிவந்து பிரிஜ்சுக்குள் திணித்து வைத்திருந்தாள்.

பாஞ்சாலியின் அறைக்குள்ளே சென்று தாயாருடன் ஊர்க் கதைகளை அளக்கத் தொடங்கினாள் யோகவதி. சிறிது நேரத்தில் அவர்களது குரல் மிகவும் தணிந்து, கிசுகிசு என்றாகியது.

அநேகமாக விஷயம் தன்னைப் பற்றியதாகத்தான் இருக்கும் என்பது திலகாவுக்குத் தெரியும்.

பொறுமையாக வளர்க்கப்பட்டவள் அவள். அதைப் பற்றிக் கலக்கப்படாது- பரபரப்புடன் சமைக்கத் தொடங்கினாள்.

திருப்தியாகச் சாப்பிட்டுவிட்டு அம்மா ரகசியமாகக் கொடுத்த ஐம்பது ராண்டைக் கைப்ப(ை)க்குள் போட்டுக் கொண்டு படுக்கைமீது சாய்ந்து கொண்டாள் யோகா. தம்பி வந்ததும் அவனைப் பார்த்து பேசிவிட்டுப் போக வேண்டுமென்ற தீர்மானம்.

அக்காவைக் கண்டதுமே மனோகரன் முகம் சிறுத்துப் போனான் ஏதோ வம்பு வளர்க்கத்தான் வந்திருக்கிறாள் என்ற உள்ளுணர்வின் ச்சரிப்ப

''எல்லோரும் சௌக்கியம்தானே..? சின்னவன் நல்லா படிக்கிறானா இல்லே மறுபடியும் ஊர் சுத்தறானா?'' - கேட்டபடி மேஜையருகே வந்து உட்கார்ந்தான்.

திலகா அவர்கள் எல்லோருக்கும் சாப்பிட வடையும் சூடான தேநீரும் கொண்டு வந்து பரிமாறினாள்.

''நீயும் இப்படி உட்கார். வீட்டுக்குப் போறதுக்கு முந்தி ஒருவார்த்தை தம்பிக்கிட்டே பேசிட்டு போகணும்னுதான் காத்திருந்தேன்'' திலகாவின் கையைப் பிடித்துப் பக்கத்தில் இருந்த ஆசனத்தில் அமர்த்தினாள் யோகவதி.

மனோகரன் தேநீரை உறிஞ்சிக்கொண்டே தன் சகோதரியைக் கடுமையாகப் பார்த்தான்.

''நேத்திக்கு டாக்டர் பாக்யத்தைச் சந்தித்தேன். அவங்ககிட்டே இப்ப ஒரு படிச்ச பொண்ணு வைத்தியத்துக்கு வந்திருக்காம். அழகான பொண்ணாம் - கல்யாணமாகலை - காலேஜில் போய் வம்பில் மாட்டிக்கிட்டதாம். இப்போ அதுக்கு எட்டுமாசமாம். நல்ல நிலையிலிருக்கிறவங்களுக்குக் குழந்தையைத் தத்து கொடுத்திடணும்னு பார்த்திட்டு இருக்காங்களாம்.''

மனோகரனுக்கு அடக்கமாட்டாக் கோபம். ''அக்கா இது டாக்டர் பாக்யம் உங்கிட்டே தானாக வந்து சொன்ன செய்தி இல்லை. அவங்க யாரையும் கூப்பிட்டு இந்த மாதிரி காரியங்களைச் சட்டுனு பேசிட மாட்டாங்க. நீங்க அவர்களுடைய ஸர்ஜரிக்குப் போய் திலகாவைப் பற்றி சொல்லி ஒருமூச்சு அழுதிருப்பீங்க பரிதாபப்பட்டு கிட்டு அவங்க உதவி செய்ய முன்வந்திருக்காங்க. இல்லையா?'' அதட்டினான்.

''அப்படித்தான் வச்சுக்கோயேன். நல்லதை உத்தேசிச்சு நான் சொன்னேன்.''

''எங்களுக்கு இப்படியெல்லாம் தத்து எடுத்து ஒரு பிள்ளையை வளர்க்கத் தேவையில்லை.''

''அப்படின்னா என் பிள்ளைகளிலே ஒண்ணை வேணுமானா எடுத்து வளர்த்துக்கோ.''

41261
6220950



''எங்களுக்குக் குழந்தையே வேண்டாம்னு தீர்மானம்.''

''உனக்குப் பிறந்த பிள்ளையாகத்தான் அது இருக்கணும்னா நீ திலகாவை டைவர்ஸ் பண்ணிட்டு வேறே கல்யாணம் செய்துகிட்டாதான் உண்டு...''

மனோகரன் கோபத்துடன் எழுந்து நின்றான்.

திலகாவின் கண்களில் நீர் புரள்வதைக் காண அவனுக்குப் பொறுக்க முடியவில்லை.

''உங்களுக்கு ரொம்பத்தான் நெஞ்சழுத்தம் அக்கா. என் வீட்டிலே என் மனைவி முன்னால் இப்படி ஒரு பேச்சுப் பேச உங்களுக்கு ரொம்பத் துணிச்சல்தான். வயசிலே என்னைவிட மூத்தவங்கன்னு பார்க்கிறேன். இல்லாட்டி வர கோபத்துக்கு கண்டபடி கத்தித் தீர்த்துடுவேன்... நீங்கள்ளாம் என்ன நினைச்சிட்டிருக்கீங்க...''

''மனோ கோவிச்சுக்காதேயப்பா.. யோகி ஏதோ யோசிக்காம பேசிட்டது...'' தாய் சமாதானப்படுத்தினாள்.

''அம்மா உங்களுக்கும் சொல்லி வைக்கிறேன். கேட்டுக்கோங்க.. திலகாவை என்னிடமிருந்து யாரும் பிரிக்க முடியாது. எங்களுக்குக் குழந்தை வேண்டாம்.. இது எங்க சொந்த விஷயம். இதிலே தலையிட யாருக்கும் உரிமை கிடையாது. மீறி மறுபடி இதே பேச்சை யாராவது எடுத்தா நான் பொல்லாதவனாயிடுவேன்'' உரத்த குரலில் கத்தினான் ஆத்திரத்துடன்.

யோகவதி உண்மையிலேயே நடுங்கிப் போய்விட்டாள். இருந்தாலும் பேசினாள்.

''நான் இப்ப என்ன சொல்லிட்டேன் - இப்படி நீ குதிக்கிறே?''

''இன்னும் என்ன சொல்லணும்னு நினைக்கிறீங்க - அக்கா தம்பின்னு உறவு வேணும்னா என் விஷயத்திலே தலையிடாம இனி ஜாக்கிரதையாக இருக்கணும். தெரிஞ்சுதா?'' உரத்த குரலில் பேசியபடி ஓங்கி ஆத்திரமாக மேஜையைக் குத்தினான். அருகிலிருந்த ஒரு காலி ஜோப்பை கைப்பட்டு உருண்டு கீழே விழுந்து நொறுங்கிய பீங்கான் துண்டங்கள் கம்பளத்தின் மீது சிதறின.

கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு திலகா ஓடிச் சென்று

கம்பளத்தைச் சுத்தப்படுத்துவதில் ஈடுபட்டாள்.

''அப்ப நான் வரேன் - இங்கே வந்ததே பிசகா போயிடுச்சு''-மனத்தாங்கலுடன் அக்கா எழுந்திருந்தாள்.

''சித்த இருங்கோ, உங்களைக் கொண்டு காரிலேயே வீட்லே விட்டுட்டு வரேன். இந்த நேரத்தில் பஸ் கிடைக்கக் கஷ்டமாயிருக்கும்.''

மனோகரன் எழுந்து, தன் அறைக்குள் சென்றபொழுது திலகா கூடவே பின்னால் வந்தாள்.

''இவங்கள்ளாம் கூடி உன்னை ஏளனமாகப் பேசறதை நான் பார்த்துட்டே இருக்கணும் இல்லையா? இது உன் வேலை. எங்கே வந்து முடிஞ்சிருக்குப் பாரு?'' - கோபத்துடன் அடிக்குரலில் மனைவியை அதட்டினான்.

''போகட்டும் சொல்லிட்டுப் போறாங்க. நீங்க ஏன் இதைப் பெரிசுபடுத்தறீங்க...?''

''நான் இப்பவே போய் அம்மாகிட்டே உண்மையை உடைக்கப்போறேன்.''

அவன் முரட்டுத்தனமாகத் திரும்பியபோது... சட்டென்று அவன் கையைத் திலகா கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

''வேண்டாங்க, இப்ப நீங்க சொன்னால் கூட நம்ப மாட்டாங்க... பெண்டாட்டிக்குப் பரிஞ்சுகிட்டு பேசுகிறீங்கன்னு சிரிப்பாங்க - வீண் அவமானம் - விஷயத்தை அப்படியே விட்டுடுங்க. நாலு நாளிலே எல்லோரும் இதைப் பத்தி மறந்துடுவாங்க. எனக்காக... ப்ளீஸ் மனோ!... அக்காகிட்டே பெரிசா சண்டை போட்டுக்காதீங்க. தண்ணியை அடிச்சா தண்ணி விலகுமா..? சொந்தபந்தங்களை அறுக்க முடியாதுங்க... உங்களுக்கு இருக்கிறது ஒரே ஒரு அக்கா...''

மனோகரன் கோபத்தை மறந்து சிரித்தான். மனைவியருகே நெருங்கினான்.

''எனக்கு இருக்கிறதும் இந்த ஒரே ஒரு மனைவிதானே? அவளை மட்டும் இவங்கள்ளாம் அவமானப் படுத்தலாமா?'' கேலியாகக் கேட்டபடி அவள் கன்னங்களைச் செல்லமாக வருடினான். கார் சாவியைக் கையில் சுழற்றிக் கொண்டு வெளியே புறப்பட்டான்.



அதற்குப்பின் தத்து என்கிற விஷயத்தைப் பற்றி அவனிடம் பேசக்கூட உறவினர் யாருக்குமே துணிவிருக்கவில்லை.

நாட்கள் வேகமாக நகர்ந்தன. மனோகரனுக்கு வேலை முன்னைவிட அதிகரித்துவிட்டிருந்தது. குளிர்காலம் மும்முரமாகி அத்துடன் இடைஇடையே இடியோடு கூடிய பெரும் மழை வேறு. வெளியே போகமுடியாது எல்லோரும் மாலை வேளையில் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டியிருந்தது.

பக்கத்து வீட்டு தீனாவுடன் அவன் இரவில் செஸ் விளையாடினான். திலகா தன் மாமியாருடன் உட்கார்ந்து டெலிவிஷன் பார்த்துப் பொழுதைக் கழித்தாள்.

# 6

அன்று காலை எழுந்தவுடனேயே அவனுக்கு அது நினைவுக்கு வந்தது. மனோகரனின் தந்தை மரணமடைந்த நாள் அது, ஆங்கில காலண்டர் கணக்குப்படி. ஏற்கெனவே அவன் தாய் தன் கணவன் இறந்துபோன மாதத்தின் திதி நாளன்று வழக்கம்போல் தனக்குத் தெரிந்த குஜராத்தி பண்டிதரைக் கூப்பிட்டு வாழைக்காய், அரிசி, பரங்கித் துண்டம், பழங்கள், தட்சணை, புது ஷர்ட் எல்லாம் ஒரு தட்டில் வைத்து தானம் செய்து முடித்தாள்.

பின்னர் வடை பாயசத்துடன் சமைத்து இலையில் வைத்து, கணவனது புகைப்படத்திற்கு முன்னே படையல் போட்டு முடித்தாள். பெரிய மகனும், மகளும் வந்து சாப்பிட்டுவிட்டுப் போனார்கள்.

மனோகரன் தன் தந்தையின் மரணநாளை வேறுவிதமாக அனுசரிக்கும் பழக்கம் கொண்டவன். முதல் நாளே அவன் பார்வையற்ற சிறுவர் பள்ளிக்கு அவர் நினைவாக ஒரு கணிசமான தொகைக்கு செக் எழுதி டொனேஷனாக அனுப்பிவிட்டிருந்தான்.

திலகா அந்த நாள்போது ஒவ்வொரு ஆண்டும் அனாதை இல்லத்துக் குழந்தைகளுக்குத் தன் கையாலே இனிப்பு வழங்கிவிட்டு

வருவது வழக்கம். இந்த முறை அவள் ஓல்ட் ஏஜ் ஹோமில் இருந்த வயதானவர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்க விரும்பினாள்.

ஆபிஸிலிருந்து வந்தவன் அன்று வெறுங்கையுடன் உள்ளே வந்தான்.

''ஜிலேபி பொட்டலங்களைக் காரிலேயே வச்சுட்டு வந்துட்டீங்களா..?'' - கேட்டுக் கொண்டே அவள் அவனுக்கு சூடாக தேநீர் தயாரிக்க உள்ளே சென்றாள்.

அப்பொழுதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது. வழியில் வாங்கிவர நினைத்தவன், நண்பன் ஒருவனுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்ததில் மறந்தே போனான்.

தேநீரை அவசரமாகக் குடித்துவிட்டு வேறு உடை மாற்றிக் கொள்ளக்கூட நேரமின்றிக் கிளம்பினான்.

''திலகா... வா போகலாம். நேரே பாம்பே மிட்டாய் ஹாலுக்குப் போய் ஏதாச்சும் வாங்கிட்டு பிறகு ஹோமுக்குப் போகலாம். என்ன சொல்றே...?''

திலகா அவசரமாக முகத்தைக் கழுவி ஒப்பனைகளை விரைவில் முடித்துக் கொண்டாள். கூந்தலை வாரி கொண்டை போட்டுக் கொண்டாள். பீரோவைத் திறந்து அவளுக்கு மிகவும் பிடித்தமான ஆரஞ்சு வண்ண பிரஞ்சு ஷிபானும் - பொருத்தமான ரவிக்கையும் அணிந்து கொண்டு - கம்பளிக் கோட்டு - மழைக் கோட்டு சகிதம் கைப்பையைத் தோளில் மாட்டிக்கொண்டு புறப்பட்டாள். அவர்கள் கிளம்புவதற்குள் பனி மூடிக் கொண்டு இருள் வேகமாகப் பரவத் தொடங்கியது. கார் சாலைக்குள் நுழையுமுன் சன்னமாகத் தூற ஆரம்பித்த மழை, கோபத்துடன் கொட்டத் துவங்கியது... சில விநாடிகளில் தெருவெல்லாம் வெள்ளக் காடாக நீர் புரண்டு ஓடிக்கொண்டிருந்தது.

பாம்பே மிட்டாய் ஹால் இருந்த தெருவுக்குள் கார் புகுந்தது. அது ஒருவழிப் பாதை. கடை எதிர் பக்கத்தில் இருந்தது. போக்குவரத்து இடைஞ்சல் இல்லாது ஒரு ஓரமாகக் காரை நிறுத்திக் கொண்டான்.

''அஞ்சு நிமிஷத்திலே நான் போய் வாங்கிண்டு வந்துடறேன். போலீஸ் வந்து விரட்டினா காரை பக்கத்துத் தெருவுக்கு மெல்ல



ஓட்டிட்டுப் போய் ஒரு பக்கமாக நில்லு. வந்துடறேன்!'' என அவன் இறங்குமுன் அவள் அவனது கையைப் பிடித்தாள்.

''நீங்க மழையிலே நனைய வேண்டாம், சட்டுனு உங்களுக்குச் சளிபிடிச்சிடும். நான் ஓடிப்போய் ஒரே நிமிஷத்திலே வேண்டியதை வாங்கிண்டு வந்துடறேன்'' சொல்லிக் கொண்டு கைப்பையைத் தோளில் மாட்டிக்கொண்டு இறங்கினாள். மழைக்கோட்டைத் தலைமீது விரித்துப் போட்டுக் கொண்டு எதிர்பக்கத்துக் கடையை நோக்கித் தெருவின் குறுக்கே நடந்தாள்.

''பத்திரம். மழை... ஹைஹீல்ஸ் ஷூ வேறே... பார்த்து...'' என்று அவன் ஆதங்கத்துடன் குரல் கொடுத்தது அவள் காதுகளில் விழுந்ததோ என்னவோ!

ப்ளீரென்று தெருவிளக்குகள் எல்லாம் ஜோதியாக எரியத் தொடங்கின. மழை அடங்கி, மெல்லிய தூறல் விழுந்து கொண்டிருந்தது. கணுக்காலைத் தொட்டுக் கொண்டு ஓடிய மழை ஜலம் மாயமாய் மறைந்து தெரு பளிச்சென்று புலப்பட்டது. நெரிசல் நேரம் தாண்டி விட்டதால், தெருவில் அப்போதைக்கப்போதுதான் சில வண்டிகள் விரைந்து கொண்டிருந்தன.

கழுத்தைத் திருப்பிக்கொண்டு, அவன் அந்தக் கடையைப் பார்த்தான். திலகா வேண்டியதை வாங்கிக் கொண்டு இருந்தாள். மழைக் கோட்டை மேலே அணிந்து கொண்டு கைப்பையைத் தோளில் எடுத்து மாட்டிக் கொண்டாள். கவுண்டர் மீது அடுக்காக வைத்திருந்த இனிப்புகள் நிறைந்த காகிதப் பெட்டிகளைக் கைமடக்கில் ஒன்றன் மேல் ஒன்றாக வைத்துக் கொண்டு புன்சிரிப்புடன் கணவனைப் பார்த்தபடி தலையை ஆட்டிவிட்டு -தெருவை ஒரு கணம் உற்றுப் பார்த்தாள் - திருப்தியுடன் வேகமாகக் குறுக்கே காரை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

'என்ன நடந்தது, எப்படி நடந்தது ?' மனோகரனுக்கு அதற்குப்பின் கேட்டவர்களுக்குப் பதிலளிக்கவே தெரியவில்லை!

விரல் சொடுக்கும் நேரத்தில்தான் நடந்து விட்டிருந்தது. வெகு தொலைவில் வந்து கொண்டிருந்த அந்தக் கார், எப்படிதான் வேகமாக நெருங்கியதோ...? ஸ்லோமோஷன் படத்திலே பார்க்கும் ஒரு காட்சியைப் போல - ஆனால், சம்பந்தப்பட்டவன் - அவனது ஆசை

மனைவியாயிற்றே - ''மைகாட்!'' என்று கத்திக்கொண்டு காரின் கதவைத் திறந்துகொண்டு ஓடிவந்தான்.

'கிரீச்! கிரீச்!' என்று பல வாகனங்கள் பிரேக்கை அழுத்தியதில் ஏற்பட்ட பயங்கர சப்தங்கள். சில அடி உயரம் மேலே பறப்பது போல் எழுந்த திலகா, சட்டென்ற சப்தத்துடன் சிறிது தூரத்தில் துணியாகத் துவண்டு விழுந்தாள். ஒரு வினாடியில் அவளைச் சுற்றி ரத்தம் வெள்ளமாகப் பரவியது. போக்குவரத்துப் போலீஸ் எங்கிருந்தோ விசிலை ஊதிக்கொண்டு வந்துவிட்டான். நடைபாதையில் மழைக்காக ஒதுங்கி நின்றவர்கள் எல்லோரும் ஓடிவந்து சூழ்ந்து கொண்டனர்.

''திலகா! மை ஸ்வீட்டி...'' என்று அலறிய மனோகரன் பைத்தியக்காரன்போல் கூட்டத்தைப் பிளந்துகொண்டு உள்ளே நுழைந்தான். இனிப்புப் பெட்டிகள் திறந்து கொண்டு லட்டும், ஜிலேபிகளும் சிதறிக்கிடக்க - கையைப் பிடித்தபடி மழைகோட்டு உடலை மறைக்க, திலகா தன் நினைவின்றி ரத்தவெள்ளத்திலே கிடந்தாள். கூட்டத்திலே யாரோ ஒரு டாக்டர் ஓடிவந்து குனிந்து கைநாடியைப் பரிசோதித்து 'உயிர் இருக்கு' - என்று நம்பிக்கை தெரிவித்ததும்தான் மனோகரனுக்கு உயிர் வந்தது - ''தாங்யூ டாக்டர்!'' தழதழத்துக் கூறிவிட்டு மண்டியிட்டபடி குனிந்து அவள் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

போக்குவரத்து போலீஸ், விநாடியில் கூட்டத்தை ஒதுக்கிவிட்டு வாக்கி டாக்கியில் பேசினான். சில நிமிஷங்களில் ஆம்புலன்ஸ் விரைந்து வந்துவிட்டது.

''ஆர்.கே.கான் ஆஸ்பத்திரி'' என்ற அதிகாரக் குரலில் போலீஸ் உத்தரவிட ஆம்புலன்ஸ்காரர்கள் செயல்பட்டனர். காருக்குள்ளே ஏறி உட்கார்ந்து, கன்னத்திலே வழிந்த கண்ணீரைக்கூட துடைக்கத் தோன்றாது மனோகரன் ஆம்புலன்சைப் பின் தொடர்ந்தான்.

''மூளையில் பலத்த அடி - உடனே நியூரோ ஸர்ஜன் பார்த்தாக வேண்டும்'' என்று வைத்தியர் கூறியதைக் கேட்டதும் மனோகரன் திகிலில் ஆடிப் போய்விட்டான். நெஞ்சுலர்ந்து, நாவறண்டு, கால்கள் தள்ளாட, தன் தாயாருக்கு விஷயத்தைத் தெரிவிக்கப் பொதுமக்கள் உபயோகத்திற்கு என்று ஆஸ்பத்திரியில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த டெலிபோன் பெட்டிகள் நிறைந்த பகுதிக்கு நடந்தான்.

# 7

மறுநாள் காலை, விடிந்த சிறிது நேரத்திற்குள் அவன் வீட்டின் வரவேற்பறையைப் பெரியதொரு கூட்டம் நிறைத்துக்கொண்டிருந்தது. செய்தியைக் கேள்விப்பட்டும் - காலை பத்திரிகையில் பார்த்து விட்டும் நண்பர்களும் உறவினர்களும் அவனைக் காண ஓடோடி வந்து விட்டிருந்தனர்.

திலகாவின் தாய் முன்னதாகவே இறந்துபோய் விட்டிருந்தாள். தந்தை ஸ்டாங்கரிலிருந்து டாக்ஸியில் வந்து இறங்கினார். உள்ளே வந்தார். அந்தக் கூட்டத்தைப் பார்த்ததும் துயரத்தில் குலுங்கிவிட்டார். ''திலகா, என் மகளே! என்னம்மா ஆச்சு? எந்தப் பாவி இந்த அநியாயத்தைச் செஞ்சான்... அம்மாடி... என் செல்வமே...'' என்று அலறிய அவரை யாரோ கட்டிப் பிடித்துத் தேற்றி அப்பால் இழுத்துச் சென்றனர்.

இரவு பன்னிரண்டு மணிக்கு மேல்தான் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்தான் மனோகரன். மூளையைப் பற்றிய ஆபரேஷன்கள் எல்லாம் வெண்ட்வொர்த் ஆஸ்பத்திரியில் நரம்புப் பகுதியைச் சேர்ந்த வைத்தியக் குழாம்தான் செய்யவேண்டும் என்று உடனடியாக இன்னொரு ஆம்புலன்ஸில் திலகாவை அந்த ஆஸ்பத்திரிக்கு அனுப்பி உள்ளே அனுமதித்து விட்டனர்.

மூளை சம்பந்தப்பட்ட சிகிச்சைப் பகுதியின் தலைவர் டாக்டர் கூப்பரைப் பார்த்துப் பேசவேண்டுமென்ற அவா அவனுக்கு. வெகு நேரம் வரவேற்பறையில் காத்திருந்தான். ''இப்போ ஒன்றும் சொல்ல முடியாது - இன்டன்சிவ் கேர் யூனிட்டில் வச்சிருக்கோம்'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு விரைந்து சென்ற அந்தப் பெரிய டாக்டரின் பின்னால் கெஞ்சிக்கொண்டு ஓடவா முடியும்? அன்று இரவு படுக்கையிலிருந்து எத்தனையோ தடவை எழுந்து உட்கார்ந்தான்.

அவனையும் மீறிப் பொங்கி வழிந்த கண்ணீரைத் துடைத்துத் துடைத்துக் கண் இரப்பைகள் சிவந்து வீங்கிப்போயின. கண்களில் எரிச்சல், ஒரே தலைவலி. 'திலகா! மை ஸ்வீட்டி - உனக்கா இந்த விபத்து... என்னைக் கூட மறந்துபோய் ஆஸ்பத்திரியிலே படுத்துக் கிடக்கிறியே, என் கண்ணே!' - அவனது உள்ளம் ஓயாது புலம்பி அழுதது - பொழுதைத் துயரமும் கண்ணீருமாகக் கழித்தான்.

அண்ணி சற்குணம் சமையலறையைப் பிடித்துக் கொண்டுவிட்டிருந்தாள். அவள் கெட்டில் நிறையத் தேநீரைத் தயாரித்துக்கொண்டுவந்து, வந்தவர்களுக்கு பிஸ்கட்டுடன் விநியோகித்துக் கொண்டிருந்தாள். யோகவதி கன்னத்திலே கையை ஊன்றிக்கொண்டு ஒரு பக்கம் மௌனமாகத் திகைப்புடன் உட்கார்ந்திருந்தாள்.

''யார் அந்த மடையன்... - அப்படிக் காரை வேகமாக ஓட்டியவன்? கட்டாயம் குடிச்சிருந்திருப்பான். வேகமாக வந்தது அவன் பிசகு ...'' - கூட்டத்திலே கசமுசவென்று பலரின் குரல்.

'யார் பிசகாக இருந்தால் என்ன? என் அருமைத் திலகா தன் நினைவின்றி உயிருக்கு மன்றாடிக் கொண்டு கிடக்கிறாளே...!' புலம்பி அழுதது மனோகரின் உள்ளம்.

''கொஞ்சம் சூடா டீ சாப்பிடப்பா''- மரத்தட்டிலே ஆவி பறக்க தேநீர்க் கோப்பையைக் கொண்டு வந்து அவன் முன் முக்காலிமீது வைத்தாள் அம்மா பாஞ்சாலி.

அன்று காலைகூட திலகாதான் அவன் ஆபீஸிற்குப் போகுமுன் தேநீர் அளித்து உபசரித்தாள்.

அவனுக்குத் துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்து விட்டது. ''அம்மா! பாம்பே மிட்டாய் ஹாலிலிருந்து என்னைப் பார்த்துத் தலையை ஆட்டிவிட்டு வந்தாள் அம்மா.. எல்லாம் ஒரு நொடி... என் திலகாவுக்கு இப்படி ஒரு விபத்து வரணுமா...?''- தாயைக் கட்டிக்கொண்டு மனோகரன் கதறி அழுதுவிட்டான்.

''மனோ! வைத்தியநாதருக்கு ஒரு முடிப்பு எடுத்து வச்சிருக்கேன். அவர் கோயிலில் சிவராத்திரியின்போது முழுநேரமும் மூணுகால பூஜைக்கும் கண் விழித்திருந்து தேவாரம், திருவாசகம் படிச்சவ திலகா... அதுக்கு எந்தக் கஷ்டமும் வராது. அவர்



காப்பாத்துவார்'' - தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மகனுக்கு ஆறுதல் சொன்னாள் தாயார்.

''ஆஸ்பத்திரிக்கு மறுபடியும் எப்போ போனா சங்கதி தெரியும்...? -'' கூட்டத்திலிருந்த ஒருவர் கேட்டார்.

அப்பொழுது தொலைபேசி மணி கிணுகிணுத்தது. திடுக்கிட்டு எழுந்து நின்றான் மனோகரன். அவனுக்கு அதைக் கையில் எடுக்கக் கூடத் துணிவிருக்கவில்லை.

''தம்பி இரு, நான் எடுக்கறேன்.'' அண்ணன் சுப்ரமணி வேகமாக நகர்ந்து தொலைபேசி ரிஸீவரைக் கையில் எடுத்தான். எல்லார் பார்வையும் அவன் மீது திரும்பியது.

''என்னப்பா, என்ன சேதி?'' பீதியுடன் கேட்டாள் பாஞ்சாலி.

''ஆஸ்பத்திரியிலிருந்து டாக்டர் கூப்பர் கூப்பிடுகிறார். உன்னுடன்தான் முக்கியமா ஏதோ பேசணுமாம்.''

எச்சிலை விழுங்கிக் கொண்டான் மனோகரன். நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது.

கையில் ரிஸீவரை வாங்கிக் கொண்டு காய்ந்து போன உதடுகளை நாவால் தடவிக்கொண்டான்.

''ஹலோ டாக்டர்!'' வார்த்தைகள் தடுமாறின.

''டாக்டர் கூப்பர் பேசுகிறேன். உங்களிடம் முக்கியமானதொரு விஷயம் பேசவேண்டும். உடனே வர முடியுமா? உங்க குடும்ப வைத்தியர் மில்லர் கூட இங்கேதான் இருக்கிறார்.''

''என் மனைவி எப்படி இருக்கிறாள் டாக்டர்'' மூச்சு முட்டியது அவனுக்கு.

''அதைப்பற்றி நேரே பேச விரும்புகிறேன். உடனே வர முயற்சி செய்யுங்கள்.''

''எஸ் டாக்டர்... இதோ வந்துட்டேன்'' போனை வைத்துவிட்டு நெற்றிமீது பூத்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

''என்ன சொல்கிறார் டாக்டர்...?'' ஏக காலத்தில் எல்லோருடைய குரல்கள்...

''என்கிட்டே என்னவோ பேசணுமாம். என்னென்னு

''மூளையில் ரத்தம் தேங்கி - கட்டி தட்டிப் போயிருக்கும். அதை ஆபரேஷன் பண்ணி எடுக்கணுன்னா - உன் கையெழுத்தும் சம்மதமும் வேண்டும்... அதுக்குத்தான் கூப்பிட்டிருப்பார். எங்க சகலபாடி மகனுக்கு இதுமாதிரி மோட்டார் விபத்து நேர்ந்தபோது- அடிபட்டு நினைவில்லாம கிடந்தான் - தலையில் ஆபரேஷன் செஞ்சு பிழைக்க வைச்சுட்டாங்களே?'' கூட்டத்தில் ஒருவர் தெம்பாக பேசினார்.

''அந்த மாதிரி ஆபரேஷன் செஞ்சா திலகாவும் பிழைச்சுக்கும். மனோ, ஒரு வாய் டீ குடிச்சிட்டுப் போப்பா... ராத்திரி முழுவதும் நீ கொலைப்பட்டினி'' தாயார் வற்புறுத்தினார்.

''நான் காரை ஓட்டிட்டு வரேன் - உங்க மனசு இப்போ ரொம்ப குழம்பிப் போயிருக்கு - தூக்கமில்லாம களைச்சுவேற இருக்கீங்க... இந்த நிலையில் நீங்கள் ஓட்டறது சரி இல்லை...'' நண்பர் ஒருவர் உதவி செய்ய முன்வந்தார்.

'நல்ல சேதி கொண்டுவரணும் பகவானே - ' பாஞ்சாலி கடவுளை உள்ளுரப் பிரார்த்தித்தாள். பிரிட்ஜைத் திறந்து காய்கறிகளை எடுத்து மகளிடம் கொடுத்தாள்.

''வந்திருக்கிறவங்கள் எல்லாம் சேதி வரவரைக்கும் இங்கேதான் இருக்கப் போறாங்க... சில பேரெல்லாம் ஒரு வாய் தண்ணிகூட குடிக்காம சேதியைக் கேட்டுப் பதறிட்டு தொலை தூரத்திலிருந்து காரைப் போட்டுண்டு வந்திருக்காங்க. பான்ட்ரியிலிருந்து பெரிய டேக்ஸாவை எடுத்து நீயும் சற்குணமும் எல்லோருக்கும் சமைச்சுடுங்க...''

''என்னத்துக்கு இப்போ இதெல்லாம்?'' கூட்டத்தில் ஒருவர் ஆட்சேபித்தார்.

''வயிறுன்னு ஒண்ணு இருக்கே - அதுக்கு நேரம் காலம் தெரியுமா? தாயா புள்ளையா நீங்கள்ளாம் எங்க கஷ்டத்தைப் பங்கிட்டுக்கொள்ள எவ்வளவோ தூரத்திலிருந்து ஓடி வந்திருக்கீங்க... பசியோட உங்களை அனுப்பறது ஞாயமா...? யாராச்சும் இந்த வீட்டுக்கு வந்துட்டா எங்க திலகா ஓடிப்போய் சட்டுனு டீ போட்டு எடுத்துட்டு வந்து உபசரிக்கும். ஒரு வாய் சாப்பிடாம ஒருத்தரையும் அனுப்பாது. நல்ல பொண்ணு... தெய்வபக்தி ரொம்ப அதுக்கு...''



மொழி மறுபடியும் விம்மி அழுதாள்.

''ஒண்ணும் நேராது, பயப்படாதீங்க... நல்ல சேதிதான் கேட்கப்போறோம்'' கூடியிருந்தவர்கள் தைரியம் சொன்னார்கள்.

ஆஸ்பத்திரியை நெருங்க, நெருங்க... மனோகரன் மார்பு வேகமாக அடித்துக் கொண்டது. மூச்சே விடமுடியாது நெஞ்சை என்னவோ அடைத்துக் கொண்டுவிட்டது போன்று திணறினான்.

ஆரம்பத்தில் சிறுவனாக இருக்கையில் அப்பாவுடன் சிவராத்திரியின்போது கோவிலில் உட்கார்ந்துகொண்டு தூக்கத்தில் ஆடி விழுவதுண்டு. அவ்வளவுதான் அந்த நிலையில் பக்தி.

அதற்குப் பின் கல்லூரி மாணவனாகியபோது கறுப்பர் பிரச்சினைகளைப் பற்றிய சிந்தனையில் - கருத்து ஆழமாகப் பதிந்துவிட்ட பொழுது - சாமியாவது பூதமாவது என்று அசட்டையாகப் பேசும் மனப்போக்கு ஏற்பட்டிருந்தது.

திலகா அவனது வாழ்க்கையிலே நுழைந்ததும் வேறு ஒரு திருப்பம் உண்டாகியது. அவளை மகிழ்விக்கத்தான் அவன் கோவில்களுக்குச் சென்று வந்தான். அவள் மனம் உருகி தேவார திருவாசகப் பாடல்களை இசையோடு இனிமையாகப் பாடுவதைக் கேட்டுப் பூரித்தான். அதற்காகவே எல்லாப் பிரார்த்தனைக் கூட்டங்களிலும் கலந்து கொண்டான். குத்துயிராக அவள் தன் நினைவின்றிக் கிடக்கும் நிலையில் டாக்டர் பார்க்கவேண்டும் என்று கூப்பிட்டனுப்பியபோது அவன் உண்மையில் அந்த வைத்தியநாதரைத்தான் உள்ளத்திலே துணைக்குக் கூட இப்போது அழைத்தான்.

'கடவுளே! என் திலகாவைக் காப்பாற்றும்.' ஜெபித்துக் கொண்டே இறங்கி உள்ளே தயக்கமாகச் சென்றான்.

வரவேற்பறையில் அவன் வரவிற்காகக் காத்து நின்ற வெள்ளைக்கார நர்ஸ் அவனை உள்ளே அழைத்துச் சென்றாள். நீண்ட நடைவழியே அவளைப் பின்தொடர்ந்த அந்தச் சில வினாடிகள் யுகமாகத் தோன்றியது.

டாக்டர் கூப்பரின் அறைக்குள்ளே அவனை அனுப்பி விட்டு கதவைச் சாத்திக்கொண்டு அவள் சென்று விட்டாள்.

''குட்மார்னிங் மிஸ்டர் தம்பிரான்! உட்காருங்கள்'' உபசரித்தார் டாக்டர். அவர் மட்டும் அங்கே தனியாக இருக்கவில்லை. அவனது குடும்ப வைத்தியர் மில்லருடன் அறிமுகமில்லாத வேறு இரண்டு வைத்தியர்களும் கூட இருந்தனர்.

''குட்மார்னிங் டாக்டர்ஸ்...'' முணுமுணுத்தபடி உட்கார்ந்தான்.

டாக்டர் கூப்பர் தொண்டையைக் கனைத்துக்கொண்டு பேச ஆரம்பிக்குமுன் அவன் பரபரப்புடன் பேசிவிட்டான்.

''என் மனைவியைக் காப்பாற்ற கட்டாயம் ஆபரேஷன்தான் செய்யவேணும் என்றால் நான் உடனடியாக ஒத்துக்கிறேன். தாமதம் வேண்டாம். பொருட்செலவைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. என் சொத்து முழுவதையும் செலவழிக்க நான் தயார். வேறு ஸ்பெஷலிஸ்ட்டுகளை அமெரிக்காவிலிருந்து தருவிக்க வேண்டுமானாலும், செலவுகள் எல்லாவற்றையும் ஏற்கத் தயார்... எனக்கு என் மனைவி பிழைச்சா போதும்...'' அவன் குரல் துயரத்திலே உடைந்தது.

டாக்டர் கூப்பர் எழுந்து அவன் அருகே வந்து மேஜைமீது சாய்ந்தபடி, கையைக் கட்டிக்கொண்டு நின்றார்.

''இந்த ஆஸ்பத்திரியின் தனி அறை கவனிப்பு - மருந்து தியேட்டர் செலவு இவைகளைத் தவிர நீங்கள் ஒரு சென்ட் கூட அதிகம் செலவழிக்கத் தேவையில்லை. நேற்று இரவு முழுவதும் பதினெட்டு டாக்டர்கள் கொண்ட எங்கள் குழாம் உங்கள் மனைவியின் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தது.''

திகைப்புடன் அவன் அவரை நிமிர்ந்து பார்த்தான். என்ன சொல்லப் போகிறார்?

''எல்லா முயற்சிகளும் செய்தாகிவிட்டது. உங்கள் மனைவி பிழைப்பாள் என்பதற்கு எந்தவிதமான நம்பிக்கையும் இனி இல்லை...''

''டாக்டர்'' மேலே பேச முடியாது அவன் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அழுதான்.

டாக்டர் மில்லர் எழுந்து வந்து அவன் தோளைப் பற்றிக் கொண்டு, ''மிஸ்டர் தம்பிரான், நீங்கள் தைரியமாக இருந்தால்தான்



டாக்டர் கூப்பர் சொல்லப் போகிறதைக் கேட்க முடியும். உங்கள் பதிலுக்காக இவர்கள் எல்லோரும் காத்து இருக்கிறார்கள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு உதட்டைக் கடித்தபடி அவன் நிமிர்ந்தான்.

'திருமதி ஹில்டா பார்க்கர் இதே ஆஸ்பத்திரியில் இருதயநோய் பகுதியில் மிகவும் நோய்வாய்ப்பட்டு அபாய நிலையில் இருப்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான்.

''உங்கள் மனைவியின் ரத்தம், தசை, உடல் திரவங்கள் எல்லாம் அந்த அம்மாளின் உடலுக்குப் பொருத்தமானதாக அமைந்துவிட்டிருப்பதைப் பரிசோதனை மூலம், கண்டு பிடித்துவிட்டோம். இதுவரை நாங்கள் தேடிக்கொண்டு இருந்த டோனர் எங்களுக்குக் கிடைத்தாகிவிட்டது. உங்கள் மனைவி இன்னும் சில மணிநேரங்களில் இறந்துவிடுவார்கள்... அவங்க இறந்து விட்டாங்க என்று இதயத்தின் கடைசித் துடிப்பு அடங்கியதும்; அவங்களுடைய இதயத்தை எடுத்து ஹில்டா அம்மாளின் மார்பை அறுத்து, உடனடியாகப் பழுதான, இதயத்தை வெட்டி நீக்கிவிட்டு, இதைப் பொருத்த விரும்புகிறோம். அவங்களுக்கு மறுபடி வாழ்வு கொடுப்பது உங்கள் முடிவில் இருக்கிறது...''

பகீர் என்ற உணர்வு - அடிவயிற்றை முறுக்கிப் பிசைந்துவிட்ட வேதனையில் மனோகரன் துடித்துப் போனான். அவனது அழகு மனைவி - அன்பான திலகா இறந்துவிடப் போகிறாளா...?

''நீங்களே ஒரு வக்கீல் - இதில் பல சிக்கல்கள் இருக்கும். அதனால் உரிய காகிதங்களில் மனப் பூர்வமாக ஒத்துக் கொள்வதாகக் கையெழுத்திட்டுத் தரவேண்டியிருக்கிறது.''

உங்களுக்குப் பூரண சம்மதம் இருந்தால் ஒழிய நாங்கள் இந்த முயற்சியில் இறங்கமாட்டோம். நேரம் இப்போது ஒவ்வொரு வினாடியும் அருமையானது. அதனால் உங்கள் பதிலை விரைவில் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்'' என்றார் டாக்டர் கூப்பர்.

''என் மனைவியைக் காப்பாற்றவே முடியாதுன்னா சொல்றீங்க டாக்டர்...?'' துக்கம் தொண்டையை அடைக்க விம்மினான் அவன். கண் விளிம்பில் கண்ணீர் கூடியது.

ஆளுக்கு ஒரு யோசனை - ஒரே கூச்சல் - குழப்பம் - கோபமான பேச்சுக்கள்.

மனோகரன் திடீரென்று எழுந்தான். கார் சாவியுடன் அவன் வெளியே கிளம்புவதைக் கண்டு அவர்கள் திடுக்கிட்டனர்.

''மனோ...!'' தழுதழுத்தாள் பாஞ்சாலி. அழுதழுது அவள் கண்கள் உப்பிச் சிவந்து விட்டிருந்தன.

''வைத்தியநாத ஈஸ்வரர் ஆலயத்துக்குப் போகணும் போல இருக்கு...தனியா கொஞ்சம் நேரம் போய் பிரார்த்திச்சிட்டு வரேன்.. தயவுசெய்து என்கிட்ட எதுவும் கேட்காதீங்க...'' சொல்லிக் கொண்டே அவன் தோட்டத்திற்குள் இறங்கிக் காரில் விரைந்தான்.

கோயிலில் காலை அபிஷேக ஆராதனைகள் முடிந்து விட்டிருந்தன. அர்ச்சகர் அவனைக் கண்டதும் ஓடி வந்தார். ''திலகா அம்மாவுக்கு எப்படி இருக்கு... விசேஷப் பிரார்த்தனை ஏதாச்சும் செய்யணுமா?'' - ஆதங்கத்துடன் விசாரித்தார்.

''அப்படியேதான் இருக்கு... மௌனமாக பிரார்த்தனை செய்ய வந்தேன். அவ்வளவுதான்'' - சொல்லிவிட்டு, கால் ஷூக்களைக் கழற்றி வெளியே கிடந்த பெஞ்சின் ஓரத்தில் வைத்தான். குழாயில் கால்களைக் கழுவிக் கொண்டு கோயிலை வலம் வரத் தொடங்கினான் - மூன்றாவது முறை முடிந்ததும் தன் பையிலிருந்த சிறு டைரியை எடுத்து இரண்டு தாள்களைக் கிழித்து எடுத்துச் சட்டென்று எழுதிச் சுருட்டி கையில் எடுத்துக் கொண்டான். சந்நிதியில் புகுந்து... உண்டிப் பெட்டி அருகே அவைகளை வைத்து விட்டுக் கைகளைக் கூப்பி தியானித்தான். திடீரென்று கடந்த கார்த்திகை தீபத் திருநாளின் நினைவு வந்தது. செந்தூர வண்ணக் காஞ்சிபுரப் பட்டுச் சேலையும் -கொண்டையில் ரோஜாப் பூவுமாக - திலகா அழகே உருவாக நின்று அகல் விளக்குகளை வரிசையாகப் பொருத்திக் கொண்டிருந்த நினைவு... உடம்பெல்லாம் சிலிர்க்க, கண்கள் பனிக்க சிவலிங்கத்தை உற்றுப் பார்த்தான்.

''வைத்தியநாதா - எனக்கு நீதான் வழிகாட்டி உதவணும். தனியாக முடிவெடுக்க எனக்குத் துணிவே இல்லை...'' -உடலைக் குலுக்கிய விம்மலைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றான்.

அதுசமயம் கோயிலுக்குப் பிரார்த்தனை செய்ய வந்த பெண்கள்



கூட்டத்திலிருந்து ஒரு குழந்தை ஓடி வந்து சந்நிதியில் அவன் அருகே மூச்சிரைக்க நின்றது. ''பேபி! அந்தச் சீட்டுகளில் ஒண்ணை எடுத்துக் கொடும்மா...'' என்று அவன் கேட்டதும் அந்தக் குழந்தை ஓடிச்சென்று உண்டிப் பெட்டியருகேயிருந்த சீட்டுகளில் ஒன்றை எடுத்து வந்து அவன் கையில் கொடுத்துவிட்டு முறுவலித்தது. ''தாங்க்யூ!'' என்று கூறிவிட்டு மற்ற சீட்டை எடுத்து சட்டைப் பையில் போட்டுக் கொண்டான்.

உணர்ச்சிவசத்தில் அவன் உடம்பெல்லாம் ஆடியது. கையில் பிடித்திருந்த சீட்டைப் பிரித்த விரல்கள் நடுங்கின...

சீட்டை நன்றாகப் பிரித்தான். தொண்டை காய்ந்து விடும் போல - நெஞ்சு வெடித்து விடும் போல் அடித்துக் கொண்டது. கண்ணில் நீர் புரண்டது... 'இதயத்தைத் தானம் செய்; தயங்காதே' என்று எழுதப்பட்டிருந்ததை மறுபடியும் வாசித்தான். சிவலிங்கத்தை நிமிர்ந்து பார்த்தான். அர்ச்சகர் லிங்கத்திற்கு அணிவித்திருந்த மாலையிலிருந்து கழன்று ஒரு ரோஜா மலர் தொப்பென்று விழுந்ததும் திகைப்புற்றான். 'கடவுளின் விருப்பம் இப்படி போலும்' - எண்ணியபடியே வெளியே-வந்தான். கடற்கரையை வெறித்தபடி சிறிதுநேரம் திகிலுடன் நின்றான் — கோவிலைத் திரும்பிப் பார்த்தான். கண்களில் பெருகிய நீரைத் துடைத்துக்கொண்டான்.

''திலகா! மை ஸ்வீட்டி... உன் விருப்பம் இதுதான்னு எனக்குத் தெரியும்... அப்படியே செஞ்சுடறேன்...'' சொல்லிக் கொண்டு காரில் ஏறி உட்கார்ந்து நேரே அதை ஆஸ்பத்திரிக்குச் செலுத்தினான்.

## 9

இரண்டு தினங்களுக்குப் பின்னர் மறுபடியும் மனோகரனது வீட்டில் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. புயூனரல் பார்லரிலிருந்து வரப்போகும் சடலத்தை எதிர்பார்த்தவண்ணம் உறவினர்களும் - நண்பர்களும் தோட்டம் முழுவதும்

குழுமியிருந்தனர். இருதய மாற்று அறுவை சிகிச்சை செய்து முடித்தாகி விட்டது - திலகாவின் உடல் உரிய காலத்தில் ஒழுங்கான முறையில் அவனிடம் சேர்க்கப்பட்டுவிட்டது.

அதுவரையிலும் எங்கேயோ ஒரு சிறு துளி நம்பிக்கை அவனுள் ஒட்டிக் கொண்டிருந்தது. இனி - திலகா இல்லை - பெட்டிக்குள் அடங்கியிருப்பது அவள்... உயிரற்ற சடலம் - என்ற பயங்கர உண்மை நெஞ்சிலே ஓங்கி சம்மட்டியால் அடித்தது போன்ற வேதனை - இரவு முழுவதும் படுக்கையில் புரண்டு புரண்டு அழுதான்.

''திலகா - என் கண்ணே - என்னை ஏமாத்திட்டுப் போயிட்டியே-'' -வாய் விட்டுப் புலம்பினான்.

குடும்ப வைத்தியர் மில்லர் வந்து அவனுக்கு ஊசி மருந்து ஏற்றித் தூங்கச் செய்துவிட்டுப் போனார்.

டிரான்ஸ்வால் - கேப் முதலிய பாகங்களில் வசித்த தங்கள் உறவினர்கள் அனைவரும் வரவேண்டுமென்று பாஞ்சாலி ஒரே பிடிவாதமாக இருந்ததால்தான் திலகாவின் இறுதிக் கடனை அவர்கள் இரண்டு நாள் ஒத்திப் போட .வேண்டியிருந்தது. அதுவரை ஆஸ்பத்திரியிலிருந்து எடுத்து வந்த உடலை பியூனரல் பார்லரில் ஐஸ்பெட்டிக்குள் பத்திரமாக வைத்துப் பாதுகாத்தனர்.

வெண்ட்வொர்த் ஆஸ்பத்திரியில் டாக்டர் கூப்பர் தலைமையில் நடந்த இருதய மாற்று சிகிச்சை பற்றிய விவரம் - அதற்குள் பத்திரிக்கைகளில் பத்திபத்தியாக வெளிவந்துவிட்டிருந்தது. ரேடியோ - டெலிவிஷன் எல்லாவற்றிலும் செய்திகளின்போது அறிவிக்கப்பட்டது. ஹில்டா அம்மையாரின் போட்டோவும், தனது இதயத்தைத் தானம் செய்துவிட்ட திலகாவின் படமும் எல்லாப் பத்திரிகைகளிலும் இடம் பெற்றிருந்தன.

உடல் அடக்கம் செய்யப்படப் போகிற தேதி - நேரம் -எல்லா விவரமும் பத்திரிகைகளில் கொடுக்கப்பட்டிருந்தது. அவ்வளவுதான். கேப் நகரிலிருந்து ஜோஹன்ஸ்பர்க் வரை நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை வசித்த மக்கள் நெஞ்சம் நெகிழ்ந்து போய் நிற பேதத்தை மறந்து, வெள்ளையரும் - கறுப்பரும் -இந்தியரும் - கலப்பு வர்க்கத்தவரும் அனுதாபத் தந்திகள் - மலர் வளையங்கள் - பூச்செண்டுகள் என திலகாவுக்கு இறுதி மரியாதை



செய்த வண்ணமிருந்தனர். வந்து குவிந்த மலர்ச் செண்டுகளையும் -மலர் வளையங்களையும் வைக்க இடமின்றி வீடு முழுவதும் நிறைந்து போயின.

குறித்த நேரத்திலே கறுப்பு வண்டி உடலைச் சுமந்து கொண்டு மெல்ல வந்து வாயிலில் நின்றது.

ஓவென்று அலறி அழத்தொடங்கிய பெண்களைப் பார்த்துக் கையமர்த்தினான் மனோகரன்.

''தயவு செய்து யாரும் திலகாவிற்காக அழக்கூடாது... என் மனைவி இறக்கவில்லை. இன்னமும் அவளது இதயம் துடித்துக் கொண்டுதான் இருக்கிறது...''

அவளது உடலைத்தான் அடக்கம் செய்யப்போகிறோம். அவளுக்குப் பிடித்தமான தேவாரங்களை எல்லாரும் பாடுங்கள்...

அவளுக்குப் பிடித்தமான அந்தக் காஞ்சிபுரச் சேலையைக் கட்டி - மலர்மாலை போட்டு - குங்குமப் பொட்டு வைத்து - என் திலகாவை மணப்பெண் போல் சிங்காரியுங்கள்...

''தயவுசெய்து அவள் தனது இறுதி யாத்திரைக்கு நிம்மதியாகப் போக...எல்லோரும் அமைதியாக இருந்து அனுப்பிவையுங்கள். ப்ளீஸ்...''என்று எல்லாரையும் பார்த்துக் கை எடுத்துக் கும்பிட்டு அவன் கேட்டுக் கொண்டபோது... நெஞ்சில் எழுந்த துயரத்தை விழுங்கிக் கொண்டு கையோடு கொண்டு வந்த தோத்திரப் புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டனர். யாரும் ஒரு துளி கண்ணீர்விடத் துணிவின்றி மௌனமாகப் பிரார்த்தனையில் இருந்தனர்.

வீடு முழுவதும் மலரும் - ஊதுவத்தி மணமுமாக இருந்த கோலத்தில் அவனது வேண்டுகோள்படியே பெட்டியைத் திறந்து உடல்மீது அவன் விரும்பிய செந்தூர வண்ணக் காஞ்சிபுரச் சேலையைப் போர்த்தினர். நெற்றியை நிறைத்த குங்குமமும் -கழுத்தின்மீது மலர் மாலையுமாக அவள் மணப்பெண் போல் பெட்டிக்குள் அடங்கி - உரிய நேரத்தில் தன் இறுதிப் பயணத்திற்குப் புறப்பட்டபோது - பாஞ்சாலி தன் கைகளைக் கூப்பி வழியனுப்பிவிட்டுத் தன் மகளின் தோளில் மயக்கமாகச் சாய்ந்துவிட்டாள்.

போக்குவரத்துப் போலீஸார் மோட்டார் சைக்கிளில் முன்னால் மெல்லச் சென்று வழி காட்டியபடி மெதுவாக நகர்ந்தனர்.

'செம்பெருமானே சிவபுரத்தரசே திருப்பெருந்துறையுறை சிவனே, எம்பெருமானே யென்னையாள் வானே யென்னை நீ கூவிக் கொண்டருளே' என்ற திருவாசகத்தைப் பெண்கள் மனமுருகப் பாடிக் கொண்டு பின்னால் நடக்க மெல்ல அந்தக் கறுப்பு வண்டி திலகாவின் பொன்னுடலைச் சுமந்து கொண்டு நகர்ந்தது.

அந்திநேரம் போக்குவரத்து அங்கங்கே ஸ்தம்பித்து நின்றது. தொப்பியைக் கழற்றி ஆண்கள் தலையைத் தாழ்த்தி மௌனமாக பிரார்த்தனை செய்து அவளுக்கு இறுதி மரியாதை தெரிவித்தனர். நண்பர்கள் இருவர் இடையே இன்னொரு கருப்புக் காரில் மயானத்திற்குப் புறப்பட்ட மனோகரன் அழவில்லை. ஜகராண்டா மலர்பாய் விரித்த சாலை வழியே அவள் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டே போவதைத் திகைப்புடன் பார்த்தபடி செயலற்று உட்கார்ந்திருந்தான்.

காரியங்கள் முடிந்த பின்னர் - அவன் தன் தாயாருக்குத் துணையாக வீட்டில் அண்ணனது பெரிய மகளைத் தங்க வைத்து விட்டு - தன் ஆபிஸ் விவகாரங்களை மானேஜர் வசம் ஒப்படைத்துவிட்டு, வெளிநாட்டுக்குப் பயணமாகி விட்டான்.

ஐரோப்பா முழுவதும் சுற்றி முடித்தான் - அமெரிக்காவில் சில நாட்கள் தங்கியிருந்தான் - ஆஸ்திரேலியா - ஜப்பான் - பாரதம் - என்று ஓரிடத்திலும் தங்க மனம் நிலை கொள்ளாது - அமைதியின்றி அலைந்தான் - அலைந்தான் - திலகாவின் இழப்பை மறக்க ஊர் ஊராகச் சுற்றிக் களைத்தான்...

பாரதத்திலே ரிஷிகேஷத்தில், ஒரு பெரியவரைச் சந்தித்தான். தன் இழப்பைப் பற்றிச் சொல்லி, ''அமைதியைத் தேடி அலைகிறேன் -ஆனால் ஒரு துளிகூட இன்னமும் கிடைக்கவில்லை'' என்று புலம்பினான்.

அவர் சிரித்தார். ''வெளியே தேடினால் கிடைக்காத வஸ்துதான் அமைதி - உன் உள்ளத்துக்குள்ளேயே தேடிப்பார், விரைவில் கிடைக்கும்'' என்றார்.

அவரது வார்த்தைகள் அவனுக்குச் சிறிது ஆறுதலைக்



கொடுத்தன. முடிவில் ஊருக்குத் திரும்பினான்.

ஐந்து மாதங்களாக அவன் பார்க்காத சில முக்கிய ஃபைல்கள் -அவன் பெயருக்கு வந்த கடிதங்கள்- சில தந்திகள் எல்லாவற்றையும் அலுவலகத்துக் கணக்கர் சேகரித்து ஒரு தோல் பைக்குள் பத்திரமாக வைத்திருந்தார்.

ஆபிஸிற்கு வந்ததும் முதல் வேலையாக அவன் கவனம் அந்தப் பையில்தான் லயித்தது.

ஃபைல்களைப் புரட்டிப் பார்வையிட்டான். கடிதங்களையும் தந்திகளையும் பிரித்துப் படித்தான். அவை அனைத்தும் வெளிநாட்டு நண்பர்களிடமிருந்து அனுதாபச் செய்திகளைக் கொண்டு வந்தவை. அலுப்புடன் அவைகளை ஒரு பக்கமாக வைத்துவிட்டுக் கடைசியாக அடியில் இருந்த அந்த வெள்ளைக் கடித உறையைக் கையில் எடுத்தான். அது உள்ளூரிலிருந்து வந்த கடிதம். உயர்ந்தவகைக் காகித உறைக்குள் அழகாக மடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. கையெழுத்து அவனுக்கு முற்றிலும் புதிது - இடது பக்கம் சிறிது சாய்ந்த வாக்கிலே காணப்பட்ட தீர்க்கமான எழுத்துக்கள்.

பரபரப்புடன் கடிதத்தின் கீழே போடப்பட்டிருந்த கையெழுத்தை முதலில் கவனித்தான்.

திருமதி ஹில்டா பார்க்கர்தான் அவனுக்கு அந்த கடிதத்தை எழுதியிருந்தார். அந்த இருதய மாற்று சிகிச்சை, வைத்தியர் குழாமுக்குப் பெரும் வெற்றியாக அமைந்துவிட்டிருந்தது. 'ஹில்டா பார்க்கர் உயிருடன் இருக்கிறார்' என்பதை அவன் வெளி நாட்டுப் பயணத்தின் போது பத்திரிகைகளில் பார்த்தான் - ஆனால் அதிகம் தெரிந்து கொள்ள அப்போது விரும்பவில்லை.

கடிதத்தைப் பிடித்துக் கொண்டிருந்த அவன் விரல்கள் நடுங்கின. துயரம் கலந்த வியப்புடன் அதைப் படித்தான்.

அன்புள்ள மிஸ்டர் தம்பிரான்,

நான் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டு சில நாட்கள் ஆகின்றன. எழுந்து நடக்கிறேன். தோட்டத்திற்குள் உலவுகிறேன். தினமும் பல மாத்திரைகளை விழுங்க நேர்கிறதே என்ற சங்கடத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. உடலில் தெம்பும் ஆரோக்கியமும் முன்னைவிட அதிகம் கூடி விட்டிருக்கின்றன.

எப்பொழுதோ இறந்து போயிருக்க வேண்டியவளுக்கு மறுவாழ்வு கொடுத்து உதவப் பெருந்தன்மையுடன் முன்வந்த உங்களை நான் சந்தித்து என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள பெரிதும் விரும்புகிறேன். எங்கேயோ ஒரு சமயம் உங்களைப் பார்த்த நினைவு லேசாக வருகிறது. டாக்டர்கள் உத்தரவு கொடுக்கும்வரை நான் எங்கும் வெளியே சென்று வர இயலாது. தயவுசெய்து தாங்கள் என் வீட்டிற்கு ஒரு முறை வந்து போகவேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் வரப்போவதை தொலைபேசி மூலம் முன்னதாகவே என் செயலாளருக்குத் தெரிவித்தால் நலமாக இருக்கும். வணக்கம்.

— ஹில்டா பார்க்கர்

நீண்ட நேரம் அந்தக் கடிதத்தையே பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தான் மனோகரன். பின்னர் துணிவுடன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த தொலைபேசி எண்களைச் சுழற்றி திருமதி பார்க்கரின் செயலாளரிடம் பேசினான். தேதி, நேரம் எல்லாவற்றையும் குறித்துக் கொண்டான்.

அந்த ஞாயிற்றுக்கிழமை, பத்துமணி அளவில் அவன் ஹில்டா பார்க்கரை அவளது வீட்டில் சந்திப்பதாக இருந்தது. காரை நிறுத்திவிட்டு மெல்ல இறங்கினான். அழைப்பு மணியைத் தொட்டதும், சீருடை தரித்த ஆப்பிரிக்க வேலையாள் கதவைத்



திறந்தான். ''குட்மார்னிங் மிஸ்டர் தம்பிரான். மேடம் ஈஸ் வெயிட்டிங் ஃபார் யூ...'' அவனுக்கு வழிகாட்டிக் கொண்டு முன்னால் ஏகினான்.

முன்பு ஒருமுறை பார்த்து மயங்கிய அதே வரவேற்பறைதான். அகலமாகத் தரையைத் தொட்ட அந்தப் பெரிய ஜன்னல்களைப் புதிய திரைகள் அலங்கரித்துக் கொண்டிருந்தன. சுவரிலே இன்னும் புதிய சித்திரங்கள் சேர்ந்து விட்டிருந்தன.

கால் புதைந்திடக் கம்பளத்தின்மீது மெல்ல நடந்து வந்து -கையோடு கொண்டுவந்த பிஸ்கட் டின்னை மேஜைமீது வைத்துவிட்டுத் திரும்பியபோது பார்த்தான்.

சிவப்பு வெல்வெட் வைத்துத் தைத்த அலங்காரமான பழைய காலத்துப் பெரிய சோபாவிலே ஜன்னல் அருகே ஹில்டா உட்கார்ந்திருந்தாள். ''குட்மார்னிங் மிஸ்டர் தம்பிரான் - இப்படி அருகில் உட்காருங்கள்!'' தூக்கிவாரிப்போட்டது அவனுக்கு.

''குட்மார்னிங் மிஸஸ் பார்க்கர்-'' என்று சொல்லிக் கொண்டே அவள் காட்டிய நாற்காலியில் அமர்ந்தான். ஏனோ உணர்ச்சிவசத்தில் அவன் உடல் நடுங்கியது.

''மிஸ்டர் தம்பிரான், எனக்குத் தாங்கள் செய்துள்ள இந்த மாபெரும் உதவியை வெறும் வார்த்தைகளால் புகழ்ந்து என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள முடியவில்லை. இருதயமாற்றுக்கு நீங்கள் மறுப்புத் தெரிவித்திருக்கலாம். நான் மறுநாளே மரணமடைந்திருக்கலாம் -ஆனால் தாங்கள் பெருந்தன்மையுடன் -துணிவுடன் தங்கள் அன்பு மனைவியின் இதயத்தை எனக்குத் தானமளித்து மறுவாழ்வு கொடுத்தீர்கள் - எவ்விதச் சங்கடமுமின்றி - திடமாக நான் இப்போது வாழ்கிறேன். இன்னும் நீண்ட காலம் வாழ்வேன் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.''

மௌனமாக அருகிலிருந்த பெரியதொரு பூச்சாடியை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் மனோகரன்.

''இந்த அதிசயம் என் வாழ்வில் நடந்தது ஒரு விதத்தில் நல்ல அறிகுறியென்றே நான் நம்புகிறேன்.

''உடல் வெளித்தோற்றத்தில் வெள்ளை - கறுப்பு என்று நாமாக

நம்மைப் பிரித்துக் கொண்டிருக்கிறோம். ரத்த - தசை -இதயம் இவைகளில் வெள்ளை - கறுப்பு என்ற பேதம் கிடையாது என்று இந்த சிகிச்சை புரிய வைத்திருக்கிறது. நிறவெறி பிடித்து அலையும் பலரது அறிவுக் கண்கள் இந்தச் சம்பவத்திற்குப் பின்னராவது திறக்கும் என்று நினைக்கிறேன்.

''கறுப்பர் - வெள்ளையர் எல்லோரும் இந்த நாட்டு மக்கள் -சம உரிமை - சம அந்தஸ்து - சம வாய்ப்புகள் எல்லாம் இரு நிறத்தவர்களுக்கும் பொதுவானது என்று புரிந்துகொள்ளும் காலம் வெகு தொலைவில் இருக்கவில்லை. உடல்நிலை காரணமாக நான் இந்த இனப்போராட்டத்தில் முழுதாகப் பங்கெடுத்துக் கொள்ளமுடியாது ஒதுங்கியே இருந்தேன். இப்போது இளமையான ஒரு இதயம் என் மார்பில் துடிக்கிறது. காயகல்பம் சாப்பிட்டவள் போல் எண்ணங்களும் இளமையாகி, உணர்வுகள் புதிய வேகத்துடன் புறப்பட்டு என்னுள் எழுந்து என்னை முழுவேகத்துடன் செயல்பட ஊக்குவிக்கிறது - இனி நான் பயப்படமாட்டேன். துணிவுடன் அழுத்தப்பட்ட மக்களின் போராட்டங்களில் இறங்கிவிடுவேன்.

சிறைத் தண்டனை - ஹவுஸ் அரஸ்ட் - ராபின் தீவில் சிறைவாசம் எதற்கும் அஞ்சேன்.

''ஒரு காலத்தில் இந்த நாட்டில் இனவேற்றுமை ஒழிந்து மக்கள் எல்லாரும் மனிதாபிமானத்துடன் வாழ்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்தப் பெருமையில் உங்கள் மனைவிக்கும் பங்கு உண்டு. ஏன் தெரியுமா? அவளது ஒரு உயிர் என் நெஞ்சுக்குள்ளே தீவிரமாகத் துடித்துக் கொண்டு என்னை உற்சாகப்படுத்தி இந்தச் செயலில் ஊக்குவிக்கிறது.

நெஞ்சம் நெகிழ்ந்து போனான் மனோகரன். ''மிஸஸ் பார்க்கர், உங்களுக்கு இந்நகரத்துப் பெண்கள் சங்கம் 'அன்னை' என்ற பட்டம் வழங்கி கௌரவித்தார்கள் இல்லையா...? சில பத்திரிகைகள் உங்களை 'அன்னை ஹில்டா' என்றுதான் குறிப்பிடுகின்றன. என் மனைவி திலகாவுக்கு, ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டுமென்ற ஆசை தீவிரமாக இருந்தது. பல காரணங்களால் அந்த பாக்யம் கிட்டவில்லை. என்னோடு மனைவியாக வாழ்ந்த காலத்தில் அடையாத அந்தப் பேற்றை இப்போது உங்களோடு ஒட்டிக்



கொண்டதும் அடைந்துவிட்டாள். அவளது உயிர்த் துடிப்பின் ஒரு துளி, இதயமாக உங்கள் நெஞ்சிலே அடித்துக் கொள்வதைக் கண்டு என் திலகாவை.... 'அன்னை ஹில்டா' உருவில் இப்போது நான் பார்க்கிறேன். என் திலகா இப்போது இந்த நாட்டில் உள்ள எல்லா இனமக்களுக்கும் ஒரு அன்னையாகி விட்டாளே இதைவிட வேறு பெருமை வேண்டுமா சொல்லுங்கள்?''

''அம்மா ஹில்டா... எங்கள் வழக்கப்படி நான் உங்கள் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன் - 'அமைதி பெறுக' என்று வாழ்த்துங்கள்! அது போதும்'' என்றான் நாத்தடுமாற.

எழுந்து அருகில் சென்று குனிந்து அவளது பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டான்.

பேச முடியாது உணர்ச்சிவசத்தில் ஒருகணம் அவள் மௌனமானாள் - பின்னர் அருகிலிருந்த ஒரு பொத்தானை அழுக்கினாள்.

ஆப்பிரிக்க வேலையாள் மரத்தட்டில் கேக்கும், தேநீரும் கொண்டுவந்து மேஜைமீது வைத்துவிட்டுப் போனான்.

சாப்பிடச் சொல்லி அவனை உபசரித்தாள்.

சிறிது பொழுதில் மறுபடி அந்த ஆப்பிரிக்க வேலையாள் வர்ணக் காகிதத்தில் சுற்றிய ஒரு பொருளைக் கொண்டுவந்து மேஜைமீது வைத்துவிட்டு நகர்ந்தான்.

''மிஸ்டர் தம்பிரான் எனக்கு மறுவாழ்வு தந்த உங்களுக்கு என்ன பரிசு கொடுப்பது என்று எனக்குக் குழப்பமாக இருந்தது. இனி நான் வாழும் ஒவ்வொரு வினாடியும் மிகவும் அருமையானது. பணத்தால் வாங்க முடியாத விலைமதிப்பற்ற நேரம் - இதைத் தந்த தங்கள் மனைவியின் நினைவு எப்பொழுதும் பசுமையாக இருக்க - இந்தச் சண்பக மலர்ச் செடியைத் தங்கள் தோட்டத்திலே ஒரு சிறு பரிசாக ஏற்று நட்டு வையுங்கள். சண்பக மலர் என்றால் இந்தியர்களுக்குப் பிடிக்கும் என்பது எனக்குத் தெரியும்'' சொல்லிக் கொண்டே அந்த வர்ணக் காகிதத்தில் சுற்றிய செடி தாங்கிய சிறு பூந்தொட்டியை அவன் கையில் தூக்கிக் கொடுத்தாள்.

கொண்டான்.

அந்தச் செடியை வீட்டுத் தோட்டத்தில் அவன் நட்டு வைக்கப் போவதில்லை. இனி அவனும் இனப் போராட்டத்திலே தீவிரமாக இறங்கிவிடப் போகிறான். ஒரு சமயம் சிறைக்குச் செல்ல நேரிட்டால், அந்தச் செடி கவனிப்பாரற்றுக் காய்ந்து போய்விடுமே! திலகாவுக்குப் பிடித்த அம்கேனி வைத்தியநாதர் ஆலயத்துத் தோட்டத்திலே அதை நட்டுவைக்கப் போகிறான்.

அது வளர்ந்து பெரிய மரமாகிப் பூக்கும் - அவளது நினைவு, சண்பக மலரின் மணமாக ஈஸ்வரனின் பாதங்களை அலங்கரிக்கட்டும்.

அவள் மலர் போன்று கடவுளுக்கும் இனியவள் ஆயிற்றே?

காரை ஓட்டிக் கொண்டு சென்றான்.

# மாலதி ஒரு அதிர்ச்சி

## 1

''கொஞ்சம் இப்படித் திரும்பிப் படுக்குறீங்களா?'' அந்தக் குரல் கிணற்றுக்குள்ளிருப்பது போல் கேட்டது. கஞ்சியில் மொட மொடத்த சீருடை தரித்த நர்ஸின் நெஞ்சின் மீது, தான் சாய்ந்திருப்பதை உணர்ந்தாள் மாலதி. மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தாள். சங்கிலித் தொடராக நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தன.

ஆமாம்! அது ஒரு பிரபல தனியார் மருத்துவமனை. அதில் அவள் அந்த ஏ.சி. அறையில் அனுமதிக்கப்பட்டு நான்கு நாட்களுக்குமேல் ஆகிவிட்டனவே. நீலமலர்கள் போல் மிருதுவாக விழித்து மென்மையாகச் சிரித்த அந்த நர்ஸ்கூட அவளுக்குப் பழக்கமாகி விட்டிருந்தாள்.

''இன்னிக்கு என்ன கிழமை... இப்ப மணி என்ன?'' மெல்ல விசாரித்தாள்.

''செவ்வாய்க்கிழமை காலை ஆறுமணி ஐம்பத்தைந்து நிமிஷம். நீங்கள் ராத்திரி நல்லாத் தூங்கினீங்களா?'' கேட்டபடி அவளை மெல்லக் கட்டிலின் ஓரத்தில் நகர்த்தினாள் நர்ஸ்.

''டாக்டர் வர ஒரு மணி நேரமிருக்கு, அதுக்குள்ளே நீங்க பல் துலக்கி உடம்பு துடைச்சுக்கிடுங்க. சுத்தமா வேற உடை மாத்திக்கிட்டு ரெடியாயிடணும். கொஞ்சம் வாயைத் திறக்கிறீங்களா?''

''அந்த பிரஷ்ஷை என்கிட்டயே குடு. என்னால் தேச்சுக்க முடியும்'' மாலதி பிரஷ்ஷை வாங்கிக் கொண்டாள். சிரமத்துடன் மெல்ல நிமிர்ந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டாள். அந்த அறை குளிர்சாதன வசதியுடைய தனிப்பட்ட, விஷேச அறை. அறை வாடகை, நர்ஸ் கவனிப்பு, டாக்டர் பீஸ், ஸ்பெஷலிஸ்டுகள் வந்து

பார்க்க மருத்துவச் செலவு என எதைப் பற்றியுமே அவள் கவலைப் படவில்லை. அவளது வசதிகளுக்கு மிஞ்சித்தானே பணம்'' என்ற விரக்தி மனப்பான்மை மனதில்.

பல் துலக்கியதும், நர்ஸ் அவளது உடலை மெல்ல வெந்நீர் பிழிந்த துண்டால் துடைத்து விட்டாள். வெள்ளைத் துவாலையால் ஈரம் போக ஒற்றி எடுத்து வாசனைப் பவுடர் பூசி அலமாரியில் அவள் பெட்டியிலிருந்த நைட் கவுனை எடுத்துப் போட்டுவிட்டாள்.

''இந்த இரவு ஆடையிலேயே படுத்திருங்க, புடவை தேவையில்லை. இப்ப ஸ்பெஷலிஸ்ட் வந்து பார்க்கப் போறார். கொஞ்சம் காப்பியும், இந்த பிஸ்கட்டும் சாப்பிடுங்கள்'' உபசரித்தபடி தலையணைகளை அடுக்கி வைத்து அவளை மெல்ல படுக்கைமீது சாய்த்து அமர்த்தினாள் நர்ஸ்.

''காப்பி, பிஸ்கட்...'' மாலதிக்கு குமட்டிக் கொண்டு வந்தது.

''வேண்டாம் நர்ஸ் எங்க வீட்டு சமையல்காரம்மாவை கொஞ்சம் மோர்க்கூழ் கொண்டுவரச் சொல்லியிருக்கேன். அத்தோட கொஞ்சம் காரமா மிளகாய் துவையல் எடுத்து வரச் சொல்லியிருக்கேன்.''

''டாக்டர் உத்திரவு இல்லாமல் கண்டதை வரவழைச்சு சாப்பிடக் கூடாதம்மா''

''உனக்குத் தெரியாதா. நேத்து டாக்டரே சொல்லிட்டாரே, எது வேணுமானாலும் நான் சாப்பிடலாம்னு. ஆனால் எதையுந்தான் சாப்பிட முடியலே. நாக்கு செத்துப் போயிருக்கு. இனிப்பை வாயில் வச்சாலும் வேப்பங்காயா கசக்குது.''

''உடம்பு குணமாயிட்டதும் எல்லாம் சரியாயிடும். கவலைப்படாதீங்க'' மெல்ல அன்புடன் தோள்களைத் தட்டினாள் நர்ஸ்.

''எல்லாமே சரியாகிடும். எனக்குத் தெரியும். ஹூம்! நர்ஸ் தயவுசெய்து அந்தக் காப்பியையும் பிஸ்கட்டையும் இங்கிருந்து எடுத்துக்கிட்டு போயிடு. எனக்கு குமட்டுது. வராந்தாவிலே நிக்கறவங்க யாரையும் உள்ளே விடாதே. தொண தொணன்னு பேசினா எனக்குத் தலையை வலிக்குது.''

''யாரும் தொந்திரவு செய்யக்கூடாதுன்னு அறைக் கதவு மேலே



எழுதி அறிக்கை ஒட்டியிருக்காங்க. யாரும் டாக்டர் உத்திரவில்லாம வரமாட்டாங்க.''

''எங்க சமையற்காரம்மா ஜானம்மாவை மட்டும் விட்டுடு, பாவம்'' பேசும்போதே அவளுக்கு அழுகையாக வந்தது. ஜானம்மா நாள் முழுவதும் அருகிலேயே இருக்க மாட்டாளா என்ற ஏக்கம்.

''கட்டாயம் அவங்களை அனுப்பி வைக்கிறேன். கவலைப் படாதீங்க'' நர்ஸ் மாலதியைக் கனிவுடன் பார்த்துவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு போய் விட்டாள்.

சற்று நேரம் கழித்து அறையைச் சுத்தம் செய்கிற வேலையாள் வாளியும் துடைப்பமும் துணியுமாக உள்ளே வந்தான். இமைகளை மெதுவாகத் திறந்து பார்த்தாள்.

அவனுக்குக் கிட்டத்தட்ட அறுபது வயதிருக்கும். கடின உழைப்பால் தளர்ந்துவிட்டிருந்தான். கையில் தொங்கிய தசை -முண்டாசினின்று காதோரத்தில் எட்டிப் பார்த்த நரைமுடி -முகத்திலே சுருக்கங்கள் போட்டிருந்த கோடுகள் எல்லாவற்றையும் அவள் ஊன்றிப் பார்த்தாள். ஓரம் நைந்த காக்கிச் சீருடை, பற்றாக்குறையைப் பறையறிவித்த முகம், குனிந்து நிமிரும்போது அவன் நெஞ்சினின்றும் எழுந்த பெருமூச்சு எல்லாமே அவளுக்கு அவள் தந்தையை நினைவுறுத்தின.

பாவம் அப்பா! அவளை வளர்க்க எத்தனை பாடுபட்டார்? அவளுக்கு வாழ்வு கொடுக்க எத்தனை சிரமப்பட்டார்?

இப்போது நடப்பதுபோல் பளிச்சென நினைவில் எழுந்தன அந்த நினைவுகள். இமையோரத்தில் நீர் திரண்டு மெல்லக் கன்னத்தில் உருண்டு கழுத்தை நனைத்தது.

# 2

அப்பாவுக்கு அப்போது வயது அறுபது இருக்கலாம். பல நாள் கழித்து வேண்டாத வயதிலே பிறந்து அவரது தள்ளாத வயதில் சுமையாக இருந்துவிட்டவள் மாலதி. நல்ல வேளை அவள் ஒரே ஒரு பெண்தான். அந்த ஒரு பெண்ணையே சீராக வளர்த்து சிறப்பாக வாழவைக்க முடியாத வறுமை மிகுந்த குடும்பம் அவர்களுடையது.

அம்மா அவளது ஐந்தாவது வயதில் காலமாகி விட்டாள். காசில்லாதவர்களுக்கு முக்கியமாக வரும் காசநோய்தான் அவளைப் பலி கொண்டுவிட்டது. அதற்குப் பிறகு அப்பாவே அவளுக்கு எல்லாம் என்ற நிலை.

அப்பா பரம்பரை, சங்கீதத்தையே உபாசனை செய்தவர்கள். வயலினைக் கையிலெடுத்து அப்பா வாசிக்க ஆரம்பித்தால் ராகதேவதைகள் அவருக்கு அடிமை சாசனம் எழுதிக் கொடுக்க நேரும். அவ்வளவு அற்புதமான ஞானம். அவளுக்கு குழந்தை நாளிலிருந்து கேட்டுக் கேட்டு, இசையிலேயே ஊறிய சாரீரத்தின் இனிமை மாலதிக்கு இருந்தது.

அம்மா இறந்ததும், அங்கிருக்கப் பிடிக்காமல் பிழைப்பை நாடி, திருச்சிக்கு வந்தார் அப்பா. மாலதிக்கு மிக நன்றாக நினைவிருக்கிறது. சங்கீதத்தால் தொழில் நடத்தி வாழ்வில் முன்னேறலாம் என்று திருச்சி காவிரிக் கரையில் அந்தக் கிராமத்திற்கு வந்ததென்னமோ உண்மை. அதன் பிறகு அவரது வயலின் மகிமை எவர் கண்ணிலும் தென்படாமல் போனதும், அவர் அந்தத் தொழிலுக்கு முழுக்குப் போட்டு விட்டு, ''சங்கடமான சமையலை''யே தேர்ந்தெடுத்ததும் அதைவிடப் பெரிய உண்மை.

கிராமத்திலே அவரது சங்கீதத்தை மதிக்காதவர்கள் அவரது சமையல் ஞானத்தைப் புகழ்ந்தார்கள். சேலம், திருச்சி செல்லும் முக்கியமான நெடுஞ்சாலை அது. அங்கே பஸ் நிலையத்தருகே,



சின்னஞ்சிறு இட்லி, தோசைக் கடை ஒன்று பிரசித்தமாயிற்று. பட்டை பட்டையாக விபூதிதரித்து, தூயவேட்டியும், சட்டையுமாக அவரே 'சர்வர்', முதலாளி என்று அப்பா உழைத்தார். நல்ல வியாபாரம். பணம் கணிசமாக சேர்ந்தது. ஆனால் அவர்...? மனம் நொந்து போனார். வயலினைப் பிடிக்க வேண்டிய கரங்கள், இட்லி சுட்டன. தோசை வார்த்தன.

மாலதியும் அவள் பங்கை வீணாக்கவில்லை. மாவு அரைக்கும்போதே, அபிராமி அந்தாதியைப் பாடுவாள். சங்கீதத்துடன் சோற்றுப் பாடும் நடந்தது. மாலைநேரத்தில், தந்தையும், மகளும் வீட்டின் கூடத்தில் அமர்ந்து கொள்வார்கள். அங்கே மாடத்தில் ஏற்றி வைத்திருக்கும் அகல் விளக்கு, அதனருகில் மாட்டி இருக்கும் அம்மன் படம், கீழே வயலின் பெட்டி.

அப்பா பயபக்தியுடன், கை கால் கழுவி, திருநீறு பூசிய நெற்றியுடன் வந்து வயலினை கையிலெடுப்பார். மாலதிக்கு மதுரமான குரல். தந்தையிடம் சங்கீதப் பயிற்சி ஆரம்பமாகும். அப்பாவின் ஆத்ம திருப்திக்காக அமைந்த ஒரே சிஷ்யை அவள்தான்!

மாலதி வளர்ந்துவிட்டாள். அப்பாவுக்குத் தெரியாதா என்ன? அவரும் தமது பொறுப்புகளை முடிக்க முயன்று கொண்டிருந்தார். எப்படியாவது நல்ல வரன் கிடைத்து விட்டால் போதும்... சிந்தனை திடீரென துண்டிக்க மாலதி நிமிர்ந்தாள். சுத்தி செய்யும் தொழிலாளி ஓசையிடாமல் கதவைத் திறந்து கொண்டிருந்தான் வெளியே செல்ல.

திறந்து மூடிய கதவுகளினூடே 'கலீர்' என்ற சிரிப்பு ஒலி, வெளியே அவரவர் வேலைகளுக்குச் செல்லும்போதே பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றங்கள், நகைச்சுவை விருந்துபடைக்கிறார்களோ? நர்ஸ் நீலமணியின் சிரிப்புத்தான் அது. மாலதியும் அப்படித்தானே இருந்தாள். உலகமே ஆனந்தமாக, வறுமையின் சுவடே தெரியாத எழிலுடன், இன்பமயமான ஒரு எதிர்காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு இளமையும், ஆசைக் கனவுகளுமாக... அந்த வழக்கமான காவிரி வாய்க்கால் படித்துறையருகில் தோழிகளுடன் பேசி மகிழ்ந்த அந்த நாள்...

''நம்ம ரதிக்கி ஒரு மன்மதன் வரப்போகிறாண்டி, உனக்குத் தெரியுமோ?'' கோடி வீட்டு பட்டு.

''மெட்ராஸில் வேலையாமே மாப்பிள்ளைக்கு. கெட்டும் பட்டணம் சேருன்னு சொல்வாளே, நீ எப்படி?'' மற்றொருத்தியின் கிண்டல்.

''நான் கூடப் பார்த்தேனே. பாக்கறதுக்கு கொஞ்சம் மாநிறம்தான். மற்றபடி நல்ல பொருத்தம்.''

மாலதி 'களீர்' என சிரித்தாள். முதல் நாள் மாலை சங்கரன் அவனது அம்மாவுடன் பெண் பார்க்க வந்தபோது நாணத்தால் முகம் சிவக்க, முத்து முத்தாக அரும்பிய வியர்வையுடன், நெஞ்சு திக்திக்கெனத் துடிக்க, அவள் அவர்களை நமஸ்கரித்து எழுந்ததை நினைத்ததும் சிரிப்பு பொங்கியது மீண்டும்.

சங்கரனை ஓரக்கண்ணால் பார்த்தாள். மாநிறம்தான். வாட்டசாட்டமானவன் அல்ல. அந்தச் சமயத்தில் அவளை ஆட்கொள்ள வந்த ஒரு தெய்வமாகவே தோன்றினான் அவன். அவள் வயதொத்த எந்தக் கிராமத்துப் பெண்ணுக்கும் ஏற்படக்கூடிய உணர்ச்சியில், அவனை அவள் மிகமிக மதித்தாள்.

''எனக்கு இவ ஒரே பொண்ணு. ஏதோ என்னாலானது செய்யறேன்'' அப்பா, தாமே தயாரித்த பஜ்ஜி சொஜ்ஜியுடன் உபசரித்துவிட்டுக் குழைந்தார்.

''நான் ரொம்ப வெளிப்படையா சொல்லிடறேன். பெண்ணைப் பிடிச்சிருக்கு. ஆனா, நீங்க போட்டிருக்கிற இந்த ஐந்து பவுன் போதாது. ஒரு ஜோடி வளையலும், ஒரு சின்ன செயினும் இந்தக் காலத்துல போதுமா? அதனால் நீங்க நல்ல கனமா எட்டுப் பவுனுக்குக் குறையாம ஒரு சங்கலி போட்டுடுங்கோ. கல்யாணத்தை நன்னா நடத்தணும். எங்களுக்கு மனுஷா ஜாஸ்தி. பையனுக்கு நல்ல 'டிரஸ்' தைக்கணும்'' நிபந்தனைகள் ஏறிக்கொண்டே போயின.

கல்யாணம் என்ற அழகான மோஹினிப் பிசாசு, அப்பாவின் கையிருப்பு முழுவதையும் கரைத்துக்கொண்டு போய்விட்டது. ஊரில் கொடிக்கால் வியாபாரி வையாபுரி, செக்கு மண்டி சுந்தரம் எல்லோரிடமும் கடனும் வாங்கியாகிவிட்டது. ஆனால் சங்கிலி உருவாகவில்லை.

மாமியார்க்காரி கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள். ''இதோ பாரும், பெண்ணை நாங்க இப்ப அழைக்கறதுக்கு இல்லை. அம்மா



இல்லாத பெண். வருஷாந்திரச் சீர் அது இதுன்னு உம்மிடம் எதிர்பார்க்கமுடியாது. அதனால் இந்தச் செயினோட ஒரு நாள் பார்த்து மெட்ராஸ்ல கொண்டு வந்து விடுங்கோ.'' அதாவது எட்டு பவுன் சங்கிலி இல்லாத உமது பெண் வாழ்வு அவ்வளவுதான். சங்கரன், தாயின் தலைப்பில் தன்னையும் முடிந்துகொண்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் கிளம்பிவிட்டான்.

இன்பமயமான எதிர்காலத்தையும் ஆசைக்கணவனையும் உருவாக்கி மகிழ்ந்து கொண்டிருந்த மாலதியின் கற்பனைகள் நொடியில் சரிந்துவிட்டன. ஏதோ ஒன்று நெஞ்சைக் கவ்விக் கொண்டது போன்ற உணர்வு. தன்னிடம் ஆசையோடு ஜாடையாவது காட்டிவிட்டுப் போவான் என்று நெஞ்சு படபடக்க எதிர்பார்த்த அவளுக்கு சங்கரன் எத்தகைய ஏமாற்றத்தை அளித்தான்!

அதன் பிறகு நடந்ததெல்லாம் வேறு கதை. கல்யாணத்தில் அகலக் கால் வைத்துவிட்ட அப்பாவிற்கு நாலா புறமும் கடன்காரர்கள் பெருகிவிட்டனர். கடையிலிருந்த பாத்திரம், தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் கடனுக்கு ஈடாகப் போயின. இட்லிக் கடைக்கு மூடுவிழா நடந்து விட்டது.

மாலதியின் புகுந்த வீட்டவர்களிடமிருந்து பதில் இல்லை. போட்ட கடிதங்களுக்கும் பிரதிபலிப்பு இல்லை. மாலதி கிராமத்துக் கோவில்களையெல்லாம் மனமுருகச் சுற்றிச்சுற்றி வந்தாள். அந்தத் தெய்வங்களே இரங்கினாலும், சங்கரன் இரங்குவதாக அறிகுறி இல்லை.

செக்குமண்டி சுந்தரத்திடமும், வையாபுரியிடமும் மீண்டும் பணத்திற்கு மன்றாடிப் பார்த்தார் அப்பா.

''இட்லி கடை இல்லாட்டா என்ன, என்கிட்டே நல்ல சங்கீதம் இருக்கு. உங்க குழந்தைகளுக்கு சொல்லிக் குடுத்துக் கடனை அடைச்சுடறேன். தயவு செஞ்சு எம்பொண்ணுக்கு வாழ்வு குடுக்கணும்'' கதறினார் அவர்.

செக்கடியில் சங்கீதம் செல்லுபடியாகவில்லை. ''ஏன்யா? விரலுக்குத்தக்கனை வீக்கம் வேணாமா? உம் பொண்ணைக் கட்டிக் குடுக்கணும்னு கண்டபடி ஒத்துக்கறதா? போனா போகுதுன்னு, அரிசியோ, தேங்காயோ, எண்ணெயோ தர்றோம் எடுத்துக்கிடும்.

பணம் மட்டும்...'' தலையைப் பலமாக ஆட்டிவிட்டனர். அப்பா மனம் ஒடிந்து போனார்.

கடைசி முயற்சி. நேரடியாகவே சென்னைக்குப் போய் சம்பந்தியம்மாள் காலில் விழுந்தாவது பெண்ணிற்கு வாழ்வு கொடுக்கவேண்டும் என்ற ஆவேசம் அப்பாவுக்கு. மாலதியைக் கோடி வீட்டுப் பட்டுவின் வீட்டில் விட்டுவிட்டு அவர் மட்டும் கிளம்பிப் போனார்.

எண்சாண் உடம்பும் கூனிக் குறுகி, சம்பந்தியம்மாளிடம் கூத்தாடியும் பலன் இல்லை. ''மாலதி வாழணுமானால் சங்கலியோடு வரணும். இல்லே சங்கரனுக்கு வேற எடத்துல பெண் பாத்துடுவோம்.''

அப்பா ஊரிலிருந்து திரும்பியதும் மிகவும் நொடிந்துப் போனதுபோல் ஆகியிருந்தார். வீடு திரும்பிய மாலதிக்கு அவரிடம் கேட்கவே தயக்கம்.

மகளைப் பார்த்ததுமே அவருக்குத் துக்கம் பீரிட்டது. அவளை அணைத்துக்கொண்டு சிறுகுழந்தைபோல், ''என் கண்ணை நானே குத்திண்டுட்டேனேம்மா. அந்த மகாபாவிகள் கேவலம் ஒரு சங்கிலிக்காக உன் வாழ்க்கையே நாசமாக்கிட்டாளே'' என விம்மிவிம்மி அழுதார். மாலதியின் நெஞ்சின் ஆசைகள் பொடிப் பொடியாகின. கேவலம் ஒரு சங்கிலியால், அவளது வாழ்வின் பிணைப்பையே துண்டிக்க முயன்றவர்கள் என்ன மனிதர்கள்! அரக்க மனம் படைத்தவர்கள். நயவஞ்சகர்கள்! சமூகத் துரோகிகள், பெண் என்பவளைப் பொன்னாகக் கருதாமல், பொன்னையே பெரிதாக எண்ணும் இரும்பு மனம் படைத்தவர்கள்! அவள் நெஞ்சே வெடித்து விடுவது போல் அழுதாள்.

திடீரென ஆவேசம் வந்தவர்போல் அப்பா எழுந்தார். கண்களைத் துடைத்துக் கொண்டு, கூடத்து சுவாமி படத்தருகே வந்தார்.

''குழந்தே! இங்கே வா'' என்றபடி வயலினைக் கையில் எடுத்தார். மாலதி கண்களைப் புடவைத் தலைப்பால் துடைத்தபடி அருகே வந்தாள்.

''உட்காரு. இனிமே கண்ட மனிதர்களை வேண்டிக்கிறதைவிட,



இந்த சங்கீத தேவதையை வேண்டிக்கோ. உனக்கு நல்ல காலம் தன்னால் வரும்.''

மனச்சாந்திக்கு என்று ஆரம்பித்த இசைப்பயிற்சி பிறகு அவளுக்குத் தொழிலாகவே மாறிவிட்டது.

எப்படி?

இரண்டு வருடங்கள் பசியிலும், பட்டினியிலும் பறந்து விட்டன. கிராமம் முழுவதும் மாலதியைப் பற்றிக் கசமுச என்று பேச்சு.

''பெண் அழகா இருக்கான்னு மயங்கிட்டாளாம்! ஆனா, இப்போ அவ பேர்ல என்னமோ குத்தமாம்.''

''யார் கண்டா, இட்லி கடை வச்சிருக்கா, கண்டவா, பஸ் போற இடம்...''

பலவாறான தகவல்கள். முடிவில் அந்த இடிமேல் இடி ''சங்கரனுக்கு வேறு பெண் பார்க்கிறார்கள்.'' மாலதியின் நூலிழை நம்பிக்கையும் தகர்ந்து போய்விட்டது. புக்ககத்தினர் மீது கோர்ட், கேஸ் என்று போட்டு ஜீவனாம்சம் வாங்கக்கூட அவர்களிடம் பணவசதி ஏது?

கிராமத்தினரின் நிந்தனைகள், பார்வைகளின் குத்தல்கள், வறுமையின் இயலாமை, எல்லாமாக அப்பா ஒரு முடிவிற்கு வந்தார். அவரது இட்லிக் கடை வாடிக்கைக்கார பஸ் டிரைவரின் உதவியால், சென்னையில் அடையாறில். வக்கீல் சோமநாதனின் வீட்டில் சமையல்காரர் உத்தியோகம்.

அப்பாவிற்கு உதவியாக மகளும் இருந்தது பற்றி சோமநாதன் வீட்டவர் ஆட்சேபிக்கவில்லை. வயதானவர், அடிக்கடி உடம்புக்கு வந்து படுத்துவிடுவார். பிறகு பெண்ணாவது இருப்பாளே உதவிக்கு.

விரைவில் அவளது வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்படத்தான் செய்தது. சோமநாதனின் மனைவி, தற்செயலாக மாலதியின் குரலினிமையைக் கேட்டவள், மாலைவேளையில் அவளை சற்றுநேரம் பூஜையறையில் பாடவைத்து விட்டாள்.

அவள் அப்படி பாடிய ஒரு நாள், அவளது எதிர் காலத்தின் அஸ்திவாரமாயிற்று, சோமநாதனின் கட்சிக்காரர் ராஜலிங்கம் அந்த இனிய குரலைக் கேட்டு எழுந்தே வந்து விட்டார் உள்ளே.

''யார் பாடினது? யாரு? அந்தக் குரல்'' அவர் சென்னையில் பிரபலமான ஒரு இசைக்குழுவின் தலைவர். திரைப்படங்களுக்கும், மெல்லிசைக் கச்சேரிகளுக்கும் தயாரிப்பாளர்.

மாலதியை எப்படியாவது தமது குழுவில் சேர்த்துவிடத் துடித்தார். அப்பாவிற்கு ஆரம்ப காலத்தில் சம்மதம் இல்லைதான்.

சோமநாதனின் குடும்பத்தினர் தூண்டுதலால் ஒத்துக் கொண்டார். 'வலிய வந்த சீதேவியை உதறாதிங்க. உங்க பெண்ணின் எதிர்காலம் ஒஹோன்னு இருக்கப் போகுது,' அவரது உற்சாகமான தூண்டுதல் இல்லாவிட்டால்...

மாலதியின் அந்த முதல் பாட்டு... 'மேகம் மழை பொழியும்' என்ற பாட்டு 'ஒரு நிலவின் கனவு' என்ற படத்தின் ஒரு முக்கியமான பாடல்... பிரலமாகி இருக்காது. பிறகு பிரபல பின்னணிப் பாடகியாக அவள் உச்சாணிக் கிளையில் தாவியிருக்கவும் முடியாது.

## 3

நர்ஸ் மீண்டும் கதவைத் திறந்து கொண்டு வந்தாள். ஸ்பெஷலிஸ்டு வருவதற்குமுன் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று ஒரு முறை கவனிப்பதற்காக இருக்கலாம்.

''நர்ஸ்! கொஞ்சம் அந்த 'ரேடியோ' வை போடேன்.'' சங்கீதம் அவள் காதுகளில் விழுந்து கொண்டேயிருக்கட்டும். திறந்த கதவின் வழியே ஆவலுடன் எட்டிப் பார்த்த தலைகளைக் கண்ட அவளுக்கு ஆத்திரம் வந்தது. பற்களைக் கடித்தபடி, ''அவங்களை உள்ளே வர விடாதே'' என்றாள் எரிச்சலுடன்.

''வரமாட்டாங்க. பயப்படாதீங்க,'' ஆறுதலாகக் கூறியபடி நர்ஸ் ரேடியோவை முடுக்கி மிக மெல்லிய சங்கீதமாக இழையவிட்டுவிட்டு, கதவை மூடிக்கொண்டு சென்று விட்டாள்.

''ஒரு நிலவின் கனவு என்ற படத்தில் மாலதி சரவணன் பாடிய பாடல்- விரும்பிக் கேட்டவர், குப்பளுபட்டி கோமதி, நாகர்கோவில்



நஞ்சுண்டன், காட்டான் குளம் கருப்பன்...'' விவிதபாரதியில் நேயர் விருப்பத்தின் பட்டியல் நீண்டு கொண்டே போயிற்று. மாலதி மெல்ல முறுவலித்துக் கொண்டாள்.

அப்பா உபாசித்த சங்கீத தேவதை அவர் கேட்ட வடிவில் அருள் பாலிக்கவில்லை. ஜிலுஜிலுப்பாக, பார்ப்பவர் கண்களைக் கவரும் ஒரு அழகுத் தேவதையாக, சினிமா சங்கீத தேவதையாக வந்து அருள் பாலித்து விட்டாள். மாலதி, முறைப்படி சங்கீதம் கற்று மேடைக் கச்சேரிகளும் செய்திருக்கிறாள். ஆனால் அவளது திரைப்படப் பாடல்களுக்குத்தான் கவர்ச்சி அதிகம் இருந்தது. வருமானம் அதற்குத்தான் வந்தது.

'மழை மேகம் மாலதி சரவணன்' என்று கூறும் அளவுக்கு அவளது குரல் பிரசித்தமாகி விட்டது. மாலதியின் பாடல்கள் ஒலிக்காத நாட்களே இல்லை. இப்போது அவள் பிரபலமானவள். வாழ்க்கையில் வசதிகள் பெருகின. பங்களா, கார், நகைகள், பட்டுகள் எனப் பணக்காரச் சின்னங்கள்.

பாவம் அப்பா! மாலதியின் முழு அதிர்ஷ்டத்தையும் அனுபவிக்கக் கொடுத்து வைக்காமல் போய்விட்டார். அதற்கு பிறகு... மாலதிக்கு அந்தப் பெரிய பங்களா, கார், ஆட்படைகள் எல்லாமே துணையாக இருக்கவில்லை போலத் தோன்றிவிட்டது. காரணமும் இருந்ததே!

ராஜலிங்கத்தின் குழுவினருடன் அடிக்கடி மெல்லிசைக் கச்சேரிகளுக்கும் அவள் சென்றுகொண்டிருந்தாள். அந்தக் குழுவில் 'கிதார்' வாசிக்கும் குமார் பார்க்க ஆள் அழகன்தான். அடிக்கடி மாலதியை அவன் நெருங்கி நிற்பதும், பார்ப்பதும்... ஏனோ அவளுக்கு எரிச்சலைத் தந்தது.

'மைக்' அருகில் அவள் கையில் புத்தகத்துடன் பாட நிற்கும்போது, வேண்டும் என்று மிக அருகில் கிதாரும் கையுமாக நிற்பான். ஸ்டூடியோ ''ரிக்கார்டிங்'' சமயங்களில் அதிக நேரமாகி வீடு திரும்பும்போது அவனது தொல்லை அதிகமாகும்.

''நான் வேணா வரேனே துணைக்கி'' உல்லாசமாக பல்லை இளித்தபடி அவன் கேட்டபோது, கன்னத்தில் பளாரென ஓர் அறைவிடலாமா என்று தோன்றும்.

ஒருநாள் 'ரிக்கார்டிங்' முடிந்து வீடு திரும்பியபோது இரவு ஒன்பது மணி. குமார் அவள் வீட்டு வரவேற்பறையில் குத்துக்கல்லைப் போல் உட்கார்ந்திருந்தான்.

''மிஸ்டர் குமார், இப்படி அடிக்கடி தொந்திரவு குடுத்தீங்க, அப்புறம் என்ன செய்வேன்னு தெரியாது. மரியாதையா வெளியே போயிடுங்க'' மிரட்டினாள்.

''பெரிய பத்தினி! கண்ட காதல் பாட்டுப் பாடறவளுக்கு என் சிநேகிதம் குறைவா தெரியுதோ! புருஷனை உதறினவதானே. வேலி இல்லாத பயிரு! பெரிய வேஷம் போடறியே!'' என்று காறித் துப்பாத குறையாக வெளியேறினான் அவன்.

இரட்டை அர்த்தமுள்ள காதல் பாட்டுக்களை அவள் பாடுவது உண்மைதான். அது அவளது பிழைப்பு. அவள் பாட மறுத்தால்... வரழ்வே அஸ்தமித்துப் போய்விடும்... வேலி இல்லாத பயிரா? சே! சே! ஒரு பெண்ணுக்கு வாழ்க்கைத் துணை சரிவர அமையாவிட்டால் என்னவெல்லாம் பேசிவிடுகிறார்கள்? எப்படியெல்லாம் எடை போடுகிறார்கள்? மாலதி அன்று முழுவதும் நெஞ்சு வெடிக்க அழுது தீர்த்தாள். அப்போது செய்துகொண்ட ஒரு தீர்மானம் அவள் மனதில் முழுவதும் உருவாகிவிட்டது.

அவளது பாதுகாப்புக்கு ஒரு துணை. ஆண் துணை தேவைதான். அப்பா ஒரு பக்கபலமாக இருந்தார். இப்போது அவளைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு ஆண் துணை - சரவணன் அவளது வாழ்வில் குறுக்கிட்டார். ராஜலிங்கத்தின் நண்பர் சரவணன். இசையில் ஈடுபாடு கொண்டவர். நல்லவராகத் தெரிந்தார். மாலதியின் ரசிகர்களில் ஒருத்தர். அவர்களிடையே நெருக்கம் ஏற்பட்டபோது ஒரு திடுக்கிடும் உண்மையை மாலதி தெரிந்துகொண்டாள்.

சரவணன் திருமணமானவர். ஐந்து குழந்தைகளின் தகப்பன். கொஞ்சம் மதுப்பழக்கம் உண்டு. துடுப்பில் இருந்து தப்பி அடுப்பிற்குள் விழுந்த கதை. பாதுகாப்பு என்ற பெயரில் அவள் சரவணனின் சட்டத்திற்கு அப்பாற்பட்ட மனைவியானாள். அதாவது ஆசைநாயகி!

மாலதியின் கண்கள் பனித்தன. நெஞ்சை என்னவோ செய்தது. பெண்ணுக்குச் சுதந்திரம் வேண்டும். பெண் தன் காலில் நின்று தானே



சுயமாக வாழும் திறன் வேண்டும் என்று கூக்குரலிடும் அதே சமூகம், ஒரு பெண் தானாவே வாழ விடுவதில்லை. அப்படி வாழ முயல்பவளுக்கு எத்தனை தண்டனைகள்... இடர்கள்... முட்டுக்கட்டைகள்... முன்னேற விடாமல் தடுக்க எத்தனை பேர்கள்...

மாலதியின் பெயரின் பின்னால் ஒட்டிக் கொண்ட அந்தப் பெயருக்காக அவள் அளித்த லஞ்சங்கள் எத்தனை? எத்தனை? நினைக்கையில் அவள் உள்ளம் கசந்தது.

## 4

**மா**லதியின் பாதுகாவலர் என்ற நிலை வந்த பிறகு சரவணன் எப்படி மாறிப் போனார்? ஆரம்பத்தில் அவளிடம் அவர் காட்டிய கனிவு, கண்களில் மிதந்த ஆர்வம். இசையில் காட்டிய ஈடுபாடு இவற்றில் அவள் ஏமாந்தல்லவா போய் விட்டாள்.

சரவணன் மாலதியின் விஷயங்களில் அதிகம் தலையிட ஆரம்பித்தார். வருகிற வருமானத்தில் அவருக்குக் கணிசமான தொகை போய்விடும். அதை குடி, சீட்டு, குதிரைப் பந்தயம் என்று வாரிவிடத் துவங்கினார்.

ஒருநாள் நடந்த அந்த சம்பவத்தை மாலதியால் மறக்கவே முடியாதே! மெல்லிசைக் கச்சேரி முடிந்து மேடையை விட்டு இறங்கினவளை, ரசிகர் குழாம் சூழ்ந்து கொண்டிருந்தனர். அதில் ஒரு இளம் பெண், இருபது வயது இருக்கலாம். ஒடிசலான தோற்றம் அலைபாயும் கண்கள், நீண்ட முகத்தில் ஏதோ ஒரு வெறுப்பு.

''நான் யாரு தெரியுதா?'' கசப்பாகக் கேட்டாள்.

இந்த சின்னஞ்சிறு பெண்ணிற்கு ஏன் இத்தனை குரோதம்? வியப்புடன் ''தெரியலியே. ஒரு வேளை என் ரசிகைகளில் ஒருத்தி...'' என்றாள் மாலதி திகைப்புடன். ''அதுதான் இல்லே. உங்க சக்களத்தி மகள். எங்கப்பாவை அபகரிச்சு எங்களுக்கு இல்லாம செஞ்சிட்ட கொடுமையைக் கேக்க வந்தேன்.''

வார்த்தைகளில் எவ்வளவு விஷம்! அவள் அவமானத்தால் குன்றிப் போனாள். கச்சேரி மேடை, ஹால், அதை சுற்றி நின்ற மனிதர்கள் யாவுமே அவளுக்குமுன் பம்பரமாகச் சுழன்றன. கூண்டிலே அடைத்துவிட்ட குயிலை, மேலும் மேலும் கூரிய முனையால் குத்தி சித்திரவதைப் படுத்துவது போன்ற வேதனையில் அவள் தன் நினைவையே இழந்துவிட்டாள். பிறகு என்ன நடந்தது என்றே அவளுக்குத் தெரியவில்லை. எப்படி வீடு வந்தாள் என்றும் புரியவில்லை.

மனது சரியில்லை என்று எதை நிறுத்தமுடியும்? சோகமான சமயத்தில்தான் மகிழ்ச்சியான காதல் பாட்டுகள் பாடவேண்டியிருந்தது. வாழ்க்கை எப்படி, முரணாகி விடுகிறது?

அதற்குப் பிறகும் அவளைத் தொல்லைகள் விடவில்லை. சரவணன் நோய்வாய்ப்பட்டார். அதற்குக் காரணம் அவரது பழக்கவழக்கங்கள். ஆனால் அவரது குணவிசேஷத்தை யாரும் கண்டு கொள்ளவில்லை. அதற்குப் பதில் திருமதி சரவணனே அவளைத் தேடி வீட்டிற்கு வந்து விட்டாள்.

''என் வாழ்க்கையைப் பறிச்சுக்கிட்டே, என் குடும்பத்தையே உடைச்சிட்டே. இப்ப என் புருஷனையும் பிரிக்க வழி செய்திட்டியே, நீ நல்லா இருப்பியா? பாவி! சண்டாளி!''

இப்படிப்பட்ட கோரமான வார்த்தைகள் அவளுக்குப் பழக்கமில்லாதவை. அப்படிப் பழகி இருந்திருந்தால் கேவலம் ஒரு சங்கிலிக்காக, தன் வாழ்வை இப்படிக் கேவலமாக்கிவிட்ட மாமியாரிடம் போய், ''மகா பாவி! என் வாழ்வை தெருப்புழுதியாக மத்தவா காலிலே போட்டு மிதிக்கும்படி பண்ணிட்டியே! ராட்சசி! நீ நன்னாயிருப்பியா'' என்று அலறி இருப்பாள்.

''கேவலம் ஒரு சங்கிலி பெரிசாப் போயிட்டுது. நான் பெரிசாகத் தெரியலை. சீ! நீ ஒரு மனுசன்; உனக்கு ஒரு இரண்டாவது கல்யாணம்'' என்று சங்கரனை சபித்துக் கொட்டியிருப்பாள். இப்போது மட்டும் திருப்பிச் சொல்ல எத்தனை நேரமாகும்?

''உன் கணவர் என் பணத்தை அட்டை போல உறிஞ்சினார். தமது தேவைகளுக்காக என்னை ஆசை நாயகி என்ற பதவியில் வச்சு அவமானப்படுத்தினாரே தவிர எனக்கு எந்தவிதப் பாதுகாப்பும்



தரலை'' என்று கத்தி இருக்கலாம். மாலதி வெறுப்பை விழுங்கிக் கொண்டாள்.

அவளது விதியைப்பற்றி நியாயமாக எடுத்துக் கூறினாலும் எவர் காதிலும் ஏறப் போவதில்லை. வாழ்க்கையில் சரிந்துகொண்டே வந்துவிட்டவள் அவள். சிவப்பு விளக்குப் பகுதியில் பெண்கள் வாழும் அவலநிலைகளை நேரில் கண்டறிந்து அறைகூவல் விடுக்கும் அதே கதாசிரியர்களின் கண்களில் அவளைப் போன்ற அபலைகளின் இரண்டும் 'கெட்டான் நிலை விழாதது ஆச்சரியமே.

மாலதி, திருமதி சரவணனையே வெறித்துப் பார்த்தாள். அவளது ஓலம் முடிந்ததும், ''இப்ப என்ன செய்யணும்னு எதிர்பாக்குறீங்க. அவர் முன்ன மாதிரி இங்கவரதில்லே. நான் வந்தாலும் வேண்டாம்னு சொல்லிடறேன்'' என்றாள் விரக்தியாக.

''அது இனிமே எப்படி முடியும்! என் வீடு, பெரிய வீடுன்னும், இது சின்ன வீடுன்னும் ஊரெல்லாம் பேச்சாப் போயிட்டுதே'' புலம்பினாள் மற்றவள்.

இப்ப என்ன செய்யணும்னு எதிர்பாக்குறீங்க'' வெறுப்போடு கேட்டாள் மாலதி.

''என் பெரிய பெண்ணுக்குக் கல்யாணம் ஏற்பாடாகி இருக்குது. அவர் ஆஸ்பத்திரியிலே. இந்த நிலையில் மாப்பிள்ளை வீட்டார் பணம் அது இதுன்னு நெருக்கறாங்க'' பெருமூச்சு விட்டபடி கண்களைத் துடைத்துக் கொண்டாள் திருமதி சரவணன்.

மாலதிக்கு விளங்கிவிட்டது. பணம் காய்க்கும் மரத்தைக் கொஞ்சம் உலுக்கி எடுத்துப் போகலாம் என்ற தந்திரத்தோடு வந்திருக்கிறாள் திருமதி சரவணன்.

அவளுக்கு ஆத்திரமாக வந்தது. எல்லோரும் சந்தர்ப்பவாதிகள்தான். 'அவளுக்கு என்று ஒரு துணை என்றுதேடிப் போனவளது குடும்பம் அவளை அட்டையாக உறிஞ்சிக் கொள்ளப் பார்க்கிறார்கள்.

'வெளியே போறீங்களா இல்லையா?' என்று கத்த வேண்டும்போல் அவளது உள்ளம் குமுறியது. உதடுகள் துடித்தன. மறுகணம் சிரமப்பட்டு வார்த்தைகளைக் கட்டுப்படுத்திக்

கொண்டாள்.

ஒரு தங்கச் சங்கிலி அவளது வாழ்வை இப்படிப் பாழடித்ததுபோல் - ஒரு பெண்ணின் வாழ்வு மீண்டும் பாழாக அனுமதிக்கக்கூடாது. புரட்சிகரமான மாற்றங்களைப் பற்றிப் பேசும் இதே சமூகம், திருமணம் என்ற புனிதமான ஒப்பந்தத்தில் இன்னும் பேரம் பேசும் நிலையிலேயே இருக்கிறது. புரட்சி எந்த அளவில்? மாற்றம் எந்த அளவில்? வரதட்சிணை வேண்டாம். ஆனால் ஒரு 'பிரிட்ஜ்' ஒரு ஸ்கூட்டர் அல்லது ஒரு டெலிவிஷன்... நகைகள் வேண்டாம் அதற்குப் பதில் ஒரு ஃபிளாட்.

மாலதிக்குக் கோபமும், அனுதாபமும் ஒருசேர எழுந்தன. திருமதி சரவணனை உற்றுப் பார்த்தாள். இந்த நிலையில் எந்தத் துணிவில் அவள் ஐந்து பெண்களைப் பெற்று வைத்திருக்கிறாள்!

ஒரு பெண்ணின் வாழ்வு வீணாகக்கூடாது என்ற அனுதாபம். தான் பட்ட துயரம் மற்றவர் படக்கூடாது என்ற நல்லெண்ணம். மாலதி விடுவிடுவென உள்ளே சென்றவள், பீரோவைத் திறந்து நகைப் பெட்டியிலிருந்து கொஞ்சம் நகைகளை எடுத்தாள். அவசர அவசரமாக ஒரு கணிசமான தொகைக்கு 'செக்' எழுதினாள்.

திருமதி சரவணனிடம் அந்த 'செக்'கையும் நகைகளையும் கொடுத்தபடி, ''உங்க பெண் வாழ்க்கை நல்லபடியா அமையும். கவலைப்படாதீங்க'' என்றாள் மனமுருக.

அதன் பிறகு சரவணன் இறந்து போனார். அவரது மறைவிற்கு அவளை எவரும் அழைக்கவில்லை. ''என்னவானாலும் தொட்டுத் தாலி கட்டியவளுக்குத் தானே உரிமை'' என்று சட்டம் பேசினார்களாம். அதனால் அவள் அவருடன் வாழ்ந்த அந்தச் சில வருடங்கள் உள்ள உரிமைகளுக்காகக் கூட அருகில் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

மீண்டும் மாலதி தனிமையில் வாழ்ந்தாள். பிறகு... ஜானம்மாள் வந்து சேர்ந்தாள்.

அவள் ஒரு உதவி நிதிக் கச்சேரிக்கு ஒத்துக்கொண்டு அது நிகழ்ந்த பிறகு வீட்டிற்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயம் வாயில் கேட்டருகில், கொட்டும் மழையில் ஒரு உருவம் குளிரில் வெடவெடக்க நின்று கொண்டிருந்தது. காரை நிறுத்தச் சொல்லி



மாலதி எட்டிப் பார்த்தாள்.

சுக்காக வற்றிய உடல் முதுமையும் வறுமையுமாக முகத்தில் கோடிட்டிருந்தன. பரக்க பரக்க விழித்தபடி தயக்கமாகக் குளிரில் நடுமாறிக் கொண்டிருந்தாள் ஒரு கிழவி..

ஏனோ மாலதிக்கு அவளிடம் அன்பு. கையோடு வண்டியில் ஏற்றிக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டாள்.

ஜானம்மா அவளுக்கு அன்பாக சமைத்துப் போட்டாள். ஆதரவும், கனிவுமாகப் பார்த்துக் கொண்டாள். அவளது வாழ்க்கையும் மாலதியைப் போல கைவிடப்பட்ட கதைதான். இதனால் இருவரிடையேயும் பாசப்பிணைப்பு அதிகமாயிற்று. சில சமயங்களில் ஜானம்மாவே மாலதிக்கு புத்தி கூறுவதும் உண்டு.

சரவணின் மறைவிற்குப் பிறகுகூட அந்தக் குடும்பம் அவளை விடவில்லை. எந்த உரிமையில்லை என்று கூறினார்களோ அதே உரிமையின் அடிப்படையில் அவளை மீண்டும் மீண்டும் அவர்கள் பணம் கேட்க ஆரம்பித்து விட்டனர்.

''இப்படி நீ அடிக்கடி குடுத்துக்கிட்டே இருந்தா, கடைசியில் உனக்குன்னு ஒண்ணுமில்லாம போயிடும்'' என்று ஜானம்மாள் உபதேசிப்பாள்.

திருமதி சரவணனின் மூன்றாவது பெண்ணின் திருமணத்திற்கு, மாலதி பணம் கொடுத்து உதவினபோது ஜானம்மாவிற்குக் கோபம் கூடவந்துவிட்டது.

''இப்படித்தாம்மா நானும் என் புருஷன் எனக்கு சம்பாதிச்சு வச்சதையெல்லாம் என் அண்ணன் குடும்பம், தம்பி குடும்பம்னு வாரி இறைச்சேன். இப்ப... என்ன கதியில் இருக்கிறேன் பாரு...'' கடிந்து கொண்டாள்.

''எங்கிட்ட வந்து சமையல்காரியா இருக்கறத்துக்காக நீங்க வருத்தப்படறீங்களா ஜானம்மா!'' மாலதி வேடிக்கையாகக் கேட்டாள்.

''ஐயையோ! அப்படி எல்லாம் இல்லேம்மா. நீங்க மட்டும் என்னை அன்னைக்கிக் காப்பாத்தலேன்னா நான் செத்தே போயிருப்பேன். நான் கை தூக்கிவிட்ட பசங்க, என்னை வச்சுக்க

மனமில்லாமல் வெளியே துரத்தினப்போ, மனசு ஒடிஞ்சு போய்தான் வந்தேன். கொட்ற மழைகூட எனக்கு உரைக்கலே. மனசே மரத்துப் போயிட்ட பிறகு உணர்ச்சி எப்படி இருக்கும். ஆனா இப்பத்தான் உலகத்திலே பாசம், பந்தம் எல்லாம் இருக்கு, நல்லவங்க செத்துப் போயிடலைன்னு புரிஞ்சுகொண்டேன். உண்மையா சொன்னா பெத்த மகளைப்போல உங்கமேலே என்னையறியாம பாசம் வந்திடுச்சி'' என்றாள் உணர்ச்சி பொங்க, அவள் கண்கள் பனித்தன.

மாலதிக்கு மட்டும் என்ன? அவளது அன்புக்கு ஒரே ஒரு உண்மையான உயிர் இங்கே துணையாக இருக்கிறது என்ற நிம்மதி அவளுக்கு.

# 5

அவளுக்கு மற்றும் ஒரு அதிசயம் காத்திருந்தது. ஒரு நாள் வீட்டு வராந்தாவில் அவளது வரவிற்காகக் காத்து இருந்தவர்களை உற்றுப் பார்த்தாள் அவள்.

எங்கேயோ பார்த்த முகம். எங்கே? எங்கே? இரண்டு இளம் வாலிபர்கள் இரட்டைப் பிள்ளைகள். ஒரே மாதிரி உடை, ஒருவேளை அடிக்கடி நன்கொடை கேட்க வருபவராக இருக்கலாம்.

சரவணன் இறந்த பிறகு அவள்தானே எல்லாவற்றையுய் நிர்வகித்துக் கொண்டாள். காரியதரிசி இத்யாதிகளின் சிக்கல்களை அவள் விரும்பவில்லை.

வந்தவர்களில் ஒருவன் சற்றுத் தயங்கி ''நான், நான் யார் தெரியுமோ'' என்றான்.

மாலதி மௌனமாக இருந்தாள். ''என் பெயர் சிவம். இவன் பெயர் சாம்பன். நாங்கள்- நாங்கள் உங்கள் பிள்ளைகள்.''

மாலதி அதிர்ந்து போனாள். 'அவளுக்குப் பிள்ளைகளா?'

''நாங்கள் சங்கரனின் பிள்ளைகள். அப்பா சொல்லி விட்டார்



எல்லா விவரமும் - அதனால்...?''

மாலதி பிரமித்துப் போய் நின்றாள். இப்பொழுது எல்லாம் அவளுக்குப் புரிந்துவிட்டது. அன்று சங்கிலிக்காக அவளைத் திரும்பிப் பாராமல் ஓடிய அதே மனிதன். இன்று அவள் வீசப்போகும் பணம் என்ற எலும்புத்துண்டைப் பொறுக்கி வர பிள்ளைகளை ஏவி இருக்கிறான். எவளோ பெற்றுவிட்ட பிள்ளைகள் அவளைச் சொந்தம் கொண்டாடிக் கொண்டு ஓடோடி வந்திருக்கிறார்கள். என்ன உலகம்? என்ன பணத்தின் கவர்ச்சி?

மாலதியின் உடல் கோபத்தால் ஆடியது. முகத்தின் மீது வழிந்த வியர்வையைத் துடைத்தபடி ''தயவுசெய்து போய் விடுங்கள். இல்லை காவல்காரனைக் கூப்பிட்டுக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிடுவேன்'' என்று கூச்சலிட வேண்டும் போன்ற ஆவேசம் எழுந்தது. ஆனால் வழக்கமான அவளது நல்ல குணம் அவளையும் மீறி ஆட்கொண்டது.

''ரொம்ப சந்தோஷம், உங்கப்பாகிட்டே சொல்லுங்க, நான் வசதியா, சவுக்கியமா இருக்கேன்னு.,.''

''அது தெரிஞ்சுதானே அப்பா அனுப்பி இருக்கார்.'' மாலதி திகைத்துப் போனாள் ''எதுக்கு?'' என்றாள் மெதுவாக.

''வந்து... எங்களுக்கு பி யூ சி பஸ்ட் கிளாஸ் பாஸாகி இருக்கு. என்ஜினியரிங் காலேஜ்ல இடம் கிடைச்சிட்டுது.''

''ரொம்ப சந்தோஷம் - சேர வேண்டியதுதானே'' குத்தலாகக் கூறினாள் அவள்.

''அதுக்கு பணம் தேவை... சேர்ரதுக்கு புஸ்தகம்'' சிவம் இழுத்தான்.

''அப்பா உங்ககிட்டே கேட்டு வாங்கிண்டு வரச் சொன்னார். என்னவானாலும் உங்க பெரியம்மாடா, கேட்டா பணம் குடுத்துடுவா, அவ ரொம்ப நல்லவடான்னு சொல்லி அனுப்பினார்'' சாம்பன் தைரியமாக முடித்துவிட்டான்.

மாலதிக்கு வெறுப்பிலும் சிரிப்பு வந்தது. 'நல்லவளாமே; பணம் குடுத்துடுவாளாமே' என்ன எண்ணங்கள்; தீர்மானங்கள். இதே எண்ணம் அவளுக்கு வாழ்வு கொடு என்று கெஞ்சின அன்று

இல்லாமல் போய்விட்டதே. அது ஏன்? சீ! இவர்கள் காலத்துக்குத் தகுந்தபடி மனதை மாற்றிக் கொள்ளும் பச்சோந்திகள். பணம் என்றதும் வாயைத் திறந்து கொள்ளும் நடை பிணங்கள். இவர்களுக்கு உதவி செய்தாலே ஆறுமாதம் பாவம் பீடிக்கும்?

''பெரியம்மா! எப்படியாவது நீங்க உதவணும். இல்லாட்டா எங்க எதிர்காலமே பாழாகிவிடும். தயவு செய்யுங்க.''

என்னுடைய எதிர்காலத்தையே பாழாக்கி தன் காலின் கீழே போட்டு மிதித்த அரக்கனாயிற்றே உன் அப்பா. அவன் பெற்ற பிள்ளைகளுக்கு நான் எதற்காக உதவணும். மாலதியின் நெஞ்சில் ஆயிரமாயிரம் கேள்விகள் எதிரொலியிட்டன. ஆத்திரம் நெஞ்சினுள்ளே எரிமலையாகக் குமைந்தது.

''எங்க படிப்பு பாழாயிடும். அப்பாவாலே முன்னைப்போலே வேலை செய்யமுடியலை. கம்பெனியிலே ஆட்குறைப்பு செய்யறா. அதனால் இன்னும் மூணு வருஷம்தான் வேலை இருக்கும். எப்படியாவது எங்க கல்விக்காக...'' சாம்பன் அவள் காலடியில் 'திடும்'மென விழுந்தான்.

''பெரியம்மா! எங்களைக் காப்பாத்துங்கோ.''

''காலைவிடு, தயவு செஞ்சு என்னைப் பெரியம்மான்னு கூப்பிடாதே'' என்றாள் மாலதி கசப்புடன்.

இரட்டையர்கள் ஏமாற்றத்துடன் விழித்தனர்.

''கல்விக்காக நான் செய்கிற தருமமா இந்தப் பணத்தைத் தருகிறேன். ஆனா, சொந்தத்துக்காக இல்லே. ஏன்னா, அந்த மாதிரி சொந்தமே இல்லேன்னும், அதை முறிச்சவரே உங்கப்பாதான்னும் உங்கப்பாகிட்டே சொல்லிடுங்க'' என்று கடுமையாகக் கூறியவள் உள்ளே சென்றாள்.

வந்தவர்களிடம் பணம் கொடுத்து அனுப்புவதைப் பார்த்த ஜானம்மாளுக்கு ஏக கோபம்.

''என்னம்மா இது? எல்லாருக்கும் வாரி வழங்கிக்கிட்டே இருந்தா எப்படி?'' கடிந்து கொண்டாள்.

''ஏன் ஜானம்மா? எங்கிட்டே பணம் இருக்கு, கொடுக்கிறேன். நீ வேணுமானா கேட்டுப்பாரு தருகிறேன்'' என்றாள் விளையாட்டாக.





''ஐயோ, எனக்கு எதுவும் வேண்டாம்மா. நீங்க நன்னா இருந்தாப் போதும். என் மகள் கடைசிக் காலத்தில் கஷ்டப்படக்கூடாது. அவ்வளவுதான் வேணும்'' ஜானம்மாளின் கண்கள் பெருக்கெடுத்தன. கண்களைத் துடைத்தபடி சமையலறைக்குள் சென்றுவிட்டாள்.

# 6

அதன் பிறகு எத்தனை முறைகள் இரண்டு குடும்பமும் அவளைக் கூறுபோடாத குறையாக மாறிமாறி வந்து பிடுங்கத் துவங்கின.

சரவணன் குடும்பம் 'சித்தி' என்ற சொந்தம் கொண்டாடி அந்த உரிமையில் அவளைப் பறித்துக் கொள்ள விழைந்தனர்.

சங்கரன் குடும்பம் பெரியம்மா என்ற உரிமை கொண்டாடி அவளிடமிருந்து அபகரித்துக் கொள்ள ஓடோடி வந்தனர்.

வாழ்க்கையில் அவள் தேடிய நிம்மதி அவளுக்குக் கிடைக்கத்தான் இல்லை. காய்த்த மரம்தான் கல்லடிபடும். பணம் சம்பாதிக்கிற பெண்கூட அப்படித்தானோ?

''பெரியம்மா காலேஜ் புத்தகம் வாங்கணும்'' என்பான் சாம்பன்...

''பெரியம்மா எனக்கு 'பீஸ்' கட்டவேணும்'' என்பான் சிவம்.

''கடைசிப்பெண்ணுக்கு கல்யாணம் நிச்சயமாயிட்டுது. சித்திங்கிற வகையில் நீதான் செய்யப்போறதா வாக்குக் குடுத்திட்டேன்'' என்பாள் திருமதி சரவணன்.

தேனீக்கள் கூடப் புரட்சி செய்து கைகளைக் கொட்டி விடுகின்றன. ஆனால் மாலதியின் பணத்தேனீக் கூட்டை மற்றவர்கள் பிழிந்தபோது அவளால் எதுவும் செய்ய முடியவில்லையே ஏன்?

மாலதி மனம் பொறுமினாள். அவளுக்கு வாழ்க்கையே

வெறுத்தது. அவளைப் பணம் செய்யும் கருவியாக மற்றவர்கள் நினைப்பதை அவளால் எண்ணிப் பார்க்கக்கூட முடியவில்லை. அவளையும் மனித உணர்ச்சி கொண்ட பெண்ணாக மற்றவர்கள் ஏன் மதிப்பதில்லை? அவளுக்கும் உணர்வுகள் ஏக்கங்கள் ஆசாபாசங்கள் உண்டு என்று ஏன் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

இதற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் அந்த நிகழ்ச்சி மாலதியால் மன்னிக்க முடியாத, மறக்க முடியாத சம்பவம்.

சமீப காலமாக அவளுக்கு அடிக்கடி அந்த வயிற்று வலி இருந்து வந்தது. ஒருவேளை வாழ்வில் ஏற்பட்ட வெறுப்பான சம்பவங்களாக இருக்கலாம் என்றுதான் அவள் ஆரம்பத்தில் எண்ணி வந்தாள்.

ஜானம்மா அவளுக்காகப் பத்தியமாகச் சமைத்தாள். வாய்க்கு ருசியாகச் செய்து போட்டாள். ஊரிலிருக்கும் தெய்வங்களையெல்லாம் வேண்டிக் கொண்டாள். ''ஒரு வேளை திருஷ்டியாக இருக்கும்'' என்று 'திருஷ்டி' சுற்றிப் போட்டாள்.

ஜானம்மாளின் இத்தனை ஹேஷ்யங்களையும் ஏமாற்றி விட்டு அவளது உடல்நிலை அடிக்கடி தொல்லை கொடுத்தது. அதனால் அவள் முன்னைப்போல் அடிக்கடி வெளியே சென்று பாடுவதில்லை. குறிப்பிட்ட சில நாட்களில் மட்டும் பாடல் பதிவுகள், கச்சேரிகள் என்று வைத்துக் கொண்டிருந்தாள்.

அன்று அவளுக்குப் பாடல் பதிவு எதுவும் இருக்கவில்லை. ஜானம்மாளிடம் வாய்க்கு ருசியாக மிளகு ரசம் செய்யச் சொல்லிவிட்டு வாரந்தா பக்கம் வந்தவள் அயர்ந்து போய் நின்று விட்டாள்.

வருடங்கள் எத்தனை ஆனாலும் அவளால் மறக்க முடியாத உருவமாயிற்றே. வயதும் இயலாமையும் அவனது தோற்றத்தை மாற்றியிருந்தன என்றாலும் அவன் அவளைத் தொட்டுத் தாலி கட்டிவிட்டுப் பிறகு 'அம்போ' என்று விட்டுவிட்டுச் சென்ற அதே சங்கரன்தான் என்பதை யாருமே மறுக்க முடியாது.

அப்போது பார்த்ததைவிட உடல் ஊதிப்போயிருந்தது. கண்களுக்குக் கீழே சதை, உடம்பு நிலையைப் பற்றி பறை சாற்றியது. மாநிறம் உதிர்ந்து இப்போது ஒரு பழுப்பு நிறம். வயதின் தளர்ச்சி.



''மாலு சௌக்கியமா?'' பற்களைக் காட்டியபடி உரிமையுடன் உள்ளே வந்து அமர்ந்தான் சங்கரன்.

ஆத்திரத்தில் உடல் பதறிப் போனாள். கை கால்கள் வெடவெடவென ஆடின. மாலுவா? பல வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தவரைப்போல் என்ன உரிமை? என்ன அன்பு?

''அப்படி யாரும் இங்கே இல்லை. தயவு செஞ்சு வெளியே போகலாம்'' கண்கள் சினத்தால் சிவக்க வார்த்தைகள் கோபத்தால் கொப்பளிக்க மாலதி உரத்துக் கூவினாள்.

''ஆ! அப்படிச் சொன்னா எப்படி? என்ன ஆனாலும் நான் உன் கணவன். இந்து தர்மசாஸ்த்திரப்படி அக்னி சாட்சியா மணந்தவன்.''

அக்னி சாட்சியையே இல்லை என்று அழித்தவன் இப்போது அதையே சாட்சிக்கு அழைக்கிறான்? இப்படிப் பட்டவர்களை அதே அக்கினிக் குண்டலத்தில் தூக்கிப் போடவேண்டும் என்ற உக்கிரம் அவளுக்குள் கிளர்ந்தது.

''இப்ப நான் மாலதி சரவணன்! சங்கரன் இல்லே'' ஆத்திரமாகப் பேசினாள் அவள்.

''தெரியுமே. அதெல்லாம் வேற விஷயம். அதுதான் முடிஞ்சுட்ட கதையாச்சே.''

''இல்லே. இல்லே, ஊரறிஞ்ச கதை. உங்களை யாருமே ஏத்துக்க முடியாத கதை'' கத்தினாள் அவள்.

''இத பாரு மாலு. பழசையெல்லாம் மறந்துடுவோம். இப்ப அம்மாவும் போய்ட்டா. உனக்கும் ஒரு துணை வேணும். பேசாம எங்ககூட வந்துடு. அவளும் ரொம்ப நல்லவ. அக்காவை அழைச்சிண்டு வாங்கோ. நாம சாப்பிடற கஞ்சியோ கூழோ சாப்பிட்டுண்டு இருக்கோம்னா.''

''எனக்கு எந்த வீட்டுக் கஞ்சியும் கூழும் வேணாம். தயவு செஞ்சு வெளியே போங்க.''

''அப்படி சொன்னா எப்படி. இப்ப ஊர் உலகம் முழுசும் உன் கதை தெரிஞ்சதுதான். எங்ககூட நீ வந்து இருந்திட்டா எல்லார் வாயும் அடைபட்டுப் போகப் போறது. இல்லே நாங்க வந்து இங்கேயே தங்கிடறோம் என்ன'' வெட்கம் கெட்டு சிரித்தான் அவன்.

பிடுங்கிக் கொள்வது போதாது என்று குடும்பத்துடனே வந்து அவள் தலையில் ஏறி உட்காரப் பார்க்கிறானே? என்ன அநியாயம்? ஏன் இவன் ஆண்பிள்ளைதானே? தன் குடும்பத்தை தானே காப்பாற்ற வேண்டும் என்று நினைக்காமல் அவளை நன்றாகப்பயன்படுத்தி அவளது தயவில் குஷாலாகக் காலம் கழிக்க நினைக்கிறானே. ஆமாம், அன்று ஒரு சங்கிலிக்காக ஓடினவன் இன்று அதே பணக் கவர்ச்சிக்காக ஓடி வந்திருக்கிறான்.

வெறுப்பு உமிழும் பார்வையால் அவனை வெறித்தாள் மாலதி. ''இதுவரை மரியாதைக்காக பொறுமையாக இருந்தேன். வெளியே போறியா? இல்லே'' அவள் காளிபோல் அவனருகில் வந்ததும் சங்கரன் நடுங்கிவிட்டான்.

''போன்னு சொன்னப்பறம் இங்கே என்ன வேலை? என்னவோ இந்த நாட்டுப் பொண்ணு, நம்ம சாஸ்திரம் சம்பிரதாயத்தை உதறமாட்டேன்னு நினைச்சேன். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்னு நினைச்சேன். ஆனா நீ... தூ வெட்கம் கெட்டவள்னு இப்பத்தான் தெரிஞ்சுது'' அவசரமாக எழுந்து வெளியேறினான்.

மாலதி வெகு நேரம் விசும்பி அழுதுகொண்டிருந்தாள். அவளை அத்தகைய வெட்கங்கெட்ட நிலைக்கு ஆளாக்கி விட்டவன் அவளையே திருப்பிக் குற்றஞ்சாட்டுகிறான். அவளிடம் வெட்கம் கெட்டு சொந்தம் கொண்டாட வந்தவன் அவளையே ஏசுகிறான்.

ஜானம்மாள் சொன்னாள். ''குரைக்கிற நாய் கடிக்காது. நீங்க வீணா மனசைப் புண்படுத்திக்காதீங்கோ. உங்க உடம்பு ஏற்கனவே கெட்டுப் போயிருக்கு. மனசையும் கெடுத்துக்காதீங்கோ. சாப்பிட வாங்கோ.''

அவள் மனப் புண்ணுக்கு ஆறுதலாக இருந்தது அந்த வார்த்தைகள்.

# 7

அதற்குப் பிறகும் அவளுக்குத் தொல்லைகள் ஓயத்தான் இல்லை. மீண்டும் மீண்டும் அவளைப் பண வேட்டையாடிய மிருகங்கள் வந்து கொண்டே இருந்தன.

அவல் தின்னப் போன கண்ணனை மூன்றாவது பிடியில் கையைப் பிடித்துத் தடுத்தாளாமே ருக்மணி. ஜானம்மாளும் அப்படித்தான் செய்தாள்.

அந்த பங்களா, ரொக்கம், சில நகைகள் இவைகள் எல்லாம் ஜானம்மாளின் பிடிவாதத்தால் எஞ்சி நின்றன. இல்லாவிட்டால் மற்றவர்களின் தொணதொணப்புத் தாங்காமல், மாலதி எப்போதோ வாரிவிட்டிருப்பாள்.

அன்றும் அப்படித்தான் சாம்பன் மிக அவசரமாக அவளிடம் ஓடிவந்தான்.

''வந்து... அப்பாவுக்கு அவசரமாக ஒரு ஆபரேஷன் செய்யணுமாம். அம்மா உங்ககிட்டே பணம் வாங்கி வரச் சொன்னா.''

என்ன உரிமை? அம்மா வாங்கி வரச் சொன்னாளாமே? மாலதி கோபத்தால் கொதித்தெழுந்தாள்.

''உங்கம்மாகிட்டே தாலிச் செயின் இருக்குமே அதை விக்கச் சொல்லி ஆபரேஷன் பணம் கட்டச் சொல்லு'' ஜானம்மாள் வெடித்தாள். அக்கிரமங்களுக்கும் ஒரு எல்லை உண்டல்லவா?

''அதை அப்பவே அம்மா வித்துட்டா'' சாம்பன் கண்கள் கலங்கின. மாலதியும் கலங்கித்தான் போனாள்.

''விக்கமாட்டாளா? ஒரு பெண்ணின் வாழ்க்கையை சங்கிலிக்காக விட்டவராச்சே உங்கப்பா. அதுதான் தாலிச் சங்கிலியையும் துடைச்சிண்டு போச்சு'' ஜானம்மாள் விடவில்லை. ஆனால் மாலதி வழக்கமான இரக்க சுபாவத்தில் கோழையானாள்.

நோட்டுக்கள் கைமாறிவிட்டன. வந்தவர்கள் போனதும் ஜானம்மா மிக உரிமையுடன் கடிந்து கொண்டாள்.

''எத்தனை சொன்னாலும் கேட்கமாட்டேள். உங்களுக்கும் ஒரு காலம் உண்டு ஒய்வா வாழற வேளையில் வசதியா, மத்தவா தயவில்லாம வாழணும்னு நான் பாடுபடறேன்.''

''பயப்படாதே ஜானம்மா. எனக்கு வேண்டியது இருக்கு. ஆனா, வியாதி வெக்கை இல்லாம நான் நல்லபடியா வாழணும். போன ஜென்மம்னு ஒண்ணு இருக்கிறதா நான் நினைக்கிறேன். ஏன்னா இந்த ஜென்மத்துல நான் யாருக்குமே கெடுதல் நினைக்கல்லே. இப்ப அனுபவிக்கிற கஷ்டமெல்லாம் போன ஜன்மாந்திரக் கடன்னு நினைக்கிறேன். அந்தக் கடனையெல்லாம் ஒழிச்சுக் கட்டிடறேன்'' மாலதியின் கண்கள் பளபளத்தன.

''உங்களை எதில சேர்க்கிறதுன்னே தெரியலை.'' ஜானம்மாள் கூறினாள் பிரமிப்புடன்.

நாட்கள் போய்க் கொண்டிருந்தன. உடலில் அவளையுமறியாமல் அசதி, அடிக்கடி அஜீரணக் கோளாறு என்று பல தொல்லைகள்.

''வாழத்தான் குடுத்துவைக்கல்லே, நல்லபடியா சாப்பிடக்கூடவா குடுத்து வைக்கப்படாது. ஏன்தான் இப்படி கடவுள் உங்களை சோதிக்கணுமோ?'' ஜானம்மாள் அலுத்துக் கொள்வாள்.

## 8

நர்ஸ் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். வெளியே மீண்டும் மனிதத் தலைகள் எட்டிப் பார்த்தன. வெறுப்புடன் கண்களை மூடிக்கொண்டாள் மாலதி.

டாக்டர் அவளைப் பரிசோதித்துப் பார்க்கத்தான் வேணும் என்று ஜானம்மாள் பிடிவாதம் பிடித்தாள். மாலதி வேண்டா வெறுப்பாகத்தான் அதற்கு உடன்பட்டாள்.



ஆரம்பத்தில் மஞ்சள் காமாலை என்ற ஒரு சந்தேகத்தில் அவளுக்கு வைத்திய சிகிச்சை நடந்தது. பிறகு, குணம் காணவில்லை என்ற சந்தேகத்தில்தான் அவளை அந்த நர்ஸிங்ஹோமில் சேர்த்துவிட்டிருந்தார் அவளது குடும்ப வைத்தியர்.

நர்ஸிங்ஹோமிற்கு வந்ததும் அவளைத் துரத்தியபடியே வந்திருக்கும் அந்த மனிதத் தலைகள். அவர்கள் வாயிலிருந்து உதிர்ந்த பொன் மொழிகள்... மாலதி மறக்கவே மாட்டாளே.

முதல் நாள் திருமதி சரவணன், அவளைப் பார்க்க ஒரு கூடை ஆப்பிளுடன் வந்து சேர்ந்தாள். கூடவே ஒரு மகள்.

''உடம்பு இப்படி தேய்ஞ்சு போயிட்டுதே, எப்படி இருந்த உடம்பு'' என்று பிரலாபித்தாள்.

''சித்தி! ஸ்பெஷலிஸ்டுங்க என்ன சொல்றாங்க?'' மகள் கேட்டாள்.

''இன்னும் முடிவாகவில்லை. எதுக்கும் வக்கிலை வரச் சொல்லி இருக்கேன்.'' விரக்தியாகப் பேசிய மாலதி அவர்களை உற்றுப் பார்த்தாள்.

''வக்கிலா? அதுக்கெல்லாம் ஒண்ணும் தேவையிருக்காது.'' பரபரப்புடன் கூறினாள் திருமதி சரவணன்.

''வக்கில் வந்தா, கடைசிகாலம்னு நீ ஏம்மா பதறுகிறே. உயில்னு ஒண்ணு எப்பவும் எழுதி வைக்கறது நல்லது தானே'' மகள் கூறிவிட்டு மாலதியின் முகத்தைப் பார்த்தாள்.

மாலதிக்குத் தாள முடியாத கோபத்தில் தாடைகள் இறுகின. அவள் உடலைப் பற்றிக் கேட்க வந்தார்களா? அல்லது உயிலைப் பற்றிக் கேட்க வந்தார்களா? இவர்கள் மனிதர்களா அல்லது பிணம் தின்னும் கழுகுகளா? வெறுப்பினால் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''பாவம்! சித்தி மனசை கலங்க அடிச்சிட்டீங்க'' மகள் கடிந்து கொண்டாள்.

''மன்னிச்சுக்க மாலதி, மனசு கேக்கலேம்மா. நீ அடிக்கடி சொல்லுவியே பெரியவள்னா உயிருன்னு, அதை நினைச்சுக்கிட்டேன். அவளை ஒரு நாள் கூட்டிக்கிட்டு வாரேன்.

உன்னோட பங்களாமேலே அவளுக்கு அத்தனை ஆசை. வீடுன்னா சித்தி கட்டின வீடு போல இருக்கணும். என்னமா இழைச்சு இழைக்கக் கட்டி இருக்காங்க, இனி கொஞ்சறது வீடும்பா. ஹூம்! என்ன செய்யறது- இப்படி படுத்துக்கிட்டே.''

மாலதி படுத்துக் கிடப்பதில் அல்ல அவர்கள் புலம்பல். அவளது வீடு வேறு எவருக்காவது பறி போய்விடப் போகிறது என்றுதான் கவலை. மாலதிக்கா தெரியாது?

''கவலைப்படாதீங்க, நீங்க எதுக்கு வீணா பணத்தைச் செலவழிச்சுக் கொண்டு நர்சிங் ஹோம் வரணும். நான் வீட்டிற்கு வந்த பிறகு பார்த்துக்கலாம்'' என்று துண்டிக்கப் பார்த்தாள். ஆனால் அவர்கள் விடாமல் வந்து கொண்டே இருந்தனர். உயிலின் ஷரத்து என்ன என்று தெரியும்வரை அவர்கள் விடப் போவதில்லை.

சங்கரன் மட்டும் விட்டானா? அந்த நிகழ்சிக்குப் பிறகு அவன் வரவில்லை. ஆனால் அவன் மனைவி சகுந்தலா அடிக்கடி சாத்துக்குடிப் பழ சகிதம் வந்து நின்றாள்.

இடுப்பில் சாயம் போன நூல் சேலை, கழுத்தில் மஞ்சள் கயிறு. ஜானம்மாகூட சுத்தமாக பார்க்க நாகரீகமாகத் தெரிகிறாள். சகுந்தலா அதற்கும் கேடு கெட்ட ஒரு தோற்றத்தில் வறுமையின் அறைகூவலோடு அவளைப் பார்க்கவே வந்துவிட்டாள். ஒரு வேளை இதுவும் வேஷமோ என்னவோ?

''அக்கா! நீங்க தெய்வம் போல என் தாலியைக் காப்பத்தினேள். நீங்க மட்டும் பழசையெல்லாம் நினைச்சிண்டு எனக்கு உதவாம இருந்தா...'' தோளைக் குலுக்கிக் கொண்டு, கண்களைத் துடைத்துக் கொண்டாள் சகுந்தலா.

பழையதையெல்லாம் நினைத்திருந்தால் அவள் முதலில் சங்கரனது உரிமை மனைவியாக வாழ்ந்திருக்க முடியுமா? கோர்ட், கேஸ், ஜீவனாம்சம் என்று சந்தி சிரிக்க வைத்திருப்பாளே? மாலதி தனக்குள்ளே வெறுப்புடன் சிரித்துக் கொண்டாள். இப்போது அக்கா உறவுவேறு கொண்டாட வந்துவிட்டாள். கணவனுக்கும் மனைவிக்கும் பண விஷயத்தில் எத்தனை ஒற்றுமை?

இதுவே மாலதியிடம் பணம் இல்லாமல் இருந்து, அவர்கள் வீட்டுப் படியேறிப் போய் உரிமைப் பிரச்சனை எழுப்பி இருந்தால்,



இந்த சகுந்தலாவின் உருவமே மாறிப் போயிருக்காதா? அக்காவாவது சொக்காவாவது என்று தூக்கி எறிந்திருக்க மாட்டாளா? இப்போது அவளது பணம் அவர்களுக்குத் தேவை. யாரோ அனுபவிக்கப் போகிறார்கள், நாமும் அனுபவிப்போமே என்ற ஆத்திரம் - ஆசை - ஆதங்கம்.

மாலதி பேசவில்லை. வரவர அப்படிப்பட்டவர்களிடம் பேசக்கூட அவளுக்கு மனம் இருக்கவில்லை.

'அக்கா, வக்கில் வந்து உயில் எழுதப் போறாராமே. எதுக்கு' ஆதங்கத்துடன் கேட்டாள் சகுந்தலா.

''எதுக்கு எழுதுவாளோ அதுக்கு'' குரூரமாகப் புன்னகைத்தபடி மாலதி கூறினாள்.

நான் வெளிப்படையா சொல்றேன்னு நினைக்காதீங்கோ. தப்பா நினைக்கப்படாது. பிற்காலத்துல பிள்ளைகள்தான் காப்பாத்துவா. பெரியம்மா, பெரியம்மான்னு உங்களைத் தெய்வமா நினைக்கிறான்கள் சிவனும் சாம்பனும், அவாளையும் நீங்க நினைவில் வச்சுக்கணும். நீங்க ஷேமமா வீடு திரும்பணும்னு பகவானை வேண்டிண்டிருக்கேன். வைத்தீஸ்வரன் கோவிலுக்கு உங்ககூட வரதா நேர்த்தி'' விடைபெற்றுக் கொண்டாள் சகுந்தலா.

வைத்தீஸ்வரருக்கு மாலதிகூட வருவதாக வேண்டுதலை. பயணச் செலவு கூட மாலதியின் பங்காக இருக்கட்டுமே என்ற மாபெருங் கருணை உள்ளம். மாலதிக்கு மனிதர்களை விடத் தனிமை தேவைப்பட்டது.

அவளின் மாபெரும் ரசிகர்கள், நர்சிங்ஹோம் வாயிலை அடிக்கடி முற்றுகை இட்டனர். அதனால் மற்ற நோயாளிகளைக் கவனிப்பது கூடக் கஷ்டமாகி விட்டதாக டாக்டர்கள் குறைகூற ஆரம்பித்து விட்டனர். மாலதி தற்போது யாரையுமே பார்க்க விரும்பவில்லை.

''நர்ஸ்! அந்த ரேடியோவை மூடிவிடு'' ஆயாசத்துடன் கூறியபடியே கண்களை மூடிக்கொண்டாள் அவள்.

''ஜானம்மா வரல்லியா?'' மெலிதாகக் கேட்டாள்.

''வந்துடுவாங்கம்மா, வேற யாரும் வந்து தொந்திரவு

செய்யமாட்டாங்க. கவலைப்படாதீங்க'' மீண்டும் ஒரு முறை கூறிவிட்டுக் கதவை மூடியபடி வெளியே சென்றாள் அவள்.

மாலதி லேசாகப் புரண்டு படுக்க முயன்றாள். உடல், நோயின் வேதனையால் தவித்தது! உள்ளத்தாலும், உடலாலும் மிக மிகச் சோர்ந்துபோய் விட்டோமே என்ற உண்மையை அவள் நன்கு விளங்கிக் கொண்டிருந்தாள். அறைக் கதவு திறந்து கொண்டது.

நர்ஸ், குடும்ப டாக்டர் தொடர ஸ்பெஷலிஸ்டு உள்ளே நுழைந்தார். குள்ளமான உருவம். கூர்மையான கண்கள், வெள்ளை வெளேரென்ற உடையில், குதி நடைபோட்டபடி அவர் வருவதைக் கண்டதும் மாலதிக்கு சிரிப்பு வந்துவிட்டது. அவளது வியாதி என்ன என்பதைத் தீர்ப்புக் கூறும் நீதிபதி வந்தாகிவிட்டது. அவளது ஆயுட் காலம் இனித் தீர்மானமாக நிர்ணயிக்கப்பட்டுவிடும்.

''குட்மார்னிங், யங்லேடி, ஏதாவது சாப்பிட்டீங்களா? உங்க பாட்டைக் கேட்கும் ரசிகர்களில் நானும் ஒருத்தன்'' என்றபடியே அவர் அவளருகில் வந்து பரிசோதித்தார்.

குடும்ப வைத்தியரும் நர்ஸும் ' உடனிருந்து தேவையானவற்றைச் செய்து முடித்துவிட்டு, வெளியே சென்றனர். ஸ்பெஷலிஸ்டும் உடன் சென்றார். மாலதி மீண்டும் புன்னகைத்தாள். எதற்காக இவர்கள் மூடு மந்திரம் செய்கிறார்கள்? வியாதி இன்னது என்று நோயாளியிடமே சொல்லிவிட்டால் அவள் பயத்தில் இறந்துவிடுவாள் என்ற பயமா? இல்லை பொய் சொல்லி மறைப்பதன் மூலம் அவள் உயிரைப் பிடித்து இழுத்து நிறுத்திவிடலாம் என்ற நம்பிக்கையா?

மீண்டும் அறைக்கதவு திறந்தது. இம்முறை 'ஸ்பெஷலிஸ்டு' மட்டுமே வந்தார். மிக நிதானமாக, ஏதோ தீவிரமாக யோசிப்பவர் போல் காணப்பட்டார். கனிவுடன் அவளருகில் வந்தவர், ''மேடம், உங்கள் உறவினர்கள் யாராவது இங்கே இருக்கிறார்களா?'' என்றார். அவர் முகத்தில் தீவிரமான சிந்தனையின் குழப்பமும், தயக்கமும் தெரிந்தன.

மாலதி மெலிதாக முறுவலித்துவிட்டு, ''எனக்கு யாருமே சொந்தம் இல்லியே'' என்றாள்.

''என்ன ஆச்சரியம்? எவ்வளவு பெரிய பாடகி நீங்கள்.



உங்களுக்கு என்று சொந்தம் கொண்டாட எவருமே இல்லையா?'' நம்ப முடியாதவராய் அவர் கேட்டார்.

''உட்காருங்க டாக்டர்!'' என்று அவரை உபசரித்தபடி,''எனக்கு சொந்தம்னு சொல்லிக்க அநேகம் பேர் ஓடி வரத் தயார். ஆனா ஆத்மார்த்தமா, உண்மையான சொந்தம்னு சொல்லிக்க யாருமே கிடையாது டாக்டர். அரிசியை எறிஞ்சா ஆயிரம் காக்கைகள்னு நீங்க கேட்டிருப்பீங்களே!'' அவள் குரல் கம்மியது.

''ஐ ஆம் ஸாரிம்மா, பரவாயில்லை'' என்ற ஸ்பெஷலிஸ்ட் நாற்காலி ஒன்றை அவளது கட்டிலருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார். ஒருசில கணங்கள் அவளையே உற்றுப் பார்த்தார். அவருக்கே கஷ்டமாக இருந்தது.

''என்னவானாலும் நீங்கள் தயங்காமல் என்னிடமே சொல்லுங்கள். நான் ஏற்கனவே என்னைப் பத்தி ஒரு முடிவு செஞ்சிட்டிருக்கிறேன். மனசையும் திடப்படுத்திக் கிட்டிருக்கிறேன். டாக்டர் ப்ளீஸ்'' அவள் கெஞ்சினாள்.

தொண்டையைக் கனைத்துவிட்டு அவர் ஆரம்பித்தார். ''உங்கள் குடலில் புற்றுநோய் பரவி இருக்கிறதம்மா. ஆரம்ப நிலையிலேயே நீங்கள் இதைக் கவனித்திருந்தால் குணப்படுத்தி இருக்கலாம். இப்போது... அது மூச்சுக் குழல் வரை பரவியிருக்கிறது. உங்களை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்று எங்களால் ஆன முயற்சி செய்கிறோம்'' திடீரென அவளது கையை மெதுவாகத் தட்டினார் அவர்.

''மை யங் லேடி! ஆண்டவன் உங்களுக்கு அபாரமான குரலைக் கொடுத்திருக்கிறான். அது என்றென்றும், பாடி எங்களை எல்லாம் பரவசப் படுத்தவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். அமெரிக்காவிலிருந்து ஒரு புது மருந்து வரவழைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். கடைசிவரை போராடுவோம்'' அதற்குமேல் அவரால் பேசமுடியவில்லை.

''நான் மிகமிகத் தைரியமாகத்தான் இருக்கேன டாக்டர். மரணங்கிறதுகூட ஒரு மாதிரி தூக்கம்தானே. எல்லோருமே இந்த உலகத்திலே சிரஞ்சீவியா வாழணும்னு ஆசைப்பட்டா, இனிமேல் பிறக்கப்போகிற உயிர்களுக்கு இந்தப் பூமியிலே வாழ ஊசிமுனை

இடம் கூடக் கிடைக்காது இல்லையா? அப்புறம் குடும்ப நலத் திட்டத்திற்குப் பதிலா, 'முதியோர் இறப்பு நலத்திட்டம்'னு ஒண்ணு கொண்டுவர வேண்டியிருக்கும்'' மாலதி தன்னையும் மீறிச் சிரித்தாள்.

ஸ்பெஷலிஸ்ட் இரக்கத்துடனும் வியப்புடனும் அவளையே பார்த்தார். ''எல்லோருமே தங்கள் கடைசி முடிவை இப்படி அமைதியாக, திடமாக ஏற்றுக்கொள்வதில்லை. அதனால்தான் நாங்கள் அந்தந்த நோயாளியிடமே உண்மையைச் சொல்றதில்லை. ஆனால் நீங்கள்... எனக்கு உங்களைப் பற்றி மிக உயர்ந்த எண்ணம் ஏற்பட்டு விட்டது'' என்றார் பெருமையாக.

''நல்லது இப்ப சொல்லுங்க. இனி நான் வாழப் போவது எத்தனை நாட்கள் அல்லது மாதங்கள்?''

''ஒரு மாதமோ அல்லது... ரத்தம் செலுத்துவது, மருந்து... உங்கள் உடல் அதை ஏற்றுக் கொள்ளும் சக்தி இதைப் பொறுத்து இருக்கலாம்.''

''அப்படின்னா இனி உணவுக் கட்டுப்பாடு வேண்டாமே?''

''வேண்டியதில்லை. உங்களுக்குப் பிடித்தமானதைச் சாப்பிடலாம்.''

''வெளியே போய் வரலாமா?''

''உங்கள் உடம்பு அனுமதித்தால்.''

''டாக்டர், இந்த வெளி உலகை, இயற்கை அன்னையைக் கடைசி முறையாக, எனது வீட்டுப் பூஜை அறையை மட்டுமாவது பார்க்க அனுமதியளியுங்களேன்'' அவள் குரலில் ஏக்கம் தொனித்தது.

ஸ்பெஷலிஸ்ட் எழுந்தார். ''தகுந்த பாதுகாப்புடன் நீங்கள் வெளியே போகலாம்.''

''நான் வீட்டிற்கே போய்விடுவேன். ஆனால் அங்கே உறவு என்ற பெயரில் ஒரு காக்கைக் கூட்டமே என்னைக் கொத்திப் பிடுங்கிவிடும். ரசிகர்களின் தொல்லை அதுக்கும் மேலே. அதனால் நான் இங்கேயே தங்கிவிடறதில்...''

''எந்தவிதமான மறுப்பும் இல்லை. ஆண்டவன் உங்களைக் காப்பாற்றட்டும்'' அவர் விடை பெற்றுக் கொண்டுவிட்டார்.



மாலதி கண்களை மூடிக்கொண்டாள். இனி திட்டவட்டமாக அவளுக்குத் தெரிந்தாகிவிட்டது. வாழ்வு என்பது அவளைப் பொறுத்தவரையில் என்றோ அழிந்து போன ஒன்று.

ஆசைக் கனவுகளுடனும் இளம் பெண்ணின் இன்ப எதிர்பார்ப்புகளுடனும் சங்கரனின் மனைவியாக அவள் நாணத்தால் முகம் சிவக்க, உள்ளமெல்லாம் துடிக்க நின்றபோது அவன், உணர்ச்சிக் குவியலாக நின்ற அவளை ஒரே மூச்சில் கொன்றுவிட்டான். தங்கம் போன்ற பெண்ணை வெறும் தங்கத்திற்காகக் கொலை செய்தாகிவிட்டது.

மீண்டும் செத்த பிணத்தையே கொலை செய்வது போல், அவளது மனசாட்சியை சரவணனும் கொலை செய்து முடித்துவிட்டார். இப்போது எஞ்சி நிற்பது அவளது உடல். பிறரால் வஞ்சிக்கப்பட்ட உயிர் மட்டும்தான் அதில் ஒட்டிக்கொண்டு தவித்தது. அந்த உடலுக்கும் நோய் என்ற கொடிய அரக்கனால் ஆபத்து வந்தாகிவிட்டது. இனி அவளது ஆத்ம திருப்திக்காக என்ன செய்ய வேண்டும்? அவள் சிரமத்துடன் எடுத்து வைக்கப்போகும் ஒவ்வொரு அடியும், அவள் கடைசியாக இவ்வுலகில் வாழப்போகும் கணங்கள், நாட்கள்.

மாலதி பற்களைக் கடித்துக்கொண்டாள். புற்றுநோய் என்ற கொடிய அரக்கன் அவளைத் தின்று கொண்டே இருக்கிறான். ஒவ்வொரு அவயமாக மறைந்துகொண்டே இருக்கிறது. இனி அவனிடமிருந்து தப்ப முடியாது. ஒரு விதத்தில் அவன் நல்லவன். நோயாகத்தானே வந்து தின்கிறான். மற்றவர்களைப் போல, பணப் பேயாக வந்து அவளை மனம் நோகச் செய்யவில்லையே!

மாலதி ஜானம்மாளைப் பார்க்குமுன் வேறு முக்கியமான வேலை ஒன்றைச் செய்து முடிக்க விரும்பினாள். அன்று மாலைக்குள் அதை முடித்துவிட வேண்டும்.

நர்ஸ் மெதுவாகத் தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள்.

''நர்ஸ்! எங்க குடும்ப வக்கீலைப் பார்க்கணும்னு சொல்லு. ஆனால் ஒரு விஷயம். எங்க வீட்டுப் பட்டாளங்கள் போன பிறகு இங்கே அவர் வந்தால் போதும். ஏன்னா, உயில் எழுதற விஷயம் எவருக்குமே தெரியக் கூடாது. இதை நீ கட்டாயம் செய்வியா?''

நர்ஸின் கண்கள் ஈரமாயின. ''அதுக்கென்ன செய்யறேன். 'விஸிட்டர் நேரம்' ஆயிட்டுதுன்னு அவங்களை அனுப்பிட்டு, அந்த இடை நேரத்தில் நீங்க உங்க வேலையை முடிங்க.''

''அது மட்டும் இல்லே. எனக்கு ஒரே ஒரு நடை என் வீடு வரைக்கும் போய் வரணும். ''ஸ்பெஷலிஸ்டு'' உத்திரவு கொடுத்திட்டார். தகுந்த உதவியோட காரில் போகலாம்னு. அப்புறம் எது வேணுமானாலும் சாப்பிடச் சொல்லிட்டார்'' மாலதி சிரித்தாள்.

நர்ஸ் பரிதாபமாக அவளையே பார்த்தாள். ''எப்படி இருந்தவங்க இந்த அம்மாள், பார்க்க மிகக் கவர்ச்சியாக, காதில் வைரமும், மூக்கில் வைரமுமாக, கட்டுக் கதம்பத்தைத் தலையில் சூடிக்கொண்டு, கையகல சரிகைக் கரை போட்ட பட்டுப் புடவையும், சிவப்புக்கல் அட்டிகையுமாக, நெற்றி குங்குமம் மின்ன, எத்தனை அழகா கச்சேரி மேடையில் உட்கார்ந்திருப்பாங்க. இப்ப கன்னங்கள் குழிஞ்சு, கண்கள் உள்ளே போய், பிரேதம் போல...''

''என்ன நர்ஸ்? யோசிக்கிறே? பயமா இருக்கா?'' மாலதி கிண்டலாகக் கேட்டாள்.

சில பேர்கள் இறக்கும்வரை கணீரென்று பேசிக் கொண்டே இருப்பார்கள். பலருக்கு குரலும் ஒடுங்கிப் போய்விடும். அனுபவத்தில் இதைக் கண்டறிந்தவள் நர்ஸ்.

'இந்தம்மாளின் குரல் இன்னும் 'கிண்'ணென்றுதான் இருக்கிறது. மன வலிமையாக இருக்குமோ?'

''நர்ஸ்! என்ன யோசனை, பதிலையே காணோம்'' அவள் சட்டென விழித்தவள்போல் ''அ! அதுக்கென்ன உங்களை எங்க வேணுமானாலும் கூட்டிப் போகிறேன்'' என்றாள் புன்னகையுடன்.

மாலதி அதிகம் தாமதிக்க விரும்பவில்லை. அவளது குடும்ப வக்கீலை வரவழைத்து உயிலை எழுதிக் கையெழுத்திட்டபோது அவள் மனதில் மாபெரும் திருப்தி எழுந்தது. அவளது உயில் விவகாரம் உறவு என்று சொல்லி அலைந்து கொண்டிருக்கும் அவர்களுக்கு என்ன தரப்போகிறது? மனதிற்குள் சிரித்துக் கொண்டாள்.

மாலை ஜானம்மா கையில் சிறிது மோர்க்களி சகிதம் வந்து



சேர்ந்தாள். என்றுமில்லாதபடி மாலதி உற்சாகமாகக் காணப்பட்டதைக் கண்டு ஜானம்மாளுக்கே ஆச்சரியமாகிவிட்டது.

''என்னம்மா உடம்பு தேவலையா? டாக்டர் ஏதாவது சொல்லிடப் போறான். இந்த மோர்க் களியை ஒளிச்சு எடுத்து வறேன்'' மெதுவாக இடுப்பில் பதுக்கி வைத்திருந்த அந்த சின்னஞ்சிறு டிபன் டப்பாவை வெளியே எடுத்தாள்.

மாலதி உரக்க சிரித்துவிட்டு, ''பயப்படாதே, ஜானம்மா. டாக்டர் இனிமேல் நான் எது வேணுமானாலும் சாப்பிடலாம்னு சொல்லிட்டாரு. வாய்க்கு ருசியா மிளகு குழம்பு, உளுந்து வடை, புளியஞ்சாதம்... எது வேணுமானாலும் சாப்பிடலாம். தினமும் நீயும் ஏதாவது எடுத்துண்டுவா.''

ஜானம்மாளின் கண்கள் அகல விரிந்தன.

''நிசம்மாவா?'' என்றாள்.

''நிசம்தான்.''

''அப்ப வீட்டுக்கே போயிடலாமே.''

''வீட்டுக்கு வருவேன், வந்து நம்ம பூஜையறையில் உட்கார்ந்து ஒரு பாட்டும் பாடுவேன்.''

ஜானம்மாளின் ஆனந்தம் அளவு கடந்து போயிற்று. ஆதரவுடன் அவளருகில் அமர்ந்து அவளது தலையைக் கோதிவிட்டாள். முகத்தைத் தடவினாள்.

''எப்படி இருந்த உடம்பு தளதளன்னு, எப்படிக் குச்சியா போயிட்டுது. இனிமே நான் சமைச்சுப் போடறதை சாப்பிடணும். வீட்டுக்கு வந்தப்புறம் கூட டெலிபோன், அது இதுன்னு உங்க ரசிகக் கும்பல் வந்தால் நான் பேசவிட மாட்டேன். கொஞ்ச நாள் நன்னா ரெஸ்டு எடுத்துக்கணும் என்ன?'' என்றாள் அன்போடு.

மாலதிக்கு ஏனோ துக்கம் நெஞ்சையடைத்தது. ஜானம்மா என்ற ஒரே ஒரு உயிர் மட்டும் அவளிடத்தில் அன்பு செலுத்துகிறது. அம்மா என்ற பாசத்தை ஐந்து வயதிலேயே இழந்துவிட்டவள் அவள். இப்பொழுது முழுமையாக அந்த அன்பை, ஆசையை அவளிடம் கொட்டிக்கொண்டிருக்கும் அந்தத் தாயிடம் பொய் பேச முடியுமா? உண்மையை உடைத்துச் சொல்லிவிடுவதுதான் நல்லது.

இல்லையேல் அந்த அன்பு மனமும் அதிர்ச்சிக்குட்பட்டுவிடாதா?

''ஜானம்மா என் மேல் ரொம்ப அன்பு வச்சிருக்கே இல்லே?''

''இது என்ன கேள்விம்மா! என் மகளைப் போல நினைக்கிறேன்.''

''எனக்கு 'ரெஸ்ட்' வேணும்னு ஆசைப்படறே இல்லே?''

''நிச்சயமாக. உடம்பு ரொம்ப தொறுங்கிப் போயிடுத்து. நல்ல 'ரெஸ்ட்' குடுத்தா சரியாகிடும்.''

''இனிமே... நிரந்தரமான 'ரெஸ்ட்' எனக்குக் கிடைக்கடும் ஜானம்மா'' இம்முறை அவளையும் மீறி கண்ணீர் பெருகியது.

ஜானம்மாவிற்கு சிறிது நேரம் எதுவும் விளங்கவில்லை. திடீரெனப் புரிந்துகொண்டவள் விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள்.

''குழந்தை! நீ என்ன சொல்லறே? என் கண்ணே இந்தச் சின்ன வயசில்... ஊஹூம்... இது ஆண்டவனுக்கே பொறுக்காது. மாட்டேன்... மாட்டேன்... இப்படி நடக்காவிடமாட்டேன்'' என்று பலவாறு விம்மியபடி அவளை இறுக அணைத்துக் கொண்டாள். அவளது உடல் முழுவதும் துயரத்தால் குலுங்கியது.

ஜானம்மாள் அழுது முடிப்பது நல்லது என்று மாலதி விட்டு விட்டாள். ஆற்றாமையும், துயரமும் கண்ணீராக வேண்டும்.

கண்களைத் துடைத்துக் கொண்ட ஜானம்மாள் எழுந்தாள். ''இதைப் பாருங்க, உங்ககிட்டே பணம் இருக்கு. அமெரிக்கா மாதிரி பெரிய ஊருக்குப் போய் உங்க வியாதியைக் குணப்படுத்திடுவோம். இப்பவே அதுக்கு ஏற்பாடு செய்யலாம்'' என்றாள் பிடிவாதமாக.

புற்றுநோய் அரக்கன், ஆனானப்பட்ட அமெரிக்கா ரஷ்யாக்காரர்களையே ஏப்பம் விட்டிருக்கிறான் என்று சொன்னால் ஜானம்மாளுக்குப் புரியவா போகிறது? அவள் புன்னகையுடன் ''டாக்டர் ஏதோ ஸ்பெஷல் மருந்து வரவழைக்கப் போகிறாராம். பார்க்கலாம்'' என்றாள் சமாதானப்படுத்தும் தோரணையில்.

''சரி, இந்த மோர்க் கஞ்சியை சாப்பிடுங்கோ'' ஆதரவுடன் அவளை தோளின் மீது சாற்றிக் கொண்டு, டிபன் டப்பியைத் திறந்து அதனுள்ளிருந்த ஒரு சிறு ஸ்பூனில் அள்ளி அவள் வாயில் போட்டாள் ஜானம்மாள்.



''அப்பா! எத்தனை நன்னாயிருக்கு? ஜானம்மா நாளைக்கி வீட்டுக்கு வருவேன் அப்ப, நீ வாக்கிறது போல முறுகலா ரவை தோசை பண்ணிவை'' என்றாள் மாலதி. ஜானம்மாவின் கண்களில் நீர் புரண்டது. பணத்தை வாரி வாரி சம்பாதிக்கும் எஜமானி அவள். ஒரு வாய் உணவிற்கு, ஏழை ஜானம்மாளிடம் எதிர்பார்த்துக் கெஞ்சும் நிலை. ஆண்டவா! நீ இரக்கமற்றவன். எத்தனை ஏழைகளுக்கு அள்ளிக் கொடுத்த ஒரு உயிரை இளம் வயதில் இப்படி ஒரு கொடுமைக்கு இலக்காகி அழுக வைத்தா எடுத்துக் கொள்கிறாய். நெஞ்சில் எழுந்த விம்மலை அவசரமாக விழுங்கிக் கொண்டாள். கண்களில் நீரைச் சமாளித்தாள்.

மாலதியின் மனம் இலேசாகியிருந்தது. மெதுவாக ஜானம்மாவைப் பிடித்துக்கொண்டு எழுந்து நடக்க முயன்றாள். இப்போது அவள் மனதினுள் ஒரு அசுரபலம். வெறி... உருவாகியிருந்தது.

''ஜானம்மா, என் படுக்கை அறையில் ஒரு மேஜை இருக்கே, அதில் ஒரு டேப்ரெக்கார்டர் வச்சிருக்கேன் தெரியுமா?''

''தெரியுமே. தினமும் அதில் பாடிப்பாடிப் பார்த்து பிராக்டிஸ் செய்வேளே, அதுதானே?''

''அதுதான். அதை பூஜை அறையில் வச்சு தயார் செய்யச் சொல்லு. அப்பா வயலின் அங்கதானே இருக்கு.''

''தினமும் அதைத் துடைச்சு ஸ்வாமிக்கு விளக்கேத்தும்போது, அதுக்கும் பூ பொட்டு வைப்பேன். வழக்கத்தை மாத்தமாட்டேன். உங்கப்பா உபாசித்த சங்கீத தேவதையாச்சேம்மா!''

மாலதிக்கு வருத்தமாக இருந்தது. அப்பா கர்நாடக சங்கீதத்தை தேவதையா உபாசித்தார். மாலதி வெறும் கலப்படமான சங்கீதத்தைத்தான் பாடி வந்தாள். ஒரு நாள், ஒரு நேரம்கூட அவளது அப்பாவின் ஆத்ம திருப்திக்காக அவளால் பாட முடியவில்லை. அந்த பூஜையறையில் சாம்பிராணி தூப தீபங்களுடன் மணம் கமழ, குத்துவிளக்கு ஒளியில் அந்த வயலினும் படுத்திருந்தது. அவளுக்குத்தான் அதைக் கண்களில் ஒற்றிக் கொண்டு விட்டு, ஆத்மார்த்தமாகப் பாடும்படியான வாய்ப்புக் கிடைக்கவில்லை.

பின்னணிக் குழுவினரின் வாத்ய இரைச்சலில் 'ஓ' வென்று கத்திப்

பாடியே வழக்கமாகிவிட்டிருந்தது. வாத்ய கோஷமில்லாமல், மற்றவரது இடையூறு, கட்டுப்பாடு இல்லாமல், இறைவனைத் துதித்து மனமாற அவள், என்று பாடப் போகிறாள்? இந்தப் பிறவியில் அது சாத்தியமா?

## 9

மறுநாள் மிகுந்த சிரமத்துடன் மாலதி வெளியே காரில் புறப்பட்டாள். மற்றவர்கள் காணாத சமயம். ஜானம்மா, நர்ஸ் சகிதம், கடற்கரை வரை காரில் பவனி வந்தாள். அவள் கடைசியாகப் பார்க்க வேண்டிய இடங்கள், இயற்கை அன்னையின் எழில், சாயங்காலத்து சூரியன், வானத்தில் எழும்பி நிற்கும் நிலவு என்று அணு அணுவாக ரசித்தாள். அவளது நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை மட்டும் அவள் வெளி உலகத்திற்கு மறைத்து வைக்க விரும்பினாள். ஏனெனில், அவளது முடிவு இனிமையானதாக இருக்க வேண்டும். பிறரது குறுக்கீடுகள் இல்லாத சுதந்திரமான முடிவை அவள் விரும்பினாள். அவளது முடிவுக்காலம் நெருங்கி விட்டது என்று தெரிந்துவிட்டால், உறவு என்ற கழுகுகள் அவளைக் கொத்திக் குதறிவிடும். ரசிகர்கள் கும்பல் அவளது நிம்மதியைக் குலைத்துவிடும்.

ஜானம்மா அன்று எவ்வளவு மறுத்தும் மாலதி கேட்கவில்லை. வீட்டிற்கு வருவேன் என்று ஒரே பிடிவாதமாக இருந்தாள் அவள். மாலதியை மிக மெதுவாக ஜாக்கிரதையாக, யாரும் பார்க்காத சமயம் வீட்டினுள் அழைத்து வந்து விட்டிருந்தாள் ஜானம்மாள். நர்ஸ் ஓடிச் சென்று கதவுகளைச் சாத்தினாள்.

மாலதி மிகுந்த சிரமத்துடன் பூஜையறையில் அமர்ந்தாள். எதிரே அப்பா வயலின், அருகே அவரது போட்டோ, அபிராமி அம்மன், வண்ணப்படத்திலிருந்து அவளைக் கருணையுடன் பார்த்தாள். ரோஜாப்பூ மாலை படத்திலிருந்து மணத்துடன் சிரித்தது.



''தாயே! உன்னைப் பாடவேண்டிய நாக்கு, இப்படிக் கண்ட காதல் பாட்டுக்களையே பாடியதேன்னு என்னை வெந்துபோன்னு சாபம் குடுத்திட்டியா? ஆனா உன்னை நான் விடமாட்டேன். அதுக்குப் பிராயச்சித்தமா, இப்ப உன்னைப் பாடிவிடறேன். எனக்கு சாப விமோசனம் குடுத்திடு'' அவள்கண்கள் நீரில் கரைந்தன.

''ஜானம்மா! அந்த மைக்கை எடு.''

ஜானம்மா அவசரமாக அதை அருகில் வைத்தாள். ''உனக்குப் அபிராமி அந்தாதின்னா ரொம்ப பிடிக்குமில்லையா?''

''ஆமாம் இப்பப் போயி... எதுக்கம்மா'' அவள் தயங்கினாள்.

''நீ இதுவரைக்கும் எதுவுமே வேணும்னு கேக்கலை. இப்ப நீ கேக்காமலேயே, உனக்கு நான் தரப் போறேன்.''

ஜானம்மாளுக்கு வேதனையால் நெஞ்சு வெடித்து விடும்போல் இருந்தது.

''பின்னணி சத்தமில்லாம, நான் ஆத்மார்த்தமா இப்ப அம்பாளைக் கூப்பிட்டுப் பாடப்போறேன். இந்த டேப்ரெக்கார்டர் அதில் உள்ள பாட்டுகள் எல்லாம் உனக்குத்தான். இதை யார் கேட்டாலும் குடுக்காதே'' மாலதி கூறிவிட்டு, திடீரெனத் தன் சக்தி முழுவதையும் ஒன்று திரட்டிப் பாடினாள்.

''நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றியாண்டு கொண்டாய்
நின்னையுள்ள வண்ணம் பேயேன் அறியும்
அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றோன்
தாயே மலைமகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே
ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்னாகப்
பாசத்தால் அல்லற்பட இருந்தேனை நின்பாத மெனும்
வாசக்கமலம் தலைமேல் வலிய வைத்தாண்டு கொண்ட
நேசத்தை என் சொல்லுவேன் ஈசர் பாகத்து நேரிழையே''

அவளது குரலில் இழைந்திருப்பது தேனா, பக்தியா, பரவசமா, பச்சாதாபமா? உணர்ச்சிகள் உருக உள்ளமெல்லாம் தித்திக்க, கேட்பவர் எலும்பையெல்லாம் ஊடுருவிக் கொண்டு பக்திச் சுவை சொட்டச் சொட்ட எங்கேயோ அமைதியான இடத்திற்கு அழைத்துச்

செல்லும் அழைப்புபோல... ஜானம்மாவின் கண்களிலிருந்து ஆறாக நீர் பெருகியது. மாலதி கண்களை மூடியபடி, ஒரு லயிப்பில் பாடி முடித்தாள். நர்ஸ் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு அவளருகில் வந்து,

''அம்மா, போதும் நாம போகலாமா?'' என்றாள்.

இனி மாலதிக்கு எதுவும் கவலையில்லை. மெல்ல எழுந்தாள். ''அப்பா! உங்க மகள் உங்க கிட்ட வருவா. இனிமேல், இறைவன் சந்நிதானத்தில் நாம ரெண்டு பேருமே ஆனந்தமா பாடலாம். ஆத்மார்த்தமா பாடலாம்.'' நினைத்தபடி வெளியே வந்தாள். ஜானம்மா ஓடிச் சென்று டேப்ரிக்கார்டரை பத்திரப்படுத்தி விட்டு வந்தாள்.

அன்று மாலதிக்கு மூச்சுத் திணறல் அதிகமாகி விட்டது. நர்ஸிங் ஹோமிற்கு ஓடோடி வந்த ஜானம்மாள் ஓசை படாமல் அவளைத் தன் மடிமீது கிடத்திக் கொண்டு கட்டிலில் அமர்ந்து கொண்டாள்.

''ஜானம்மா! இனிமே பிழைக்க மாட்டேன். எனக்கு ஒரே ஒரு ஆசை, செய்வியா?'' மாலதி திணறினாள்.

''சொல்லுங்கம்மா'' ஜானம்மா விசும்பினாள்.

''உன் மடியில் எங்கம்மான்னு நினைச்சிருக்கிற உன் மடியிலதான் என் பிராணன் போகணும். எனக்குப் பிற்பாடு நீ சுகமா வாழணும்.''

ஜானம்மாளுக்கு அதற்கும் மேல் கட்டுப்படுத்த முடியவில்லை. ''மகளைப் பறிகொடுத்திட்டு என்னால் எப்படிம்மா சுகமா வாழ முடியும். குழந்தே என்கை கரிக்கையா போச்சே. நான் எத்தனை ஆசையா உங்க வீட்டுக்குள்ளே நுழைந்தேன்'' கதறியபடி, ''மாலதி! நீ சாகக்கூடாது. சாக விடமாட்டேன். எனக்கு எதுவுமே வேணாம். நீதான் வேணும்'' அவளை முகத்தோடு முகம் சேர்த்துக் கொண்டாள்.

''பைத்தியம்! ஜானம்மா எனக்கு சத்தியம் செய்துகுடு. நீ என் வீட்டைப் பார்த்துக்கணும். என் சங்கீதத்தைக் காப்பாத்தணும்'' மாலதி பிடிவாதம் பிடித்தாள்.

''எனக்கு வீடு வாசல் எதுவும் வேணாம்மா?'' அரற்றினாள்



ஜானம்மா.

''உனக்கு வீடு வாசல் எதுவும் இல்லே'' என்ற மாலதி புன்னகையுடன் நிறுத்தினாள். அவளது வீடு, சொத்து என்று யாவற்றையும் ஒரு 'ட்ரஸ்ட்' ஏற்படுத்தி, அனாதை இல்லங்களுக்கும் சங்கீத உபாசகர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டது அவளுக்குத்தானே தெரியும்!

ஜானம்மா பெயரில் அவளது கடைசி காலம் மட்டும் குறிப்பிட்ட தொகை செலவுக்கு என்று போட்டு வைத்ததை மாலதி குறிப்பிடவேயில்லை. அவளது வக்கீல் அவற்றை சரிவர நிர்வகிப்பார்.

''உங்க உறவுக்கார மனுஷர் எல்லாம் நீங்க என்ன தரப்போறேன்னு எதிர்பார்த்துக் கொண்டிருக்கா...'' ஜானம்மா விசும்பினாள். ''அவாளுக்குக் குடுங்கோ, எனக்கு எதுவும் வேண்டாம்.''

''அவாளுக்கும் வச்சிருக்கேன்''மாலதியின் குரலில் ஏளனம் தொனித்தது. மனதினுள் ''அவர்களுக்கு ஒரு மாபெரும் அதிர்ச்சி'' என்று மட்டும் சொல்லிக் கொண்டாள்.

பிரபல பத்திரிகைகளில் அவளது மரணச்செய்தி வெளிவரும் கொட்டை எழுத்துக்களில்.

பிரபல இசைக் குயில் மறைவு. இளம் வயதில் பாடகி மாலதிசரவணன் புற்றுநோயால் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. சமீப காலமாக அவர் ஓய்வெடுத்துக் கொண்டு சிகிச்சை பெற்று வருவதும் தெரிந்ததே. இன்று காலை அவர் மரணமடைந்தார். அவரது இழப்பு சங்கீத உலகிற்கு ஒரு மாபெரும் இழப்பாகும்....

பலவாறு செய்திகள் வரும். மாலதியின் இரக்கமான குணம். அவள் வாரி வழங்கிய நன்கொடைகள்! அவளை வர்ணித்து வர்ணித்து எழுதுவார்கள். நன்கொடை பெற்ற ஸ்தாபனங்கள் அவளைப் பற்றிப் பலப்பல எழுதும். கர்ணனைப் போன்ற பெண் உருவம் என்று கூறும். ஆனால் அவளது உறவு என்று உரிமை கொண்டாடியவர்கள்... மாலதி சிரித்துக்கொண்டாள்.

''மகாபாவி, கஞ்சத்தனம், எல்லாத்தையும் வாரி வாரி தான தருமத்திற்கு விட்டிருக்கா. ஒரு ஊசி முனை தருமம். சொந்த பந்தம் வாழ விட்டாளா? சமயற்காரிமேலே இருக்கிற அக்கறை நம்மகிட்டே இல்லியே'' என்று சபிப்பார்கள். சபிக்கட்டும். பாவம் செய்தவர்கள் வசைபாடும் போது தான் புண்ணியம் கிடைக்குமாம்!

மாலதி மிக அமைதியாக உறங்க முயன்றாள். இனி அந்த நீண்ட உறக்கம் அவளை அணைத்துக் கொள்ளும்போது, ஜானம்மா என்ற ஏழைத்தாயின் அன்புப் பிடியிலே, அந்தத் தாயின் மடியிலே துயில் கொள்வாள்.

முற்றும்

41261
6220950